உ

கணபதிதுணை:

வித்யாபாநு.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"—(திருக்குறள்)

தொகுதி-௰.	காளயுக்தி௵ ஆனி ஆடி௴	பகுதி-௬-௭
Vol—X.	JULY & AUGUST-1918.	No. 6—7

ஸ்ரீ:

கல்வியின் நோக்கங்களும் அவற்றை நிறைவேற்றலும்.

உலகத்தில், மனிதசக்தியைப் பலப்படுத்துவதில் முதன்மைபெற்றுள்ள மனம் வாக்கு காயங்களாகிற முக்கரணங்களையும் ஆத்மமுன்னேற்றவழிகளாகிய நன்மார்க்கங்களிற் செலுத்தவும், துன்மார்க்கங்களிற் செல்லவொட்டாமற் றடுக்கவும், இயற்கைக்கு ஒத்த கர்மங்களிற்புகுந்து புகழடையவும், செய்வதற்கு கல்வியென்னும் ஒரேஸாதனந்தான் பெரியோர்களால் அனுபவமுறையிற் கண்டுபிடிக்கப்பெற்று நமக்கு அறிக்கையிடப்பெற்றிருக்கின்றது.

தமது மாணவர்களின் நல்வாழ்வைக் கோருவதற்கென்றே ஏற்படுத்தப்பெற்றுள்ள ஒவ்வொரு சர்வகலாசங்கமும், ஒவ்வொரு கல்லூரியும், மாணவர்களுடைய மனோவாக்காயங்களின் சுத்தியை அவசியமாகக்கருதியே போதனாமுறையிற் பிரவேசிக்கவேண்டும். இங்ஙனம், மாணவர்களது மனோவாக்காயங்களின் நிலைக்கேற்பத் தகுதி

யறிந்து போதனமுறை கொடுக்கப்பெறின், ஒவ்வொரு மாணவனும் உலகில் புகழ்நிறுவி வாழ்வானென்பதில் யாதொருதடையுமிராதென றெண்ணுகின்றோம். ஒவ்வொரு குழந்தையும் உலகிலுற்பவிக்கும் போதே தனது பூர்வஜன்ம வாஸனையுடன் தனது மாதா பிதாக்க ளுடைய குணலேசங்களையும் பெற்றுக்கொண்டே பிறந்து அவ்வவ் வாஸனைகட்கேற்ற குணங்களிலேயே நின்று உலகக்கூட்டுறவில் பழகி வருகின்றது. கல்வியானது இப்பிறப்பில், அக்குழந்தையின் நிலை மையைச் சீர்திருத்தஞ் செய்யவும், அதனால் மறுபிறப்பை உயர்த்த வும் ஸாதனமாக நிற்கின்றது.

குழந்தையினது வாழ்நாட்களின் முதலைந்து வருடங்கள், அத னைப் பெற்றோர்களிடத்திலேயே ஒப்புவிக்கப் பெற்றிருக்கின்றன. இக் காலங்களில் அதனை நன்னடக்கையிற் செலுத்திவர அவர்களே முற் றிலும் பாத்தியப்பட்டவர்களாகின்றார்கள். குழந்தையின் எதிர்கால க்ஷேமத்தைக்கோரும் பெற்றோர்கள், தமது வழக்கவொழுக்கங் களில் மிகவும் கவனம்வைத்து, மறந்தேனும் தீயவாஸனைகளிற் புத்தி யைச்செலுத்தாது, உலகக்கூட்டுறவில் ஒழுகிவரவேண்டுவது இன்றி யமையாததாக இருக்கின்றது. இதுவே மனிதப்பிறவியின் அவசிய மானசெயல். இதுவே பகுத்தறிவின் பிரயோஜனமு மாகும். இதுவே ஆத்மமுன்னேற்றத்துக்குச் சரியானவழியைக் காட்டுகின் றது. குழந்தையின் இந்தபால்யகாலமே நல்லறிவுச் சுடர்கொளுத் தும் ஒரு நல் லகலாக இருக்கின்றது. இந்தநல்லகலில் பெற்றோர் களின் பழக்கவழக்க ஒழுக்கங்களும் உபதேசங்களுமாகிய நெய் பெய் யப்பெற்று, உலகக்கூட்டுறவின்பமாகிய சுடர் அக்குழந்தையின் நல் வாஸனையாகிய திரியில் கொளுத்தப்பெற்றால், ஆத்ம முன்னேற்ற மாகிய ஒளி எங்கும்பிரகாசிக்கத் தலைப்படும். ஆனாலும், இக்காலங் களின் பெரும்பாகம் தாயினிடத்துத்தான் ஒப்புவிக்கப்பெற்றிருக்கின் றது. தந்தைக்கோ, குழந்தையைக் கவனிக்கும் காலம் மிகச் சிறி தாகவே யிருக்கின்றது. இந்தச் சிறுகாலத்தையும் ஒரு நல்லதந்தை தான்கவனிப்பான், அல்லாத்தந்தை அறவே மறந்திருந்து குழந்தை யைத் தனக்கு ஒரு விளையாட்டுப்பொருளாகவேமதித்துக் கழிப்பான்

ஆகையினுல், ஒரு குழந்தையினுடைய நற்கல்வியானது, அதனது தாயினிடத்திருந்து முதலில் ஆரம்பிக்கப்பெற்று ஆசாரியனிடத்தில் முடிவடைகின்றது. அதிகவேருேடாமல் ஆடுகோடாகி யதரிடை நிற்கும் ஒரு சிறுமுளேயைப்போன்ற இக்குழந்தையை, உலகக்கூட்டுறவில் உறுதியாக நிற்கவைக்கப்பிரயத்தனப்படும் ஒருதாயைக்காட்டிலுல், விவரந்தெரிந்த ஒரு மாணவனே நல்வழியில் நடத்தும் ஒரு ஆசாரியனே மேலானவனென்றுசொல்ல எமதுமனம் துணிவுகொள்ளவில்லே. ஆகையினுல் கூட்டப்படிப்பிலும் வீட்டுப்படிப்பே ஒரு மாணவனுக்கு அவசியமான அஸ்திவாரமாகின்றது. எனவே, ஒரு நற்ருயானவள் கல்வியும் கருணேயும் கற்பும் பொறுப்பும் நற்குணமும் நற்செய்கையும் உடையவளாக இருக்கவேண்டுவது அவசியமாகின்றது.

தாய்ப்பழக்கமாகிற வீட்டுப்படிப்பில் நன்ருக விளேந்துவாராத மாணவன், கூட்டப்படிப்பில் கோடிகாலம் கூடிப்பயிலினும் குணமடையான். ஆகையினுல் தாயானவள், குழந்தையின் அறிவுவளர்ச்சியையும் அவன் ஆசைசெல்லும் போக்கினேயும் நன்ருகக்கவனித்து அவனது ஆத்மமுன்னேற்றத்துக்குத் தக்க உத்தமமார்க்கத்தில் செல்லவிடவேண்டும், அப்போதுதான் இவள் பெற்றுவளர்த்ததன் பெரும்பயனேப்பெறுவாள்.

> " ஈன்றபொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனேச்
> சான்ருே னெனக்கேட்ட தாய் "

என்னும் திருவாக்குக்கிணங்க, இருபேரும் நற்பேறுபெற்றவராவார் இந்தத் தொட்டிற்பழக்கம் கெட்டிடப்பெறின், மற்றெவ்வகையான முட்டிற்பழக்கங்களும் கட்டில்லனவாம்.

நம்மில் ஒவ்வொருவரும் உலகத்துக்கு எவ்வளவேனும் ஒரு நல்லகாரியத்தைச் செய்வதற்குச் சக்தியுள்ளவராகவே இருக்கிருேமெனினும், நமது பூர்வவாஸனேயும் கெட்டிருந்து இப்போதும் சிறுகாலேயிலேயே திருந்தப்பெருமலு மிருந்தோமானுல், உலகத்துக்கு

ஒரு நற்பயனையும் தாரா திருப்பதுடன், ஒவ்வொருகால் தீவினையை யுண்டாக்கவும் ஆளாய்விடுகிறோம். ஆகையினால் மாணவனது வாழ் வின்பயனெல்லாம் அன்னையிடத்தும் ஆசானிடத்துமே இருக்கின் றன. இவரால் திருத்தப்பெறாமல், மாணவரில் ஒவ்வொருவரே தமது நல்லவாஸனையைத் துணைக்கொண்டு திருந்திவரப் பார்க்கிறோம். இது பொதுவியல்பாகாது. இயற்கையான நற்குணங்களை ஒருவன் பெற்றிருக்கலாம்; அவைகள் வெளிவந்து பிரகாசிக்கவேண்டுமானால், அன்னையோ ஆசானோ மன்னவரோ மாதவரோ தூண்டிவிடவேண்டி யது அவசியமாயிருக்கிறது. இந்தவகையான தூண்டுகோலில்லா விடின், இவனது நற்குணங்கள் பெரும்பாலும் வெளிவந்து பிரகாசிக்க இயல்வதில்லை. அந்த நற்குணலேசங்கள் கல்வியொன்றினாலேயே வளர்க்கப்பெற்றும் திருத்தப்பெற்றும் வெளிவந்தனவானால், அவற் றையுடைய மாணவன் தனக்கும் தரணிக்கும் நன்மையே செய்ய முயல்வான்.

சர்வகலா சங்கத்தாரும் கல்லூரிகளின் போதகாசிரியர்களும், நன்கு கவனம் செலுத்தித் தம் மாணவர்களது இயற்கையான நல்ல வாஸனைகளித்தன்மையவெனத் தெளிந்து, அவற்றுக்கேற்ப அன்னவ ரது மனோவாக்காயங்களை நடத்திப்போக வேண்டியவர்களாக இருக் கிறார்கள். அப்போதுதான் அவர்கள் தங்கருமமாகிய தவஞ்செய்தார் ஆவார்கள்; அல்லாவிடில் அவஞ்செய்தா ராவார்கள். இந்தமுறை யிற்பழக்கப்பெற்றுக் கற்பிக்கப்பெற்ற மாணவர், திருப்தி, அமைதி, தீர்க்காலோசனை, ஆழ்ந்தகல்வி, அகன்றபுத்தி இவற்றையுடையவர்க ளாகவளர்ந்து, தன்மறுப்பும் தன்பொறுப்பும் அறிந்தவர்களாகத் தேர்ந்து, பராக்கிரமத்திலும் பரோபகாரத்திலும் உத்ஸாகத்துடன் நின்று, புறங்கடைநல்லிசையும் நாட்டுவார்கள். இவரே குணமென் னும் குன்றேறிநின்றவராவார். இவரை உலகம் எக்காலத்தும் அறிந் துய்யும். நல்வாசனையைப் பெறாத மாணவரும், அன்னை ஆசானாகிய இவர்களால் திருத்தமடைவதும் உண்டு; ஆனால் அவ்வன்னையும் அவ் வாசானும், இவர்விஷயத்தில் அதிககவனம்செலுத்திப் பாடுபட்டு இவரது இயற்கையறிந்து, காலமும் வினையும்பார்த்துத் திருத்தவேண்

டும். ஒவ்வொருவரது உள்ளக்கிடக்கையையும் முகம் நன்குகக் காட்டிவிடுமன்றோ? அன்றியும் அவரவரது கருமமே அவரவரது தருமத்தைக்காட்டுஞ் சாணைக்கல்லன்றோ?

“ அடுத்ததுகாட்டும் பளிங்குபோனெஞ்சங்
கடுத்ததுகாட்டும் முகம் ”
“ பெருமைக்கு மேனைச்சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக்கல் ”
என்பன வேதவாக்கியங்களல்லவோ?

இவ்விதமாகப் பெற்றோரும் போதகரும், குழந்தைகளின் பூர்வ வாஸனை சுபாவம் இவற்றைநன்கறிந்து, ஏற்ற நற்பழக்கங்களையும் நல்லொழுக்கங்களையும் காட்டி நன்னெறியிற் செலுத்தினர்களாயின், பொருளும் காலமும் ஊக்கமும் உயர்வும் வீணுக்கப் பெறாதனவாகி நற்பயனையே தரும்.

மனிதனுடைய வாழ்நாட்களின் ஒவ்வொரு விநாடியும் விலையுயர்ந்ததேயாகும். ஒருவிநாடியாவது வீணுகக் கழிக்கப்பெறல் கூடாது. ஏனெனில் நன்னெறியிலுய்க்கப்பெறாத ஒருபேதை; தான் அவசியம் கற்கவேண்டியவற்றைக் கற்றுக்கொள்ளாதவனுகவும், தனது செற்சொற்காலத்திற் பிறரையும் கற்கவிடாதவனுகவும் ஆய்விடுகின்றான்.

மனிதனொருவனே கூட்டுறவிற் பழகற்குரியவனுகின்றான். மனிதனொருவனே ஜனசாரநன்மைதெரிந்த விவேகி. மனிதனொருவனே உண்டிக்கும் உறக்கத்துக்கும் ஒடியலையும் இந்த வாழ்நாளைப் பயன்பெற்ற தாக்கி ஆத்மமுன்னேற்றப்படியி லடிவைக்கும் ஆற்றலுள்ளவன், மனிதனொருவனே கூட்டங்கூட்டியக் கூட்டத்தில் நாட்டம்பெற்று நன்மையைப் போதிக்கவல்லவன். இவன் தனது வாழ்நாளை வீழ்நாளாகக் கிடத்திவிட்டானுயின், உலகம் முன்னேற்றமடைய வழியிராது. அதாவது தானும் வழிப்படான், தரணியையும் வழியில் விடான்.

தற்போது உலகமானது, ஒரு புதுமையான மார்க்கத்தில் பிரவேசித்து, உழைத்துக்கொண்டுவருகின்றது. மனிதப்பிரயத்தனத்தின் ஒவ்வொருபாகமும் புதுப்பிக்கப்பெற்றுவருகின்றது. கார்ய நிர்வாஹங்களின் நெருக்கடியான நிலைமையும், வாழ்நாளின் அதிகச்செலவும், ஜனங்களின் லௌகிக பாரலௌகிக யுத்தங்களும், படித்தறிந்தவராகத்திரிபவரின் திருப்தியின்மையுமாகிய வெல்லாங்கூடி உலகத்தையே ஒருபுதுமையானபாதையில் செலுத்திவிடும் என்று ஊஹிக்க இடமிருக்கின்றது. இந்தச்சமயத்தில் மாணவர்களைத் தக்கவழியில் அவரவர் இயற்கைக்கு ஏற்றபடியாகப் பக்குவப்படுத்திவிடாமல், வீணேகாலத்தைக் கடத்தினேமாயின், தேசமெல்லாம் நாசமாகிவிடும்.

மனிதனுடைய வாழ்நாளின் ஒவ்வொரு நிமிஷமும் மிக்க விலையுயர்ந்ததாகவே இருக்கிறது. அவன் அதைச்சரியான வழியில் செலவு செய்யாதிருப்பானுயின், தனக்கும் தன்தேசத்துக்கும் மிருதியும் கஷ்டத்தையும் நஷ்டத்தையும் தேடிவைத்தவனுகின்றான். எப்படியெனில், முதன்முதலாகத், தன் படிப்புக்குரிய காலங்களில் தான் அவசியம் படிக்கவேண்டியவற்றைப்படிக்காமல் வீணுக்கினவன் ஆகின்றான். இரண்டாவது, இவனல் ஏதாகிலும் ஒருவிதமானநன்மையை எதிர்பார்த்திருந்து இவனையே சார்ந்திருந்தவர்களாகிய உற்றார் மற்றூர்களை உதவியற்றவர்களாக ஆக்கி விடுகின்றான். மனிதன் என்பான் உலகக்கூட்டுறவுமுறையில் உலாவிவரக்கூடிய ஒரு பிராணியாக இருக்கின்றான். ஆகையினுல், இவன் தனது வாழ்நாட்காலங்களில் தனது தேஹபோஷணை ஆத்மபோஷணைக்கு வேண்டியவற்றைத் தேடிக்கொள்ள வேண்டியதுடன், தன்னைப்பற்றியுள்ள உற்றார் மற்றூர்களது தேஹபோஷணை ஆத்மபோஷணைகளைக்கவனிக்கவேண்டியவனுகவும் இருக்கின்றான். இவன் தனது காலத்தை வீணேகழித்துவந்தானுனல், இருவிதத்திலும் தீங்கு இழைத்தவனுகின்றான். ஆ, இக்கடமை ஒரு சர்வகலாசங்கத்தாருக்கும் ஒரு உபாத்தியாயனுக்கும் ஒருபிதாவுக்கும் உரியகடைமையாக இருக்கின்றது. ஏனெனில், இவர்களே ஒருமாணவனை மனிதன் ஆக்கும் துறையில் நிற்கின்றவர்கள். மாணவன் தன்னறிவு பெருகிவராதசமயத்தில், அவனைத் தூண்டுபவர்கள் இவர்களாகவே இருக்கின்றூர்கள் என்ற இவ்விஷயங்கள் பன்முறையிலும் தெரிவிக்கப் பெற்றிருக்கின்றன. உலகம் புதுமாதிரியான பாதையில் சீர்திருந்திவரும் இச்சமயத்தில் வாளாயிருத்தல் வகையன்று; வசையேயாகும்.

மேலேசொல்லப்பெற்ற விஷயங்களைச் சீர்திருத்திக்கொண்டுவருகிறதற்கானதொரு தக்ககருவியானது உத்தமக்கல்விமுறையேயாகும்

ஏனெனில், அதன்கொள்கைகள் ஒரு தேச இயற்கைக்கு மாறுபட்டிருந்தால், அத்தேசத்து ஒவ்வொரு மாணவனும், தனது தக்கபருவத்தில் தக்க இடத்தில் வைக்கப்பெறுதனவாகின்றான். உத்தமக் கல்வியானது, ஒருதேசத்தில் அத்தேசத்து மாணவனொருவனைத் தக்க இடத்தில் சேர்ப்பித்து தேசத்துக்கு வேண்டிய உதவிகளை அவனால் அவனது இயற்கைக்கு வற்றவண்ணம் அவனிடமிருந்து பெறும்படியாகச்செய்து, அவனையும் அவனது தேசத்தினையும் உதவியுள்ளவனாகவும் உதவிபெற்றதாகவும் ஆக்குகின்றது. அத்தகைய உத்தமக்கல்வியை யவசியம் தேடிக்கொடுக்கும் காலம் இப்போது ஏற்பட்டிருக்கின்றது. இந்தக்காலத்தில் சர்வகலாசங்கத்தாரும் உபாத்தியாயரும் பிதாக்களும் தூங்கிக்கொண்டிருக்கப்படாது.

தேஹதத்துவசாஸ்திரிகள்.

தேஹவளர்ச்சிக்கும் தேஹம் நோயில்லாமல் வாழ்ந்தேறுவதற்கும் அத் தேஹத்தின் ஸ்திதிக்கு ஏற்ற உணவே கொடுக்கப்படவேண்டுமென்று வற்புறுத்துதல் தகுதியேயன்றோ? அங்ஙனமே மனோதத்துவசாஸ்திரமும் ஒருவனது மனோவ்ருத்திக்கும் அவனது மனோபக்குவத்துக்கும் ஏற்ற கல்வியுணவே கொடுக்கப்பெறல் வேண்டுமென்று முறையிடுகின்றது. பொருத்தமில்லாத உணவானது தேஹத்தைக் கெடுப்பது உண்மைபோலவே பொருத்தமில்லாத உணர்வும் மனதைக் கெடுத்துவிடுமன்றோ? மனதே மனிதனையாக்குகின்றது என்பது யாவரும் ஒப்பமுடிந்ததொரு உண்மைவிஷயமாகும். இபற்கைக்கு விரோதமான உணவும் உணர்வும் சுத்த தேஹத்தினாலும் சுத்தமனத்தினாலும் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா. வற்புறுத்தியேனும் கொடுக்கப்பெறின் அவை அவசியம் தீங்கையளித்தே தீரும்.

மனது இருந்து அரசாட்சிசெய்யக்கூடிய இடமான மனிதனுடைய மூளைப்பாகமானது பலவிதமான தொழிற்பிரிவுகளையுடையதாக இருக்கின்றதென்பது தேஹதத்துவத்தை யூன்றியுணர்ந்த பெரியோர்களது கொள்கையாகும். மனதானது அம்மூளையின் ஒவ்வொரு தொழிலிலும் நுழைந்து உழைப்பதற்கு அதிகாரமுடையதாக இருக்கின்றது. ஆனால், புதிதானதொழிலை யாரம்பிக்கும்போது மிகுந்த கஷ்டத்தையும் பழகிய தொழிலை ஏற்றுக்கொள்ளும்போது தகுந்த இஷ்டத்தையும் அடைகின்றது. இந்தப் பழக்க வழக்கங்களை யனு

சரித்து மனதைப் பழக்கவேண்டும். இது உத்தமக் கல்வியினது முறையேயாகும். மாணவர்கட்கு மனோதத்வத்தை யுணர்த்துங்காலங்களில் தேஹதத்வத்தின் ஒருபிரிவான மூளையைப்பற்றிய உண்மைகளையும் உணர்த்தவேண்டுவதும் அவசியமேயாகும். அப்போது ஒவ்வொருமாணவனும் தனதுமனோபக்குவத்தையறிந்து உழைக்க முன்வரலாகும். அவ்வமயம் அநேகமாக எல்லாமாணவர்களும் உபயோகிகளாகவே திருந்திவருவார்கள். சுபாவத்தையொட்டியே தொழில்களையாரம்பித்தல, ஜீவராசிகளிடத்தில் அநுதாபம், பரோபகாரச்செயல்களில் ஆயத்தத்துடனிருத்தல், இவைகளே உத்தமக் கல்வியின் நோக்கங்கள்.

மாணவர்கள், தமது இயற்கைக்குணத்தையொளிக்காமல் மனோவாக்காயங்களினால் உழைக்க முன்வரப்பழகவேண்டும். அவ்வியற்கையும் பெரியோர்களின் சேர்க்கையாலும் உபதேசங்களாலும் முறையே சீர்திருத்தமடையலாகும். மனோபக்குவத்திற் தேற்றபடியே இயற்கையும் மாறுபடுமாகையால், சேர்க்கையைத் தகுந்தபடியாராய்ந்தே சேரும்படிசெய்யவேண்டும். இது சர்வகலா சங்கத்தாருக்கும் உபாத்தியாயருக்கும் பிதாவுக்கும் தலைப்பொறுப்பான காரியமாகும்.

உபாத்தியாயர் மாணவனிடத்தில் மிகுந்த அநுதாபம் காட்டிப் போதிக்கவேண்டுவது அவசியமாகும். மாணவனும் தன்னைப்பற்றி உபாத்தியாயர் எடுத்துக்கொள்ளும் சிரமத்தையுணர்ந்து, அவரது மனம் களிக்கும்படியாகத் தானும் நன்றாகப்படித்து நல்லசேர்க்கை பெற்றுச் சீர்திருந்திவரவேண்டும். இந்தமுறையில் உபாத்தியாயனும் மாணவனும் ஒரு தாயும் குழந்தையும் போன்ற உறவினர்களாகப் பழகுதல்வேண்டும்.

இருவர்க்கும் விருப்புநீங்கி வெறுப்புக்குடிபுகும் தருணம் வாய்த்ததெனின், அவர் தமது உறவை நீக்கிக்கொள்ளுதலேதகுதியாகும்.

குழந்தைகளே, இனிவரும் தேசாபிமானிகளாதலால், அவர்களைச்சீர்திருத்துவதில் எடுத்துக்கொள்ளவேண்டிய கவலையைக்காட்டிலும், ஒருபிதா வேறேயொன்றில் அதிகக் கவலையெடுத்துக்கொள்ள வேண்டாதவராகிறார். ஆகையால் ஒரு மாணவனைத் தேசாபிமானியாக்குவது கல்விச்சங்கத்தாருக்கும் உபாத்தியாயருக்கும் பிதாவுக்குமே யுரியகடமையென்னலாம்.

பத்திராதிபர்.

ஸ்ரீ:

இந்து சக்தி.

ஐரோப்பாவிலுங்கூடப் பதினாறு பதினேழாம் நூற்றாண்டுகளிற் பரிகாரிகளே ரண சிகித்ஸகராக இருந்தனர் பதினெட்டாவது நூற்றாண்டிலும் ஆங்கில ஜனங்கள், தங்களது அரசனுக்கு ஹஸ்தவிசேஷமுண்டென்றும், அந்த விசேஷம் சகலவிதமான ரோகங்களையும் நீக்குமென்றும் எண்ணியிருந்தார்கள். வியாதிகளாற் பீடிக்கப்பட்ட பல ஜனங்களும் ராஜஹஸ்தஸ்பரிசம் வேண்டுமென்று அடிக்கடி ராஜாங்கத்திற்கு மனுப்பண்ணிக்கொண்டிருந்தார்கள். இன்றைக்குங்கூட ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் கிறிஸ்தவர்கள் தங்கள் குருமார்களால் தங்களது ஸகலவிதமான பாவங்களும் கழிக்கப்படுகின்றனவென்று நம்பியிருக்கிறார்கள். ஆனால், ஒரு ஹிந்துவானவன் இத்தகைய நம்பிக்கைகளைக் கொண்டுள்ளவனென்று சொல்லும்போதே பரிகசிக்கப்படுகின்றான்; என்றாலும் ஹிந்துக்களுக்கு இது ஒரு உத்தம தருமமாகவே குறிக்கப்படல் வேண்டும். தமது முன்னோர் சென்ற நல்லவழியிலேயே தாங்களுஞ் செல்லவேண்டுமென்பது ஒரு திருத்தமும் அழுத்தமும் பொருத்தமுமான திவ்ய சக்தி ஒரு ஐரோப்பியனாவது அமெரிக்கனாவது தனது முன்னோரின் பூர்வசரித்திரத்தையும் தற்கால சரித்திரத்தையும் மிகுந்த நம்பிக்கையுடன் படித்து ஆராய்ச்சி செய்து, ஹிந்து பூர்வசரித்திரத்தையும் ஒரு ஹிந்துவையும் பார்த்தானானால், தான் செய்துவருவது முழுதும் நிந்தையான காரியமென்றே எண்ணுவானென்பதில் தடையுண்டோ? ஆனால் அப்படி ஆராய்ச்சிசெய்யப்புகுமவன் தக்க கிறிஸ்தவனாகவும் கிறிஸ்து மதப்பிரியனாகவும் கிறிஸ்துவை நம்பினவனாகவும் இருத்தல்வேண்டும். அன்றியும் இந்து சக்தியானது, ஸ்வர்க்க நரகம், ஆத்மா அநாத்மா, தெய்வீகம் முதலியவற்றையே நம்பி, அவற்றையே எவ்வகை நூல்களிலும் வற்புறுத்திச்சொல்லும் ஒரு சக்திதான் என்றுமட்டும் சில மேனாட்டு நிபுணர்களால் எண்ணப்படுகின்றது. அவர்களுடைய

ஹிந்துசரித்திர முகவுரைப்படிப்பே அப்படி நினைக்கச் செய்தது என்று எண்ணுகிறேன். ஹிந்து சக்தியானது நாகரிக முன்னேற்றத்தை யநுசரித்தே பற்பல பிரிவான ஆராய்ச்சிகளிலும் புகுந்து நின்று நிலவி உலவி வந்திருக்கின்றது என்று உறுதியாகச் சொல்லலாம்.

ஹிந்துசக்தியானது, அதலலோகப்பொருள்களிலிருந்து துருவ சக்கிரம் வரையும் அதற்கப்புறமும் ஆராய்ந்து அநுபவித்திருக்கிறது. ஹிந்து சக்தியால் விவரிக்கப்பெற்ற ஹிந்து சாஸ்திரமும் ஹிந்து தொழிலுமே உலகில் இருபாலாராலும் அறியப்பெறவேண்டிய ஆராய்ச்சிகளாகும். ஹிந்துக்கள், சுத்தமான கணித சாஸ்திரத்தைக் கண்டுபிடித்து எழுதிவைத்திருக்கிறார்கள். இவர்களுடைய பீஜ கணிதம் கிரேக்கர்களுடைய பீஜகணிதத்துக்கு எத்தனையோ காலங்கள் முந்தினதாக இருக்கிறது. இப்போதிருக்கும் கணித சாஸ்திரமே, ஹிந்து கணிதத்தை யடிப்படையாகக்கொண்டுதான் நின்று நிலவுகிறது. தேகதத்வம் பிரகிருதிதத்வம் கர்ப்பதத்வம் ஆகிய ஆராய்ச்சிகளில் ஹிந்துசக்தி புகுந்து நீண்ட ஆராய்ச்சிசெய்து உலக உபகாரமாக எத்தனையோ விஷயங்களைத் தனித்தனி நூல்களாகவும் இதிஹாஸபுராணங்களில் தத்வ விஷயங்களாகவும் எழுதியிருக்கின்றது. ஆயுர்வேதபண்டிதர்களும் ஏனைய வைத்தியர்களும் தாது சாஸ்திரங்களில் நன்றாகப் பாண்டித்யம்பெற்று ரஸம் அப்ரகம் கந்தகமாதிப்பொருள்களின் பற்பலவிதமான பிரயோகங்களை உலகத்திற்குக் காட்டி, கிரந்தரூபமாகவும் எழுதியிருக்கிறார்கள். இத்தகைய ஆராய்ச்சிகளெல்லாம் சுமார் ஆயிரமாண்டுகட்கு முன்னமே வெளிப்பட்டனவென்றும் கணிக்கப்படுகின்றன.

அன்றியும் அரசாங்கமுறை நகரபரிபாலனமுறை நிலவரி ஜனஸங்கியை நியாயவிசாரணை ரணரங்கம் முதலிய லௌகிக தர்மங்களிலும் நல்லதேர்ச்சி பெற்றவுண்மை புஸ்தக ரூபமாகவே பரிணமித்திருக்கின்றது. சித்திரம் சிற்பம் நூலாராய்ச்சி நாடகம் நாட்டியம் அபிநயம் கீதம் வேளாண்டொழில் கப்பற்றொழில் நகர நிர்மாணம்

205

இவற்றிலும் ஹிந்துசக்தி பழகியுள்ள தன்மையை இதிஹாஸபுராணங்களும் தனித்தனி நூல்களும் விவரிக்கின்றனவன்றோ?

பீஜகணிதம் அங்ககணிதம் ஜோதிர்கணிதம் ஆயுர்கணிதம் தாதுசாஸ்திரம் ஔஷத சாஸ்திரம் ரணசிகித்ஸை முதலிய ஹிந்து சாஸ்திரங்கள் ஹிந்துக்கட்கு மாத்திரம் பயனளித்துக்கொண்டே இருக்கவில்லை. அவைகள் சீனபாஷையில் முதன் முதலில் மொழிபெயர்க்கப்பெற்றும் பிறகு ஜப்பானியபாஷை அசீரியபாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பெற்று கிழக்காசியா மேற்காசியா முதலிய பிரதேசங்களிலும் பரவியிருக்கிறது. மத்தியகாலங்களில் மகம்மதியர்கள் இவற்றைக் கிறிஸ்தவர்கட்குக் கற்றுக்கொடுத்து ஐரோப்பாவிலும் பரவச்செய்துவிட்டனர். தசாம்ச பின்னங்களும் தாது தத்வங்களும், இன்றைக்கும் ஐரோப்பாக்கண்டத்தில், ஹிந்துசாஸ்திரங்களை அடிப்படையாகக்கொண்டே நிலவிவருகின்றன.

சங்கீதவித்தை இந்தியா ஐரோப்பாவாகிய இரண்டிடங்களிலும் மத்தியகாலம்வரை ஒருபடித்தாகவே இருந்துவந்தன. பதினெழாம் நூற்றாண்டுமுதலே மாற்றமடைந்திருக்கிறது. ஹிந்து சித்ர வித்யா சாஸ்திரங்களே சீனர்க்குச் சித்திரவித்தையிலும் சித்திர ஆராய்ச்சிகளிலும் ஊக்கத்தைச் செலுத்தச்செய்து அந்தவித்தையிற் சிறப்படையும்படியாகச் செய்திருக்கின்றன. இன்றைக்கும் ஐரோப்பியரும் அமெரிக்கரும் சீனதேசத்துச் சித்திரவித்தையை மேன்மைப்படுத்திச் சொல்வதெல்லாம் ஹிந்து சித்ர ஸூக்ஷ்மங்களைக்கொண்டன்றோ?

ஹிந்துசக்தியின் பூகோள தத்வவுணர்ச்சியானது ஆசியாகண்டமுழுதுமே பரவியிருக்கிறதென்று சொல்லலாம். இந்த வுணர்ச்சியின்பயனாகவே இன்றும் ஜப்பான் தேசத்தில் பூகோளசாஸ்திரவாராய்ச்சி விசித்தேறிக்கொண்டு வருகின்றது. ஜப்பானிய போர்வீரர்கட்கு நல்லொழுக்கத்தைப் புகட்டிக்கொண்டு வருவது ஹிந்து நினைவேயன்றி வேறன்று. ஜப்பானில் ஸத்காலத்தில் எழுதப்பெற்றிருக்கும் கேன்பியூஷனிய மதத்துசாஸ்திரங்களிலும் சீனத்திலுள்ள டாவோ மதத்து ரஹஸ்ய சாஸ்திரங்களிலும் ஜப்பானிய நாஸ்திக

வாதிகளது ஆதாரங்களிலும் இந்த உண்மை பார்க்கக்காணலாகும். இந்த ஹிந்து தத்வ வுணர்ச்சியே பாரஸீகக்கிரேக்களது ஸெவெஸ்டிக் உப தேசங்களிலும் சியம் இந்து சீனம் முதலிய தேசங்களிலுள்ள பௌத்ததத்வங்களிலும் புகுந்து அந்தந்த மதங்களையும் மத வுண்மைகளையும் மதப்பற்றுடையவர்களையும் ஒழுங்குபடுத்திக்கொண்டிருக்கிறது. மங்கோலியா ஸைபீரியா முதலிய மத்திய ஆசியநாடுகளிலும் தென் சமுத்திரத்தீவுகளிலும் இந்து சமுத்திரத்தில் பிலிப்பைன் தீவுகளிலிருந்து ஆப்பிரிக்காக்கரையோரமாகவுள்ள மடகாஸ்கர் தீவு வரையிலும் இந்த சக்தியே பரவியிருக்கின்றது. இதனை அங்குள்ள வழக்க ஒழுக்கங்களாலும் சித்திர சிற்பங்களாலும் கல்வெட்டு கற்சிலைகளாலும் நன்கு அறியலாகும்.

இவைகளெல்லாம் இற்றைக்காலத்தில் வெறுங்கதைகளாக இருக்கின்றனவென்று சொல்லப்படுமானாலும், பல்லாண்டுகளாகவே அமைந்துள்ள மேற்சொல்லிவந்த சாக்ஷிகளை யாராலும் அழிக்க முடியாதன்றோ? ஆகக் கிறிஸ்துபிறக்க நானூறு ஆண்டுகட்கு முன்னர் முதல் சுமார் ஆயிரத்தைஞ்ஞூறு வருஷகாலங்களாக இந்தியாவானது வியாபார முறையில் பல தேசங்களுடன் உறவாடிக் கொண்டிருந்ததென்பது சாக்ஷிகளால் வெளியாகிறது. இதனால் இந்தியாவானது ஆசியப்பிரதேசத்துக்கு உள்ளமும் உணர்வுமாகவே இருந்து வந்தது என்பதற்கு யாதும் சந்தேகமில்லை.

எகிப்து தேசத்திற்கு இந்தியக்கப்பல் மஸ்லின் துணிகளையும் அவுரிச்சாயத்தையும், சிரியதேசத்துக் குருமார்கட்கு ஆபரணங்களையும் கொண்டு இறக்கினவென்பது வெறுங்கதையன்றே? சரித்திரங்களல்லவோ முறையிடுகின்றன! ஹிந்து வியாபாரிகள் பேபிலோன் தேசத்திலும் நியூபார்க் தேசத்திலும் சென்று குடியேறியிருந்தனரென்பதற்குத் தக்கசான்றுகள் அகப்பட்டிருக்கின்றனவே!

ஜனசுயேச்சையென்பது அக்காலங்களில் இந்தியாவைக்காட்டிலும் மேல் நாடுகளில் அத்தனை அதிகப்பட்டிருந்ததாகக் காணப்பெற

வில்லை. இந்தியாவைத் தவிர்த்து உலகத்தில் வேறெந்தப்பக்கங்களிலும் பெண்கட்குச் சுதந்திரம் கொடுத்திருந்ததாகத் தெரியவேயில்லை. சர்வகலாசங்கமென்பது அக்காலங்களில் உலகத்தில் எந்த இடத்திலும் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததாகச் சரித்திரங்கள் குறிக்கின்றனவில்லை ஆயினும், இந்தியாவிற் சிற்சில இடங்களில் இருந்ததாகத் தெரியவருகிறது. தொழின்முறைகளும் சிற்சில இடங்களுக்குள்ளேயே அடங்கிக்கிடந்தன. ஏனெனில், ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு கிராமத்திற்குள்ளே தானே சுருங்கிக்கிடந்தது. வேறெந்தக் கிராமத்திலும் விசேஷமாகப் பரவியிருந்ததாகப் புலப்படவில்லை. நாகரிகமென்பது விசேஷமாக உள்நாட்டு நகரவாஸத்தையே குறித்துக்கொண்டிருந்தது.

இந்தியர்க்குப்பொதுஜன நன்மைகளில் ஊக்கமே யில்லையென்றும் அவ்விஷயத்திற் சிறு பழக்கமும் இவர் பெற்றிருக்கவில்லையென்றும் கூறிவருகிறார்கள். இது வல்லான்வகுத்தவம்பாக இருக்கின்றதேயன்றி உண்மையாக இருக்கவில்லை. ஏனெனில், இந்தியருள் இருபாலாருமே தக்க வீரர்களாகவும் ராஜ்யப்பயிற்சியுள்ளவர்களாகவும் இருந்து பொதுஜன ஊழியங்களிற் புகுந்து உபதேசம் யுத்தம் வியாபாரம் முதலியவற்றை ஒழுங்குபடுத்தியிருக்கிறார்களென்பதனை புராணங்கள் முறையிட்டுக்கொண்டிருக்கின்றன. அக்காலங்களில், யுத்தப்பயிற்சியானது க்ஷத்திரியர்க்கு மாத்திரமேயன்றி ஏனையர்க்கும் பயிற்றப்பட்டுவந்தது. இந்திய சரித்திரத்தை விடாமல் ஊக்கத்துடனும், ஆராய்ச்சியுடனும் படித்து வருவோமானால், இந்தியாவானது கல்விச்சாலை மந்திரசாலை நாட்டுக்கூட்டம் மஹாநாட்டுக்கூட்டம் ஆராய்ச்சிச்சாலை முதலிய பலவகையான அறிவுறுத்துச்சாலைகளையும் வகித்திருந்ததாக நன்றாகத் தெரிந்துகொள்ளலாம். நகரநன்மைக்காகவும் நாட்டுநன்மைக்காகவும் ஹிந்துக்கள் நகரபரிபாலனசபையையும் வைத்தியசாலைகளையும் கட்டியிருந்ததாகத் தெரிகின்றது. இவை கிறிஸ்து பிறக்க சுமார் மூன்றுநூற்றாண்டுகட்கு முன்னரே இருந்தனவாக வெளியாகின்றன. தத்வ ஆராய்ச்சி ஏனைய சாஸ்திரவாராய்ச்சிகட்கும் ஆங்காங்கு வித்வத்ஸபைகளும் ஏற்பட்டிருந்தன.

இத்தகைய ஹிந்துசக்தியானது ஒவ்வொருசாஸ்திரவகையிலும் நுழைந்து உழைத்து அனுபவித்து உதவிசெய்தற்குரிய காலம் பத்தொன்பதாவது நூற்றாண்டிலிருந்தே சுருங்கி வந்திருக்கிறதாக நன்றாகவெளியாகிறது. இதன்காரணம் நாமே ஊகித்துக்கொள்ளவேண்டியது தான். தேசம் அடிமைக்கு ஆளாகிவிடும்படி நேர்ந்துவிட்டால் அதனது முயற்சிகள் பயனடையாவென்பதற்கு வேறுகாரணங்களும் கொடுத்தல் வேண்டுமோ?

ஆக ஒரு நாடு செழிக்க அதன் அடிமைத்தனம் நீங்கவேண்டுவதே முக்யகாரணமாகும். அவ்வடிமைத்தனம் நீங்க, சுயேச்சாதிபத்தியமும் தேசியக் கல்வியுமே பிரதான காரணங்களாகும். இவ்விரண்டையுமடைய நம்மவர் நன்கு முயலவேண்டும்.

பத்திராதிபர்.

உ

சுலக்ஷணை

(௱அச-ம்-பக்கத் தொடர்ச்சி.)

வீரசிங்கம், "என் இவ்வளவு நேரங்கழித்து வந்தாய்?"

சாமுண்டி, "நேரங்கழித்தா வந்தேன்?"

வீரசிங்கம், "பத்துநிமிஷம், கூட ஆகிறது."

சாமுண்டி, "பத்து நிமிஷம் கூடக்குறைய ஆவதனாற் பாதகமில்லை."

வீரசிங்கம், "குற்றமில்லை. இனிமேலாவது காலதாமதஞ்செய்யக்கூடாது."

வீரசிங்கத்தின் தோளில் தன்கையைப் போட்டுக்கொண்டு சாமுண்டி சொல்லுகிறான், "இம்மாதிரியான காரியங்கள் எனக்குப்பிடிக்கிறதில்லை. அது உனக்குப் புதிதான இடமென்றும், வீட்டிற்குள் உன் கூட்டாளிகள் ஒருவருமில்லையென்றும் சொல்லுகிறாய்."

வீரசிங்கம், " ஆனால் வரும்படி ஏராளமாய்க் கிடைக்கும். நீ ஒருபோதும் இதிற கிடைக்கப்போகிற அளவு சம்பாதித்திருக்கமாட்டாய்."

சாமுண்டி, " அப்படியானால் சரி. உனக்குத்தைரியமா இருந்தால் நான் தடுக்கவில்லை "

வீரசிங்கம், " நீ பயப்பட்டாற் போய்விடு. நான் பயங்காளிகளுடன் சேர்ந்து ஒருகாரியமும் செய்வதில்லை. "

சாமுண்டி, " இந்தவிதமாய் நீ என்னிடத்திற் பேசாதே. நான் பயங்காளியல்ல. "

வீரசிங்கம், " அம்மட்டோடு உன் பேச்சைநிறுத்து. நான் முன்னே போகிறேன். நீ என் பின்னால்வா. "

வீரசிங்கம் விரைவாக நடந்து சென்றான். சாமுண்டி அவனைப் பின் தொடர்ந்தான். இருவருக்கும் மத்தியில் சுமார் ஐம்பதடி தூரமிருந்தது. வழியில் அவர்கள் போலீஸ்காரர்களைச் சந்திக்கவில்லை. ஏனெனில் அவ்வூர் போலீஸ்காரர்களிலனேகர் இரவில் வீட்டுத் திண்ணைகளிற் சொஸ்தமாய் நித்திரைசெய்துவிட்டுக் காலையிலெழுந்து ஸ்டேஷனுக்குச் செல்வது வழக்கம். வீரசிங்கமும் சாமுண்டியும் ஒரு வீட்டின் பின்புறத்திலிருந்த தோட்டத்தின் கதவருகில் வந்து நின்றார்கள். சற்றுநேரம் நின்றபிறகு இருவரும் தோட்டத்துச் சுவரிலேறி உள்ளே குதித்தார்கள் அங்கே நிசப்தமாயிருந்தது. புவனலயம் ஜமீந்தார் வீட்டைச்சேர்ந்த தோட்டத்திற்றான் வீரசிங்கமும் அவன் கூட்டாளியும் ஏறிக்குதித்தது.

வீரசிங்கம் தன்னுடைய பெரியபையிலிருந்து ஒரு சிறு ரம்பத்தை எடுத்தான். அது மிகவும் சிறியதாகவும் வலிமையுள்ளதாகவும் இருந்தது. வீட்டுப்பின்புறக்கதவில் தாழ்ப்பாள் இருக்கவேண்டிய இடத்தில் துளைக்கும் கருவியால் ஒரு சிறு துவாரம் செய்தான். அந்தத் துவாரத்தில் ரம்பத்தைவிட்டுக் கைநுழையும்படியாக அறுத்தான் அதற்குள் கையைவிட்டு உள்ளிருந்த தாழ்ப்பாளை இழுத்துவிட்டான்.

அர்தக்கதவிறகுக் கீழே ஒரு தாழ்ப்பாளும் மேலேயொரு தாழ்ப்பாளும் உட்புறத்தி லிருந்தன. மேலே இருந்த தாழ்ப்பாள் வீரசிங்கத்திற்கு எட்டாததனால், சாமுண்டி முழங்கால்களையும் கைகளையும் ஊன்றிக் கொண்டு நாற்காலிபோலிருந்தான். அவன் முதுகின் மேலேறிநின்று கொண்டு கீழேயிருந்த தாழ்ப்பாளைத் திறந்ததுபோல மேலிருந்த தாழ்ப்பாளை யும் வீரசிங்கம் எடுத்துவிட்டான். தாழ்ப்பாள்களிரண்டும் எடுக்கப் பட்டபோதிலும் கதவு திறக்க வரவில்லை. அது உட்புறமாய்ப் பூட்டப் பட்டிருந்தது.

பூட்டு இருக்குமிடம் தெரிவதற்காக, வீரசிங்கம் ஒரு கயிற்றில் கல்லைக்கட்டி மேலே செய்த துவாரத்திலிருந்து மெதுவாகக் கீழே விட்டான். கல்லானது பூட்டின்மேற்பட்டதும், கயிற்றை வெளியே இழுத்து அதனுடைய நீளத்தைக் கணக்குப்பண்ணி உட்பக்கம் பூட்டு இருக்குமிடத்திற்குச் சரியாய் வெளியே துவாரம் செய்து ரம்பத்தால் பூட்டைச்சுற்றி அறுத்துவிட்டான். பிறகு கதவு திறக்கப்பட்டு இரு வரும் உள்ளே நுழைந்தார்கள்.

வீட்டிற்குள் எங்கும் இருட்டா யிருந்தது. திருடர்கள் ஒரு விளக்கை ஏற்றிக்கொண்டு சமையற்கட்டில் தேட ஆரம்பித்தார்கள். வெள்ளிப்பாத்திரங்கள் அகப்படுமென்பது அவர்களுடைய முக்கிய மான நோக்கம். சமையற்கட்டில் அவை அகப்படவில்லை. அங்கே ஒரு அறை இருந்தது. அவ்வறையின் கதவை வீரசிங்கம் ஒரு சிறு கடப்பாறையால் திறந்துகொண்டு உள்ளே போனான். அறையிலும் வெள்ளிப்பாத்திரங்களில்லை. அவனுக்கு மிகவும் கோபம் வந்து விட் டது.

சாமுண்டி, “இந்த வீட்டுக்காரர்கள் மிகவும் அற்பர்கள் போ லும். பாத்திரங்களைக்கூடப் படுக்குமிடத்திற்குத் தூக்கிக்கொண்டு போயிருக்கிறார்கள். இப்பொழுது என்ன செய்கிறது?”

வீரசிங்கம், “என்ன செய்கிறது? மேலேபோய் அவர்கள் படுத் திருக்குமிடத்தில் தேடிப்பார்க்கவேண்டும். இரண்டொரு தலைகளை வெட்டவேண்டி நேர்ந்தாலும் நேரும்.”

பிறகு இருவரும் மேல்வீட்டுப்படிகளில் ஏறினார்கள். வீரசிங்கம் தன் மடியிலிருந்து இரண்டு கைத்துப்பாக்கிகளை எடுத்து, ஒன்றைச் சாமுண்டியினிடம் கொடுத்தான். அவர்கள் மேல்வீட்டிலிருந்த அறைகளை ஒவ்வொன்ருய்ப் பரிசோதித்துக்கொண்டு போனார்கள். ஒரு அறையிற் கைக்கெடியாரமும் தங்கச்சங்கிலியும் இருந்தன. மற்ருெரு அறையிற் சில சில்லறை நகைகள் கிடந்தன. இவற்றையெல்லாம் வீரசிங்கமும் சாமுண்டியும் எடுத்துக்கொண்டார்கள். மற்ருெரறையில் வெளிச்சம் தெரிந்தது. சற்றுநேரம் இருவரும் அவ்வறையின் கதவண்டை நின்றுகொண்டிருந்தார்கள். அறைக்குள் இருக்கும் ஆபரணமுதலிய நகைகளும் வெள்ளிப்பாத்திரங்களும் இருக்குமிடத்தைக் காட்டச்செய்யவேண்டும் என்ற யோசனை இருவர் மனதிலும் உதித்தது.

வீரசிங்கம் அறைக்குள் எட்டிப்பார்த்தான். ஒரு நாற்காலியிற் சுலக்ஷணு உட்கார்ந்துகொண்டிருந்தாள். மேஜையின் மேல் ஒரு புஸ்தகம் விரித்து வைக்கப்பட்டிருந்தது. சுலக்ஷணு புஸ்தகத்தைக் கவனியாமல் ஏதோ யோஜனைசெய்துகொண்டிருந்தாள். அன்றிரவு அவளுக்குத் தூக்கம் வரவில்லை. சிந்தாமணியின் உருவம் அவள் மனதில் இருந்தது. அவன்மேல் அவளுக்குக் காதலுமிருந்தது, பகையுமிருந்தது. தான் அவனைப்பற்றிச் சொன்ன கதையைக் கேள்விப்படும்பொழுது, அவன் உள்ளபடி நடந்ததை வெளியிட்டால் ஜனங்கள் நம்பிவிடுவார்களோ என்று நடுங்கினாள், தன் மகனுக்காக நிச்சயிக்கப்பட்ட அம்புஜம் சிந்தாமணியை நேசிக்கிருளே என்பதைப்பற்றிச் சிந்தித்தாள். இவ்விதமான பலவிஷயங்களில் சுலக்ஷணுவின் மனமானது சென்றுகொண்டிருந்தது. வீரசிங்கம் அறைக்குள் நுழைந்ததுகூட அவளுக்குத் தெரியவில்லை. அவன் ஓசைப்படாமல் அவளுக்குப் பின்னுற்போய்த் தோளிற் கையை வைத்தான். வீரசிங்கத்தின் கை தன்மேற்பட்டதும் அவள் திடீரென்று எழுந்திருந்தாள். ஒரு ஆள் நிற்பதைப்பார்த்ததும் கூச்சலிட வாயெடுத்தாள். "சப்தம்போடாதே. என் கட்டளையை மீறினால் நீ உடனே பிணமாவாய்," என்று சொல்லி, வீரசிங்கம் அவள்

நெற்றிக்குநேரே கைத்துப்பாக்கியை நீட்டினான். ஒரு நிமிஷநேரம் சுலக்ஷணாவின் தேகமெல்லாம் நடுங்கிற்று மறுநிமிஷமே அவள் தைரியங்கொண்டு சொல்லுகிறாள், "அந்த ஆயுதத்தை என்முன்னால் பிடிக்கவேண்டாம். நான் சப்தம் போடவில்லை."

இப்பொழுது சாமுண்டியும் உள்ளே வந்துவிட்டான். திருடர்கள் இரண்டுபேராய் இருப்பதைப்பார்த்து. இன்னும் அனேகர் வெளியே இருக்கலாம் என்று சுலக்ஷணா எண்ணிக்கொண்டாள். ஆகையால் அவர்கள் சொல்வதை மீறினால் தன் பிராணனுக்கு ஹானிவந்துவிடுமென்று பயந்தாள்.

அவள் முகத்திற்கு நேரே நீட்டியிருந்த கைத்துப்பாக்கியைத் தணித்துப் பிடித்துக்கொண்டு வீ ர சி ங் க ம் சொல்லுகிறான், "நீ மிகவும் தைரியமுள்ள ஸ்திரீயாயிருக்கிறாய். அது போற் புத்திசாலியாகவும் இருப்பாய் என்று நான் நம்புகிறேன்."

சுலக்ஷணா, "உனக்கு என்ன வேண்டும்? ஆனால் அப்படிக் கேட்கவேண்டியது அவசியமில்லை. உன்னுடைய பார்வையே உன் கருத்தைத் தெரிவிக்கின்றது."

வீரசிங்கம், "நீ எங்களுக்கு நகைகளையும் வெள்ளிப்பாத்திரங்களையும் கொடுக்கிறாயா? அல்லது ஐந்தாறு மாதங்களுக்கு உன் பெயரைச்சொல்லிச் சாப்பிட்டுக்கொண்டிருப்பதற்குப் போதுமான பணத்தைக்கொடுக்கிறாயா?"

சுலக்ஷணா, "இப்பொழுது நான் உங்கள் சொற்படி நடக்கவேண்டியவளாயிருக்கிறேன். ஆகையால் நீங்கள் நான் கொடுக்கும் பணத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். ஆனால் பணம் இங்கே கிடையாது. இருக்குமிடத்திற்குப் போய் அதை எடுத்துக்கொண்டு வரவேண்டும்."

வீரசிங்கம், "அங்கே எவ்வளவு பணம் இருக்கிறது?

"அங்கே ஆயிரம் ரூபாய் இருக்கிறது," என்று சுலக்ஷணா கொஞ்சநேரம் யோஜனைசெய்து சொன்னாள்.

வீரசிங்கம், "அது மிகவும் குறைந்த தொகை. இங்கே இருக்கும் பணப்பையில் எவ்வளவு இருக்கிறது?"

சுலக்ஷணு அமைதியுடன் தன்மடியிலிருந்த பணப்பையை எடுத்து வீரசிங்கத்தினிடம் கொடுத்து, "நீயே எண்ணிப்பார்," என்று சொன்னாள்.

வீரசிங்கம், பையிலிருந்ததை மேஜையின்மேல் கொட்டிக் கொண்டு சொல்லுகிறான், "இருபத்திரண்டு ரூபாய்கள், நாலு பத்து ரூபாய் நோட்டுக்கள், இரண்டு ஐந்துரூபாய் நோட்டுக்கள், கொஞ்சம் சில்லறை. இவையெல்லாம் சேர்ந்து மிகவும் குறைந்த தொகையாயிருக்கிறது. வெள்ளிப்பாத்திரங்களும் நகைகளும் இதைப்போல் பத்துப்பங்கு விலையுள்ளனவாயிருக்கும். ஆகையால் இப்பொழுது நாங்கள் உன்கழுத்தை வெட்டிவிட்டு வெள்ளிப்பாத்திரங்களுக்காகவும் நகைகளுக்காகவும் எங்கும் தேடினலென்ன?"

சுலக்ஷணு, "நகைகளும் வெள்ளிப்பாத்திரங்களும் ஒரு அறையில் வைத்துப்பூட்டப்பட்டிருக்கின்றன. அவ்வறையின் வாசற்படியண்டை ஒருவேலைக்காரன் தூங்குகிறான். அவனுக்குக் கொஞ்ச தூரத்திற்கப்பால் மற்றைய வேலைக்காரர்கள் படுத்திருக்கிறார்கள். அவர்களிடத்தில் கைத்துப்பாக்கிகள் இருக்கின்றன. பூட்டப்பட்டிருக்கும் கதவைத் திறக்க எத்தனித்தால் சப்தம் உண்டாகும். உடனே வேலைக்காரர்களெல்லாம் விழித்துக்கொண்டு உங்களை எதிர்ப்பார்கள்."

சாமுண்டி, "சரி, பணத்தை வாங்கிக்கொள்ளு."

திருடர்களிருவரும் சற்றுநேரம் குசு குசுவென்று பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது சுலக்ஷணு ஏதோவொன்றைக் கவனமாய்ப் பார்த்தாள். அவள் முகத்தில் சந்தோஷம் தோன்றியது. அதை வீரசிங்கம் கவனித்தான். அவள் தங்களைத் தந்திரமாய் ஏமாற்றப் பார்க்கிறுளென்று அவன் கண்டு கொண்டான்.

வீரசிங்கம், "நானும் என்கூட்டாளியும் பணத்தை வாங்கித் கொண்டு திருப்தியடைகிறோம். ஆனல் உன்னை இந்த அறையில்

தனியாயிருக்க விடமாட்டோம். அப்படி விட்டால் நீ உடனே சப்தம்போட்டு வேலைக்காரர்களையெல்லாம் எழுப்பிவிடுவாய். ”

சுலக்ஷணை, “ நீங்கள் என்னைத் தனியே விட்டுப்போவீர்கள் என்று நான் எண்ணவில்லை. பணம் இருக்குமறை கொஞ்சதூரத்திலிருக்கிறது. உங்களில் ஒருவன்போய்ப் பணத்தை எடுத்துக்கொண்டு வரலாம். ”

வீரசிங்கம், “ அதற்கு நான் சம்மதிக்கிறேன். ஆனால் எங்களில் ஒருவர் உன்னோடு இருப்போம். ”

பிறகு சாமுண்டியைப் பார்த்துச் சொல்லுகிறான், “ இந்தப்பட்டாக்கத்தியை ஒருகையில வைத்துக்கொள். மற்றொருகையில் கைத்துப்பாக்கியைப் பிடித்துக்கொள். அவசியமானால் அவைகளை உபயோகிக்கச்சற்றும் தாமதிக்காதே. இவளுடைய முகத்தைக் கவனமாய்ப் பார்த்துக்கொண்டிரு. அது பார்ப்பதற்குச் சந்தோஷத்தைத் தரத்தக்க முகந்தான். சப்தமிட வாயெடுத்தாளானால் உடனே அவள் தலையைத் துண்டித்து விடு. ”

இந்தவார்த்தைகளைக் கேட்டதும் சுலக்ஷணைவிற்கு உடல் நடுங்கிற்று.

வீரசிங்கம், “ அவளைப்பார்த்துச் சொல்லுகிறான், “ நகையிருக்குமிடத்தைச் சொன்னால் நான் போகிறேன். உன்னுடைய வேலைக்காரர்கள் என்னைப் பிடிக்கட்டுமென்று நினைத்துக்கொண்டு, அவர்களிருக்குமிடத்திற்கு நீ மோசமாய் என்னைப் போகச்சொன்னால், நான் அவர்களிலொருவனை என் துப்பாக்கியால் சுடுவேன், துப்பாக்கி சப்தம் கேட்டதும், என் கூட்டாளி தாமதமில்லாமல் உன்னைச் சுட்டுவிடுவான். ”

சுலக்ஷணை, “ இந்தப் பயமுறுத்தல்களெல்லாம் அவசியமில்லை. நான் இப்பொழுது சக்தியற்றவளாயிருக்கிறேன். உங்கள் காரியம் நிறைவேறாமல் தடுக்க என்னால் கூடுமானால் நான் அவசியம் அப்படியே செய்வேன்.! ஆனால் அது முடியாத காரியம். ”

வீரசிங்கம், " அப்படியானால்சரி. பணமிருக்குமிடத்தைச் சீக்கிரம் சொல். நேரமாயிற்று."

சுலக்ஷணை, கையினால் ஒருகதவைச் சுட்டிக் காட்டிக்கொண்டு சொல்லுகிறாள், " அதோ இருக்கிறதே அந்தக் கதவின் வழியாய்ப் போ. உனக்கு முன்னால் மாடிப்படி தெரியும். அதன் மேல் ஏறிப் போவாயாகில் வலதுகைப் பக்கத்தில் ஒரு அறையைப் பார்ப்பாய். அதிலேதான் பணமிருக்கிறது." கையில் ஒருகொத்துச் சாவியை எடுத்து ஒருசாவியைப் பிடித்துக்காட்டி, " இந்தச்சாவி அங்கே யிருக்கிற ஒரு பெட்டியைத் திறக்கும். அந்தப் பெட்டிக்குள் ஒரு மூலையில் நான் சொன்ன தொகை இருக்கும்," என்று சொன்னாள்.

சுலக்ஷணை பேசிக்கொண்டிருந்த பொழுது வீரசிங்கம் அவள் முகத்தைக்கூர்ந்து கவனித்தான். ஆனால் அவள் முகம்சந்தேகிக்கும் படியாய்க் காணப்படவில்லை. தான் அடையப்போகிற பணம்குறைந்த தொகை என்று அவளிடத்திற் சொன்னபோதிலும், அது பெருந் தொகை என்று தன் மனதிற்குள் அவன் எண்ணினான். மேலும்பாத்திரங்களையும் நகைகளையும் வீதியில் தூக்கிக்கொண்டுபோதல் அபாயகரமென்று அவனுக்குத் தோன்றியது.

வீரசிங்கம், " அங்கே வெளிச்சம் இருக்கமாட்டாது. ஒரு மெழுகுவர்த்தியை எடுத்துக்கொண்டு போகிறேன்."

சுலக்ஷணை, " சரி, எடுத்துக்கொண்டுபோ."

வீரசிங்கம், " நீ விழித்திருப்பதுபோல் அங்கே உன்னுடைய தாதிகள் விழித்துக்கொண்டிருக்கலாம்."

சுலக்ஷணை, " இல்லை, அவர்களெல்லாம் படுத்துத் தூங்குவார்கள். நீ வழியில் ஒருவரையும் சந்திக்கமாட்டாய்."

வீரசிங்கம், " நான் யாரையாவது சந்தித்தால் உனக்குத்தான் கெடுதல். ஏதாவது சந்தேகத்தை உண்டுபண்ணத்தக்க சப்தம் உண்டானால் உடனே என் கூட்டாளி உன் உயிரை வாங்கிவிடுவான்."

வீரசிங்கம் எரிகிற மெழுகுவர்த்தி யொன்றை எடுத்துக்கொண்டு சுலக்ஷணை காட்டின கதவைத்திறந்துகொண்டு வெளியேபோய், அக்கதவைச் சாத்தினன். ஆனல் சரியாய்ச் சாத்தாமல் அதை ஓரங்கும் வெளிதெரியும்படி விட்டுச்சாத்தினன். மெழுகுவர்த்தியைக் கொஞ்சதூரத்தில் வைத்துவிட்டுக் கதவருகில் நின்றுநீப்பல் வழியாய் என்ன நடக்கிறதென்று கவனித்துக்கொண்டிருந்தான். வீரசிங்கம் ஏன் அவ்விதமாய் நின்றான்? அவன் மனதில் ஒரு சந்தேகம் ஏற்பட்டிருந்தது. அவள் தன்னை யனுப்பிவிட்டுச் சாமுண்டியை ஏமாற்றிவிட எண்ணியிருக்கிறாள் என்று நினைத்தான். ஆனல் எவ்விதம் ஏமாற்றுவாள் என்பது மாத்திரம் அவனுக்குப்புலப்படவில்லை. ஆகையால் சில நிமிஷங்கள் கதவண்டை நின்று என்ன நடக்கிறதென்று அறிந்துகொள்ளத் தீர்மானித்தான்.

இரண்டு நிமிஷம் வரை சுலக்ஷணை பேசாமலும் அசையாமலும் இருந்தாள். சாமுண்டி ஒருகையில் கத்தியோடும், மற்றொருகையில் கைத்துப்பாக்கியோடும் அவள் சமீபத்தில் நின்றுகொண்டு, அவள் முகத்தைக் கவனமாய்ப்பார்த்துக்கொண்டிருந்தான். வீரசிங்கம் அவள் ஒன்றும் செய்யாதிருப்பதுகண்டு, அவ்விடத்தைவிட்டுச்செல்ல வாரம்பிக்கும் சமயத்தில் சுலக்ஷணை பேசினள். உடனே அவன் கவனமாய் உற்றுக்கேட்கலானன்.

சுலக்ஷணை, "எனக்கு மிகவும் தலைவலியாயும் மயக்கமாயுமிருக்கிறது. ஆகையால் அதோ இருக்கிறதே அந்தக்கெடிபாத்திற்கு அடுத்தாற்போல் மேலே வெள்ளித்தகடு போட்டிருக்கும் தலைவலி மருந்து, அதைத் தயவுசெய்து எனக்கு எடுத்துக்கொடு."

அவள் மெலிந்த குரலோடு பேசினள். நாற்காலியில் பலஹீனஞ்தாந் சாய்ந்து விழுந்திருப்பவளைப்போற் காணப்பட்டாள். சாமுண்டி உடனே பதிற்சொல்லவில்லை. கொஞ்சநேரம் தாமதித்துப் பிறகு சொல்லுகிறான், "நான் உன்னைக் கொடூரமாய் நடத்தவில்லை. ஆனல் உன்னை இங்கே விட்டுப்போய் நான் அதை எடுத்துவரமாட்டேன்

கொஞ்சதூரம் நடக்க உனக்குச் சக்தியிருந்தால் நீ போய் எடு. நான் உன்பின்னேடே வருகிறேன்."

"நான் போய் எடுக்கிறேன்," என்று சுலக்ஷணை மிகவும் தாழ்ந்தகுரலுடன் சொல்லி, நாற்காலியை விட்டெழுந்து, நடக்க முடியாதவள்போல் தத்தளித்துக்கொண்டே நடந்தாள். சாமுண்டி ஆயுதங்களைத் தயாராய் வைத்துக்கொண்டு அவளுக்கு வெகு சமீபத்தில் போனபடியால், ஒண்டி நின்று பார்த்துக்கொண்டிருந்த வீரசிங்கம் தன் கூட்டாளியின் நடத்தை குறைகூறத் தக்கதாயில்லையென்று எண்ணினன். ஆயினும் சுலக்ஷணை ஏதோ கபடமான நோக்கத்துடன் தான் இந்தக்காரியத்தைச் செய்கிறளென்று நினைத்தான்.

சாமுண்டி, "மணிடியக்கத்தொங்கவிட்டிருக்கும் கயிற்றண்டை போகாதே. கயிற்றை இழுப்பதற்குக் கையை நீட்டினல் உடனே அந்தக்கையை இக்கத்தியால் துண்டித்துவிடுவேன்."

சுலக்ஷணை, "எனக்கு அவ்விதமான எண்ணம் கிடையாது," என்று சொல்லிவிட்டு, மருந்துப்போத்தலை எடுத்துக்கொண்டு, தள்ளாடிக்கொண்டே திரும்பிவந்து நாற்காலியில் உட்கார்ந்தாள்.

அவள் ஜரிகை போட்டதும் தும்பைப்பூவைப்போன்ற வெண்ணிறமுள்ளதுமான தன்னுடைய கைக்குட்டையைஎடுத்தாள். பிறகு தான் எடுத்துவந்த போத்தலின் மூடியைத்திறந்து அதிலிருந்த வெண்மையான திராவகத்தில் இரண்டு மூன்றுதுளி கைக்குட்டையில் ஊற்றினள். அத்திராவகம் நல்லவாசனையுடையதாக விருக்கவில்லை. அவள் அதை ஊற்றும்போது போத்தலையும் கைக்குட்டையையும் தன் மூக்கிலிருந்து எவ்வளவு தூரத்திற்கப்பால் வைத்திருக்கக்கூடுமோ அவ்வளவு தூரத்திற்கப்பால் பிடித்திருந்தாள். போத்தலை மூடும்பொழுது கைக்குட்டையைத் தவறிப்போடுபவள்போல் கீழேபோட்டுவிட்டாள்.

(தொடரும்)

வ. வி. நடேசன்சேட்டி,
ஆத்தங்குடி.

உ

வஞ்சிமாநகராராய்ச்சி,

(௧௬௮-ம்-பக்கத்தொடர்ச்சி)

இனி எட்டாவது சான்றாக, சங்கநூல்கள் சேரரைக்கொங்கர் கோவென்று கூறியிருப்பதையும் விசாரிப்போம்.

சேரரைப்பற்றிப்பாடிய எத்தனையோ சங்கச்செய்யுள்களுள் ஒரு சில பாடல்களில் மட்டும் கொங்கர்கோவென்ற பிரயோகங் காணப்படுகிறது.

பிரகிருதவாதத்துக்கெல்லாம் பிரதானமான சோன்செங்குட்டுவனையாவது, மற்றுமுள்ள பலசேரர்களையாவது சங்கநூல்கள் எங்கேனும் கொங்கர்கோவென்று கூறியதாகக்காணப்படவில்லை. சேரன் செங்குட்டுவனை நாடுகுடியும்பற்றிச் சிறப்பிக்குமிடத்து "குடவர் கோமான் என்றும், குட்டுவர்பெருந்தகை என்றும் 'சேரன்', 'பொறையன்', 'மலையன்' என்றுமிவ்வாறாகச் சொல்லி யிருப்பதல்லது கொங்கர்கோனென்றெங்குஞ் சொல்லவேயில்லை. இங்கு "மலையன்" என்றது கொங்குமண்டலத்தின் வேறாயெண்ணப்பட்ட மலைமண்டல முடையானென்றே பொருள்படுகிறது. அன்றியும், "கடலொடுழந்த பனித்துறைப் பரதவன்" எனக் கொங்கின் சம்பந்தமே யில்லாத நெய்தனிலமே அவனது வாசஸ்தானமென்றும், சமுத்திரசஞ்சாரமே அவனுடைய விருத்தியென்றும் வற்புறுத்திச்சொல்லப்பட்டிருக்கிறது.

பதிற்றுப்பத்திற் சொல்லப்பட்ட "நாரறிநறவிற் கொங்கர்கோவே" "கட்டிப்புழுக்கிறகொங்கர்கோவே" என்ற இரண்டு பிரயோகங்களும் இளஞ்சேரலிரும்பொறை என்னுமொருசேரனையே குறித்துள்ளன. அவையும் தென்னாடன் குடகொங்கன் என ஆழ்வார் சோழனை வழங்குவதுபோல இளஞ்சேரலிரும்பொறை கொங்கு நாட்டைவென்று கொண்டதுபற்றி அந்நாட்டானே அவனைக்கொங்கர்கோவெனப் பெருங்குன்றூர் கிழார் பாடினரெனக்கொள்வது பொருத்தமுடையதா யிருக்கிறது. அல்லது கொங்கிளங்கோசர்

சேரமண்டலத்தரசர்க்கடங்கிய சிற்றரசராதலால் அங்ஙனங்கூறினு ரெனினுமமையும். அல்லாக்கால் “ காவிரிமண்டிய.........புகார்ச் செல்வ ” என்றதுபற்றிச் சோழமண்டலமும் சேரர்க்குரியதென்று சொல்வாரை மறுக்க வழியின்றாம்.

அன்றியும், கொங்கர்கோவென்பதில் கொங்கர் என்பதற்கு கொங்குநாட்டுள்ள குடிகளும் கொங்குநாட்டரசரும் பொருளாமாயி னும் ‘குடகக்கொங்கர்’ ‘கொங்கரைபட்டகளத்து’ ‘கொங்கிளங்கோ சர்’ என்புழியெல்லாம் ‘கொங்கர்’ என்பது கொங்குநாட்டரசரை யே குறிப்பதால், இங்கும் புகழ்பொருளாகிய சேரனை ராஜாதிராஜ னென்று சிறப்பிக்கும் கருத்துடைய புலவர்கூற்றிலுள்ள கொங்கர் கோவென்றதற்குக் கொங்குநாட்டரசர்க்கரசாகிய கோவென்றே பொருள்கொள்ளவேண்டும். கொள்ளவே கொங்குநாடு சேரமண்ட லத்தினின்றும் வேறென்றும், அதனையாளுமரசர் வெவ்வேறு பல ருளரென்றும், அவர்க்கெல்லாம் சேரன் பேரரசனென்றும் தெளி வாகின்றது. இதனற் சேரர்க்குத் திறையிடுதற்குரிய சிற்றரசர தாட்சிக்குட்பட்ட கொங்கு நாடானது, திறைகொள்ளும் பேரரச ராகிய சேரரது பிரதான ராஜதானிநகரமுள்ள குடபுலமாகமாட்டா தென்பது நன்கு தெளியத்தகும்.

ஆதலாற் சேரரிலிரண்டொருவரைக் கொங்கர்கோவென்று சங்கநூல் கூறியதுகொண்டு அவரைக்கொங்குநாட்டுள்ளவரென்று சொல்வதானது “குடகொங்கன் சோழன்” என்ற திவ்யசூக்தியைக் கொண்டு சோழன் குடகொங்குநாட்டுள்ளவனென்று சொல்வது போலும் அநுமானப்போலியாமெனவறிக. ஆகவே சிலசேரரைச் சங்கநூல்கள் கொங்கர்கோவென்றுகூறிய பிரயோகமும் வாதகக்ஷிக் குச் சாதகமாகாது எதிர்வாதகக்ஷிக்கே சாதமாயிருக்கிறது.

இனி ஒன்பதாவது சான்றான சிலப்பதிகார அபிதானவிளக்கத் தையும் விசாரிப்பாம். அங்குள்ளவாக்கியம், ‘கொங்கு—கொங்கு மண்டலம். குடநாடு. ” என்று எழுதப்பட்டிருக்கிறது. இதில் குடநாடென்றது சேரமண்டலவாசகமாகுமென்றும், அதனல் அங்

கொங்கு குடபுலமாகிய சேரமண்டலமென்று சித்திக்கிறதென்றும் வஞ்சிமாநகருடையார் கருதுகிறார். இங்குப் பொருளுரைத்தற்கெடுத்துக்கொண்ட பெயர் சிலப்பதிகாரத்து வழங்கும் மண்டலவாசகமாகிய கொங்கு என்னும் பெயராம். அதற்கு, கொங்குமண்டலம்—குடநாடு. என இரண்டு சொற்களாற் பொருளெழுதப்பட்டிருக்கிறது. இவ்விரண்டு சொற்களும் வெவ்வேறு இரண்டுபொருளைக் குறித்தனவா? அல்லது ஒரேபொருள் குறித்துள்ளனவா? என்றகேள்விக்கு வஞ்சிமாநகருடையார் விடைகூறவேண்டும். வெவ்வேறுபொருள் குறித்தனவென்பாராயின், கொங்குமண்டலம் வேறு; தாம் குடபுலமென நினைத்த குடநாடுவேறு என்பதே பெறப்பட்டுத்தமக்கிஷ்டசித்தியில்லாமல் அநிஷ்டசித்தியே யுண்டாவதா யிருக்கிறது. ஆகையால் அவ்விரண்டும் வெவ்வேறென்று கொள்ளாது ஒன்றென்றே அவர்கொண்டு தீரவேண்டும். கொள்ளவே, ஒருபொருளுக்கு இரண்டுசொல்லெழுதவேண்டுவ தெதற்கென்று யோசிக்கவேண்டும். விளங்குதற் பொருட்டு வெளிப்படையான சொல்லாலும் பொருளெழுதப்பட்டதென்பாராயின், அச்சொல் முன்னுள்ள கொங்குமண்டலமா? பின்னுள்ளகுடநாடா? கொங்குமண்டலமாயின் அதனையிறுதியிலெழுதியிருக்கவேண்டுமே? அங்ஙனமில்லாமையா லதுபொருந்தாது. குடநாடென்பதோ கொங்குமண்டலமென்பதைக்காட்டிலும் வெளிப்படையன்றென்பதிலக்கண நூல் வல்லாரெல்லாருமறிவர். ஆதலால் குடநாடென்று வெளிப்படைச்சொல்லாற் பொருள்விளக்கப் பட்டதென்று கொள்ளுதல் பொருந்தாதிருக்கிறது.

அன்றியும் அது வெளிப்படைச்சொல்லென்பது கருத்தாயின் கொங்குமண்டலமென்பது கூறுமலே கொங்கு-குடநாடு என்று எளிதில்விளங்குமாறு பொருளெழுதி யிருக்கலாமே? அவ்வாறெழுதாது இடையே கொங்குமண்டலமும் எழுதப்பட்டிருத்தலால், ஸ்ரீ. மஹாமஹோபாத்தியாய ஐயரவர்கட்குக் கொங்குகுடபுலமாமென்பது கருத்தன்றென்றுணர்க. பின்னையாதெனின்? கொங்கு என்றசொல்லுக்குப்பொருள் கொங்குமண்டலமேயாம்; ஆயினும், சிலப்பதிகாரத்துட் சொல்லிய கொங்கிளங்கோசர் குடகக்கொங்கராதலால் அவர்க்குரிய நாடு அக்கொங்குமண்டலத்தின் குடநாடேயாம் என்னுங்

கருத்தை வெளியிடவேண்டி, கொங்கு—கொங்குமண்டலம்-என்று சொற்பொருளெழுதி இங்கு அதன் குடநாடே பொருளாகக்கொள்க என்னுங் குறிப்பால் அதனையடுத்துக் குடநாடு என்றெழுதி யுள்ளார்கள். இஃது என்போலவெனில்? 'பொருப்பிலேபிறந்து' என்ற தமிழ்மொழி வாழ்த்துச் செய்யுளிற் பொருப்பு என்றதன் குறிப்பெழுதுமொருவர் பொருப்பு—மலை-பொதியில், என்றெழுதுவது போலுமெனவறிக. இதனுள் பொருப்பு என்பதற்கு மலை என்பதே நேர் பொருளாயினும் அது இங்கு அம்மலைகளுட்பொதியின் மலையையே குறிக்கும் எனக்கொள்வதுபோல, கொங்கு என்பதற்கு, கொங்குமண்டலம் என்பதே நேர்பொருளாயினும் அது இந்து அக் கொங்கினுட்குடநாட்டையே குறிக்கும் எனக்கொள்வதற்கே செவ்வேயியைந்து பிறிதோராற்றானும் பொருள்கொள்ளற்கிசையாதிருத்தல் காண்க.

ஆகலாற் "கொங்கு—கொங்குமண்டலம்-குடநாடு" என்ற சிலப்பதிகாரவபிதானவிளக்கமும் வாதகக்ஷிக்குச்சாதகமாகாது எதிர்வாதகக்ஷிக்கே சாதகமாயிற்று.

இனிப் பக்தாவது சான்றாக, "செங்கதிர்மணிமுடிச்சேரலன்றிகழ், கொங்குநன்னாடு என்ற பழனிப்புராணப் பிரயோகத்தையும் விசாரிப்போம்.

இதுவும், "சேரர்கொங்கின்வைகாவூர்நன்னாடு" என்ற அருணகிரியார்வாக்குப்போலக் குடகொங்கினையே சேரர்க்குரியதாகக்காட்டுவதல்லது பிரகிருதவாதத்துக்கு முக்கியமாயுள்ள கருவூர்ப்பகுதியைச் சேரர்க்குரியதாகக்காட்டமாட்டாததா யிருக்கிறது.

அன்றியும் சேரர்க்குக் கொங்குநாடுள்ளது என்று பேசுவதற்கெல்லாம் மூலகாரணமாகக் "கொங்கலனவினறுங் கோதைதனியாண்ட" தெனப் பேரூர்ப்புராணஞ் சொல்லியதும் அப்பேரூர்ப்பாகமுள்ள குடகொங்கேயாயிருக்கிறது. இக்குடகொங்கு சேரகுலத்தினராகிய சிற்றரசராலாளப்பட்டுவந்த குடியேற்றநாடென்பதில் எதிர்வாதகக்ஷிக்கு ஆக்ஷேபமில்லாமையாலும், கருவூர்ப்பக்கத்தைச் சேரராண்டதாக இப்பிரமாணங்காட்டமாட்டாமையாலும் இதுவும்

வாதகக்ஷிக்குச்சாதகமாகாதிருக்கிறது. இவ்வாறே, "சேரர்திருநாட்டோகளின் முன்பிறந்தமூதூர்செங்குன்றூர்" என்ற பெரியபுராண வாக்கியமும் ஆராயத்தக்கது. இங்கு கொங்கிற்செங்குன்றூருள்ள பாகம் குடகொங்காதலால் அது தொன்றுதொட்டுச் சேரர்குலத்துச் சிற்றரசராகிய குடகக்கொங்கராலாளப்பட்டதென்பது எதிர்வாத கக்ஷியாராலங்கீகரிக்கப் பட்டமையா லிது அவர்க்கு விரோதமில்லதாயிற்று. ஆகவே இது குடகொங்கிற் சரிதார்த்தமுடையதாய், சாவகாசமாயிருப்பதால் வாதககக்ஷிக்குக் கருவூருள்ளகொங்கின்பாகத்தைச் சேரனுடென்று காட்டமாட்டாமையாலும், அச்சேக்கிழார் வாக்கினாலேயே "மன்னிபவனபாயன்சீர் மரபின்மாநகரமாகுந், தொன்னெடுங்கருவூரென்னுஞ் சுடர்மணிவீதிமூதூர்" என்று வியக்தமாய்க்கருவூர் சோழர்க்குரியதென்று சொல்லியிருக்கும் நிரவகாசவாக்கியத்தாற் பாதிக்கப்படுவதனாலும் இது வாதககக்ஷிக்குச் சாதகமின்றியும் எதிர்வாதககக்ஷிக்குப் பாதகமின்றியும் உதாசீனமாயிருக்கிறது.

ஆனால் கருவூரைச் சோழர்க்குரியதாகச் சேக்கிழார் கூறியிருப்பதற்கு அர்த்தாந்தரகற்பனத்தால் அசித்தி சொல்லவருகிறார். அது பொருந்தாதென்பதைப் பின்பு எதிர்வாதககக்ஷியில் அப்பாட்டுக்குப் பொருளாராய்வுழிக்காட்டப்படும்.

இனிப்பதினோராவதுசான்றாக, "கொடித்தடஞ்சிலைக் கோதை நாட்டினிலெழுபதியும்" என்ற பழனிப்புராணவாக்கியத்தையும் விசாரிப்பாம்.

இதிற் 'கொடித்தடஞ்சிலைக்கோதைநாட்டினிலெழுபதியும்' என்பதிற் கருவூருஞ்சேர்ந்ததுதானென்பது வெளிப்படையாகச் சொல்லப்படவில்லை. அது சேரர்க்குரியதென்பது குறிப்பாற்கொள்ள வேண்டியிருக்கிறது. கருவூர் சோழர்க்குரியதென்பது 'தங்கள்குல மரபின் முதற்றனிநகராங்கருவூர்' என்றும், 'மன்னியவனபாயன் சீர் மரபின்மாநகரமாகுந், தொன்னெடுங்கருவூர்' என்றும், பெரிபுராணத்துட்டெளிவாகச் சொல்லப்பட்டிருப்பதுகொண்டு எதிர்வாத கக்ஷியால் நன்கு நிரூபிக்கப்பட்டிருக்கிறது. வெளிப்படையுங்குறிப்

புமாகியவிரண்டு பொருள்கண்மாறுபட்டால் வெளிப்படைப்பொருளே வெற்றியடையும் என்ற நியாயத்தால் எழுபதியும் என்றதனுட் கருவூர் ஒன்றென்றுகொள்ளற்கிட மில்லாமையால் அவை கருவூரொழிந்த வேறேழுபதிகளாயிருக்க வேண்டுமென்பதே பெறப்படுகிறது.

அவ்வேழுபதிகளுட் கருவூர் ஒன்றென்று நிரூபிக்கப்பட்டாலும் அது வாதகக்ஷியார்க்குச் சாதகமாகிறதில்லை. ஏனென்றால், அது சோழரதுநகரமென்று பெரியபுராணத்தாலுங் கருவூர்ப்புராணத்தாலும் கருவூர்ச்சிலாசாசனங்களாலும் சித்திக்கிருப்பதற்கு விரோதமில்லாமலே கோதைநாட்டுப்பதிகளுளொன்றாகக் கொள்ளவேண்டியதாயிருக்கிறது. குடகொங்குநாடே சேரர்கொங்கு எனப் பேரூர்ப்புராண முதலியவற்றாற் சித்திக்கிருக்கிறது. அதனையாளும் சேரர்குலச்சிற்றரசர்களாகிய கொங்கர்கள் ராஜ்பகாரியசௌகரியார்த்தம் சேரவரசர் மூலமாகச் சோழர்கொங்கினையும் வருடவாரித் திறைப்பொருள் கொடுத்து வருவதாகச் சேர்த்துக்கொண்டு ஒரு தனிமண்டலமாக்கிக்கொண்டு ஆண்டுவந்தமையால் அச்சோழர்க்குரிய கருவூர்ப்பாகமும் கோங்குநாடேன்று பெயர்பெற்றதாயிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. இதனை, "கொங்கரொடு குடபுலத்துக்கோமன்னர் திறைகொணர" என்றபாட்டின் குறிப்பாலும். கருவூர்ச்சிலாசாசனக்குறிப்புகளாலும், பின்பு காட்டுதலாலறியலாம்

ஆகவே கொங்குமண்டலம் மலைமண்டலக்கோமன்னர் மேற்பார்வையிற் கொங்கரென்னுஞ் சேரவகுப்பினராகிய சிற்றரசராற் பிற்காலத்தி லாளப்பட்டுவந்ததுபற்றியே, கோதைநாட்டினிலெழுபதியும் என்று கருவூரையுமகப்படப் பிற்காலத்தலபுராண முதலியவற்றிற் கூறியதாகக்கொள்ளவேண்டுமேயல்லது சோழர்க்குரியதாகாத கோதைநாட்டுள்ளதாகக்கொள்ளற் கிடமில்லாமையா லிது வாதகக்ஷிக்குச் சாதகமில்லாததாகவும் எதிர்வாதகக்ஷிக்குப் பாதகமில்லாததாகவுமிருக்கிறது. "சேரர் திருநாட் டூர்களின்முன் சிறந்த மூதூர்செங்குன்றூர்" என்றபெரியபுராண வாக்கியத்துக்கும், கருவூர்ப்புராணம் எறிபத்தச்சருக்கத்துள் வஞ்சுளாடவி சேரநாட்டுள்ளதெனக்கூறியிருப்பதற்கும் இதுவே சமாதானமாமெனவறிக.

இனி, பன்னிரண்டாவது சான்றாக "வெங்கைக்களவழிப்பாடலுங்காவில்லவனைக்கொங்கைக் தளைகளைந்தகோமானும்" என்ற சங்கர சோழனுலாவாக்கியத்தையுமாராய்வாம்.

இதன்கண் வில்லவனைக்கொங்கைக் தளைகளைந்த கோமான் என்பதற்கு வில்லவனான சேரனைச் சோழன் தளைகளைந்தது அவனுடைய கொங்குநாட்டைத் தளைகளைந்ததென்பதே கருத்தாகுமென்கிறார். இது பொருந்துவதாயில்லை. ஏனெனில் இத்தளைகளைப்பாடிய களவழிப்பாட்டில் "வஞ்சிக்கோவட்டகளத்து" "கொங்கரைபட்டகளத்து" என வில்லவனும், கொங்கருமாகிய இருவேறு வேந்தரையும் சோழன் போரில் வென்றானென்று கூறியிருப்பதா லங்ஙனம் வென்று தளையிடப்பட்டவில்லவனையுங் கொங்கரையும் தளைகளைந்த கோமான் எனச் சோழனைச் சொல்வது சரித்திரத்தோடு பொருத்தமுடையதாயிருக்கிறது. கொங்குநாடு ஒருவாற்றானும் சோழனாற் றளையிடுதற்குரியதாகாமையானும், அவனாற்றளையிடப்பட்டகொங்குநாட்டரசரே தளைகளைதற்குரியராதலாலும் வில்லவனைத்தளைகளைந்தது கொங்குநாட்டைத் தளைகளைந்ததாகக் கூறுவது பொருளாகாதெனவறிக.

ஆகவே வில்லவனைக் கொங்கைத்தளைகளைந்த கோமான் என்றதில் வில்லவன் குடபுலத்தரசனும், கொங்கர் அவனுக்குத் துணைப்படையான கொங்கு மண்டலத்தரசருமாகிய வேறுபாட்டையே காட்டுதலால் இதுவும் கொங்கு குடபுலமாகாதென்பதற்கே யாதாரவாகி வாதகக்ஷிக்குப் பாதகமாயும் எதிர்வாத கக்ஷிக்குச் சாதகமாயும் உண்மையை வெளியிடுவதாயிருக்கிறது.

இனி, பதின்மூன்றாவது சான்றான "கொங்கைக்கமராவதியளித்தகோ" என்ற தனிச்செய்யுட்பிரயோகத்தையும் விசாரிப்பாம்.

இதில் "கொங்கைக்கமராவதியளித்தகோ" என்பதற்குக் கொங்குதேசத்தரசனாகிய சேரனைப் போரிற்கொன்றவன் சோழன், என்பதே பொருளெனக்கொண்டு குடபுலமன்னனாகிய சேரனுக்கு உரியதாகக்கொங்குநாடு கூறப்பட்டதனால் அது குடபுலமாகவேண்டுமென்று கருதுகிறார்,

இஃது சோழனாற் சொல்லப்பட்டவன் குடபுலத்தரசனாகிய சேரன் என்று விளக்கமாகச் சொல்லப்படாமையாலும், சிலப்பதிகார காலத்திற்கு மிகப் பிற்பட்ட விருத்தாந்தத்தைத் ததிமுகமாகக் கூறுதலாலும் "கொங்கர்க்கமராவதிபளித்தகோ" வென்றும் வேறு பாடபேதமிருப்பதாலும், கொங்கை யென்பதற்குச் சேரன் என்றே பொருள் சொல்லவேண்டுமென்ற நியமமில்லாமையாலும், கொங்கர் என்பதற்குக் கொங்குநாட்டுக் குறுநிலமன்னர் என்ற பொருள் பலவிடத்துங் கொள்ளப்பட்டிருத்தலாலும், கலிங்கரைவென்றான் என்பதுபோலக் கொங்கரை வென்றான் என்பதும் சம்பாவிதமாகையாலும் இதுவாதசாக்ஷிக்குச்சாதகமாகவாவது, எதிர்வாதசாக்ஷிக்குப் பாதகமாகவாவது காணப்படாமையா லுதாசீனிக்கத்தக்கதே.

இனி, பதினான்காவது சான்றாக "மாந்தரஞ்சேரலிரும்பொறை" என இலக்கண நூல்களில் உதாரணமாகக் காட்டும் தொடர்மொழிப் பிரயோகத்தைத் தமக்காதரவாகக் காட்டுகிறார். அதனையும் ஆராய்வாம்.

இதில் மாந்தரன் என்ற பெயர் குடபுலமன்னனாகிய சேரனுக்குரியதென்றும், அப்பெயரிற் கொங்கின் சம்பந்தமிருப்பதால் கொங்கு குடபுலமாகுமென்றும வஞ்சிமாநகருடையார் கருதுகிறார். இதனாற் கொங்குநாடு சேரமண்டலமென்று சாதிப்பதானது "மலையமான் சோழியவேனாதிதிருக்கண்ணன் என்பதில் * மலையமானென்ற சேரர்க்குரியபெயரிற் சோழசம்பந்தமிருப்பதாற் சோழநாடு மலைமண்டலமாகுமென்று சாதிப்பதுபோலும் அனுமானப்போலியாமெனவறிக.

இனிப் பதினைந்தாவது சான்றாக, "வஞ்சிகுடக்கினிற்கோதையுமாங்கே" என்ற அழகர் கலம்பக வாக்கியக்குறிப்பு முதலிய சிலகுறிப்புக்களைத் தமக்காதரவாகக்காட்டுகிறார், அவற்றையும் விசாரிப்பாம்.

இவ்வழகர்கலம்பகத்திற் சொல்லிய வஞ்சியுங்குடக்கும் முறையே கொங்கிற்கருவூரையும் கொங்குமண்டலத்தையுமே யுணர்த்துஞ் சொற்களென்று தெளிவுபிறந்தாலல்லது இவ்வாக்கியம் வாதசாக்ஷிக்

காதரவாகமாட்டாது. ஏனெனில், வஞ்சி என்னும் சேரராஜதானி நகரம் மலைமண்டலத்துள்ளதோ? கொங்குமண்டலத்துள்ளதோ? என்றும் விசாரிக்குக்கொண்டிருக்கும் நிலையில் அதுவே சந்தேகத்துக்கிடமாயிருப்பது முதலாவது தோஷம். குடக்கு என்ற சொல்லுக்கு முக்கியார்த்தம் மேற்றிசையாதலால் அதனையொழித்துக்குடபுலமென்றலக்ஷ்யார்த்தங்கொள்வது இரண்டாவது தோஷம். அது சேரமண்டலவாசகமாக வழங்கப்படாமை மூன்றாவது தோஷம். இம்மூன்று தோஷங்களானும் முறையே இது அசித்தியுடையதாதுமெனவறிக.

அன்றியும், இவ்வாக்கியம் மகண்மறுத்தலென்னும் மறக்காஞ்சித்துறையில அழகர்மலையிலுள்ள மறவர்கூற்றாகக் கூறினமையால் அவ்வஞ்சி அழகர் மலையிலிருந்து சொல்வார்க்குக் குடக்கு என்னும் சொல்லுக்கு நேர்பொருளாகிய மேற்றிசைநோக்கி "வையைபொரு வழிக்கொண்டு மாமலைமீமிசையே நிச் செல்லற்குரிய வஞ்சியென்று பொருள்படுமேயல்லது, அவர்க்கு வடதிசைக்கண்ணுள்ள கொங்கு வஞ்சி என்று பொருளாகாதெனவறிக. கொங்கு வஞ்சியைக்கருதி அழகர் மலையிலிருந்து கூறுங்குறவர்கூற்றின் அனுகாரமாகக் கூறியிருந்தால் அது வஞ்சிவடக்கினிற்கோதையுடாமகே, என மோனைத்தொடைநயமுமுடையதாய்க் கூறப்படுமெனவறிக. அங்ஙனம் கூறாமையாலிங்குக் கூறியவஞ்சி கொங்கு வஞ்சியாகாதெனத் தெளியத்தக்கதாயிருக்கிறது. ஆதலால் இதுவும் வாதகக்ஷிக்குப் பாதகமாகி எதிர்வாதகக்ஷிக்கே சாதகமாயிற்று.

இனி "குடகிற்கருவூர் என்ற அருணகிரியார் வாக்கைத் தமக்காதாரமாகக் காட்டுகிறார். இதில், குடகென்றது குடபுலம் என்ற சேரமண்டலப்பொருள் கருதி வழங்கியிருப்பதாக வஞ்சிமாநகருடையார் கருதுகிறார். குடகு என்பதற்கு, சேர மண்டலமே பொருளாகவேண்டுமென்றாவது அல்லது கருவூர்க்குப்பொருத்தமான பிறிதொரு பொருளுமில்லையென்றாவது அவர் காட்டவேண்டும். அங்ஙனமின்றி, குடகு என்ற சொல்லுக்குச் சேரமண்டலமென்று பொருள் சொல்லி விடுவது சாத்தியமாகாதிருக்கிறது. ஏனெனில்,

சேரனைக் குடபுலமுடையானென்று கூறுமிடத்தெல்லாம் குடக்கோ குடவர்கோ, குடவர்கோமான் எனவே கூறியிருப்பதல்லது குடகுக் கோவென்றேனும்; குடகர்கோவென்றேனும், குடகர்கோமானென்றேனும், குடகென்னும் குற்றியலுகரவீற்றுத்திசைப் பெயரடியாகக கூறும் வழக்கில்லாமையானும் குடகக்கொங்கர் எனச் சாதாரணத் திசைப்பொருளேபற்றி வழங்கும் வழக்கே யுண்மையானும், குடசத்தமொழிந்த குடகு குடகமென்னுந் திசைப்பெயர்கள் சேரமண்டல வாசகமாகாவெனவுணர்க. குடகென்பதற்கு, மேல்பால் என்பதே செம்பொருளாயிருப்பதால் " குடகிற்கருவூரழகப்பெருமாள் " என்பதற்கு, கருவூரின்மேல்திசையிலிருந்தருள்புரிய முருகப்பெருமாள் என்று பொருள் சொலலுதலே பொருத்தமுடையதாயிருக்கிறது. அவ்வூரில் அவர் எழுந்தருளியிருக்குமிடமுமதுவேயாம். ஆதலால் இதுவும் வாதககூறிக்குச் சாதகமாகாதாயிற்று, இனி நைடதத்து,

" மாழைமென்னுேக்கியீங்குவைகியமானவேலான்
ருழைமுப்புடைக்காய்வீழ்ந்துதாற்றிளங்கமுகுசெற்று
வீழ்சுளைவருக்கைபோழ்ந்துவெம்புலியடியபைங்காய்க்
கோழரையரம்பைசாய்க்குங்குடகநாடாளும்வேந்தே".

என்ற பாட்டிலும் அரிச்சந்திரசரிதையில்,

" அதிபாரதனபாரவதிரூபமலர்மாளையனையாயிவ
னதியாயவுயர்யோதினறைபாயநிறையாயசிறைவாவியின்
மதியாமல்வலிபீறிவெடிபோனபருவாளைவனைபூகமேற்
குதிபாயமடல்கீறிவிழுதேறல்கரைசாடுகுடநாடனே. "

என்றபாட்டிலும், சேரர்க்குரிய மண்டலவாசகமாகச் சொல்லப்பட்டுள்ள குடகநாடு குடநாடு என்பன கொங்குநாட்டையே குறிக்குமென்றும், அதற்கு இப்பாடல்களில் மருதவருணனையே கூறியிருப்பது சான்றென்றுங்கூறுகிறார். மலைநாடு பெரும்பாகம் குறிஞ்சி நிலமும், சிறுபாகம் மருதநிலமுமுள்ளதென்பதும் கொங்குநாடு பெரும்பாகம் முல்லைநிலமும், சிறுபாகம் மருதநிலமும் உடையதென்பதும்

யாருமறிவர். அங்ஙனமாகவும் கொங்குநாட்டின் பெரும்பான்மையான முல்லைநிலவளங்கொண்டு அதனை விசேடியாது சிறுபான்மையான மருதநிலவளங்கொண்டு விசேடித்திருப்பது பொருந்துமாயின் அவ்வாறே மலைமண்டலத்துள்ள பெரும்பான்மையான குறிஞ்சிநிலவளங்கொண்டு விசேடியாது மருதநிலவளங்கொண்டு விசேடித்திருப்பதும் பொருந்துமெனவறிக.

அன்றியும், "குடகநாடாளும்வேந்தன்" "குடநாடன்" என்ற பிரயோகங்கள் மலைமண்டலமுங்கூடிய கொங்குமண்டலத்தையுடையானைக் குறித்தனவாகவே வஞ்சிமாநகருடையார் கொள்ளவேண்டுமாதலால் அவ்விரண்டு மண்டலத்தும் மிக்குள்ளனவாகத் தாமொப்புக்கொண்டிருக்கும் குறிஞ்சி நிலவளம்பற்றிக் குடநாட்டை விசேடியாதகுற்றம் வாதகக்ஷிக்கும் ஒத்ததாயிருப்பதால் அவர்க்கவை சாதகமாகாவாயின.

அன்றியும், காவியப்பிரயோகங்களெல்லாம் சந்தர்ப்பானுகுணமாகச் சுவைநலந்தோன்றச் சொல்லுவதே மரபாயிருக்கிறது. மேற்காட்டிய செய்யுளிரண்டும் கொங்குமண்டலத்தரசரைக் குறியாது மலைமண்டலத்தரசரையே குறிக்குமிடத்தும் சுயம்வரமண்டபத்திடைவந்துள்ள மணவாளரை வாசயோக்கியமான அவர்க்குரிய நிலவளமுடைய மருதம்பற்றி விசேடியாது, கல்லுங்கரடும், முள்ளும்முரடும், முழையும், விடரும், அரவும், புலியும், களிறும் பலவுமுடைய குறிஞ்சி நிலம்பற்றி விசேடிப்பது மணமக்களை நோக்கி இன்பச்சுவைதோன்றக்கூறும் மகளிர்கூற்றுக்குச்சிறவாதாதலானும் நீர்வளமிக்க மலைமண்டலத்துள் மருதநிலமில்லையென்று சொல்லவொண்ணாதாதலானும், நைடதத்தும், அரிச்சந்திரசரிதையினுங் கூறிய குடகநாடு, குடநாடு என்ற பிரயோகங்கள் மலைமண்டலத்துக்குப் பொருந்தாதென்பது தவறுமெனவறிக.

இனிப் பதினாறாவது சான்றாக, சேரநாட்டுள்ளனவென நூல்களிற்சொல்லப்பட்ட ஊர்ப்பெயர் முதலியன கொங்குநாட்டுள்ளனவாக வழக்குப்பற்றிக்காட்டும் சிலகுறிப்புகளையும் விசாரிப்பாம்.

1. சேரகுலத்தவனான அதிகனுக்கும், சேரர்க்கும் பகைமையுண்டென்றும், ஆமூரிலிருந்த கொடுமுடியென்பவன் அதியமானை

டுமானஞ்சியுடன் சேர்ந்து சேரரை விரோதித்தவரென்றும், ஆமூர் இப்பொழுது கொங்குநாட்டுள்ளதாதலால் சேரிருந்தது கொங்குநாடாகுமென்றுஞ்சொல்லுகிறார். (வஞ்சிமாநகர்-பக்கம். 150.)

இதனுட்சொல்லும் அதிகன் சிற்றரசனும், சேரர் பேரரசருமாயிருத்தலால் பேரரசரைப்பகைக்கும் ஒரு சிற்றரசன் அப்பேரரசரது நாட்டுளிருத்தற்கியலாது புறநாட்டிலிருந்து விரோதிக்கவேண்டுமென்பதே யுக்திக்குப்பொருந்துவதாலும், அவ்வதிகனுக்குக் கிழக்கேயுள்ள ஆமூரிலிருந்து கொடுமுடி துணைச்செய்ததாகச் சொல்லுவதால், அவ்விருவரும் தமக்கு மேற்கே குடபுலத்துள்ள சேரரைப்பகைத்தாரென்று கருதுதற்கிடங்கொடுப்பதாலும் இதுவும் அசத்தியுடையதாயிருக்கிறது.

2. இனிச்சங்கச்செய்யுளொன்றில் வண்டன் என்னுமொருவன் சேரனுக்கு உவமிக்கப்பட்டுள்ளான் என்றும், அவன்பெயருடைய வண்டமலை கொங்குநாட்டுள்ளதென்றும், அதனால் அக்கொங்குநாடு சேரர் குடபுலமாக வேண்டுமென்றுங் கருதுகிறார். (வஞ்சிமாநகர்-பக்கம் 151.)

இதனாற் கொங்கு குடபுலமாகுமென்று சாதிப்பதானது, குருகுலத்தரசருளொருவன் அத்தியென்னும் பெயருடையவனாயிருந்தமையால் தொண்டைநாட்டுள் அத்திகிரி என்னும் க்ஷேத்திரமிருப்பதால் அத்தொண்டைநாடு குருகுலத்தரசர்க்குரிய குருக்ஷேத்திரமாகும் என்று சாதிப்பதுபோலும் அனுமானப்போலியாமெனவறிக.

3. வஞ்சியிலிருந்த சிக்கற்பள்ளித் துஞ்சியசெல்வக்கடுங்கோ கோதானஞ்செய்தவனென்பது, 387-ம் புறப்பாட்டால் அறியப்படுகிறதென்றும், கொங்குநாட்டிற் பசுமிகுதியாதலா லவனங்கிருந்து தானஞ்செய்திருக்கவேண்டுமென்றும், ஆதலாலது குடபுலமாயிருக்கவேண்டுமென்றும் கருதுகிறார். (வஞ்சி-ர். பக்-152.)

இது, கொங்குநாட்டைக்காட்டிலும் பசுமிகுதி கோவர்த்தனத்திலிருந்ததாக அறியப்படுதலா லவனங்கிருந்து கோதானஞ்செய்

யிருக்கலாமென்றும், அதனாற் கோவர்த்தனகிரியே குடபுலமாகுமென்றும் துணிவதுபோலும் என்க. அன்றியும், செங்குட்டுவன் வடநாட்டிலிருந்து தன்னாட்டுக்கு "இன்பலருவிக்கங்கைமண்ணி, யினந்தெரிபல்லான்கன்றொடுகொண்டு" வந்தவனென்று சொல்லப்பட்டமையால் பசுமிகுதியுள்ள கொங்குநாட்டுள்ளவனல்லனென்று விளங்குதலாலும் கொங்கு குடபுலமாகாதெனவறிக.

4. உதியஞ்சேரல் குழுமூரிலிருந்து பெருஞ்சோறுபயந்தவனென்று சொல்லப்படுதலாலக்குழுமூர் கொங்குநாட்டிலுள்ள குழுமம் என்னும் ஊராயிருக்கலாமென்றும், அதனாற்கொங்கு குடபுலமாகலாமென்றும் சொல்லுகிறார். (வஞ்சி-ர். பக். 151.)

இது தஞ்சைவாணன் கோவைப்பாட்டுடைத் தலைவனது மாறநாட்டூர் தஞ்சையென்று சொல்லப்பட்டமையால் தஞ்சாவூருள்ள சோழநாடே மாறனாடாகுமென்று சொல்வது போலுமென்க.

5. ஆதன் என்னும்பெயர் சேரர்க்குஉள்ளது; ஆதனூரென்பது கொங்குநாட்டுள்ளது. ஆதலாற் கொங்கு சேரராஜதானிநகரமுள்ள குடபுலமாகுமென்கிறார். இது சோழர் என்றபெயர் குணபுலத்தரசர்க்குரியது; சோழபுரம் என்னும் ஊர்ஒன்று பாண்டிநாட்டிலிருக்கிறது அவ்வூருள்ளபாண்டிநாடு சோழமண்டலமாகுமென்று துணிவதுபோலும் என்க.

இனி, இப்பெயர்களேயன்றி இவ்விவகாரங்களுக்கெல்லாம் காரணமாய்க் குடபுலத்துப்பிரஸித்திபெற்றுள்ள இடப்பெயர்ப்பொருளுடைமையைக்கொண்டு கொங்கு குடபுலமாகுமென்று சாதிக்கவும் வரலாம். அதாவது கருவூர், வஞ்சி, பொருநை, கொல்லி என்னும் ஊரும் நதியும் மலையுமிருப்பதினாற் கொங்கு குடபுலமாகுமென்று துணிபவரலாமென்பதாம். இங்கு அப்பெயர்களுடைய இடவிசேடங்களே இவ்வழக்கிற்குக்காரணமயிருத்தலாலவற்றுலாயினும் கொங்கு குடபுலமாகுமாவென்று விசாரிப்போம்.

அவற்றுள், "திருமாவியனகர்க்கருவூர்" என்று கருவூர் சேரர்க்குரியதாகச் சொல்லப்பட்டிருப்பதால், கருவூருள்ள கொங்கு குடநா

டாகுமெனில் அது, "மதுரைப்பிறந்தமாமாயன்" என மதுரையில் திருமாலவதரித்தான் என்று சொல்லப்பட்டிருப்பதால், மதுரை யென்னும் பெயருடைய திருநகரம் பாண்டிநாட்டிவிருப்பதால் அப் பாண்டிய ராஜதானிநகரமாகிய மதுரையுள்ளவிடமே திருமாலவ தரித்த யமுனை தீரமாகுமெனத் துணிதல்போ லநுமானப்போலியா மெனவறிக.

இவ்வாறே வஞ்சி, பொருநை, கொல்லி என்பனவும் தனித் தனி கொங்குநாட்டைக்.குடபுலமென்று காட்டமாட்டாவெனவறிக.

இனிக்கருவூர், வஞ்சி என்னுமிரண்டு பெயர்களும் சேர்ந்திரு ப்பது கொண்டு இரண்டேதுக்கூட்டத்ாலது சோநருள்ளகுடபுல மென்று துணியலாமெனின்,. அதுவும் பிறழ்ச்சி யுடையதேயாம். எப்படியென்றால் கரும்பறியாதானொருவன் அதற்கு வேழம், கழை என்னும் பெயர்களுண்டென்று தெரிந்துகொண்டு வேழம்பர்கழைக் கூத்தாடுமிடஞ்சென்று அவர்கழையிலேறிக்கூத்தாடுவதையும், அத னால் அவர்க்கு வேழம்பர் என்ற பெயர்வாய்ந்திருப்பதையுங்கொண்டு வேழம் கழையென்னுமிரண்டுபெயரும் ஒருங்கு மூங்கிற்கு வழங் கப்படுவதுகண்டு, அக்கழைக்கூத்தாடு மூங்கிலைக் கரும்பாகுமென்று துணிதல்போலும் அனுமானப்போலியாமெனவறிக.

இனி "தண்பொருநைப்புனல்பாயும் விண்பொருபுகழ் விரல் வஞ்சி" எனப் பொருநையாறுடைமையும் வஞ்சியென்னும் பெய ருடைமையுமாகிய இவ்விரண்டையுங்கொண்டு இவ்விரண்டையு முடையநாடு குடபுலமென்று துணியலாமெனின். அதுவும்பிறழ்ச்சி யுடையதேயாம். எப்படியென்றால், யானை யென்னும் விலங்குக்கு வேழமென்னும் பெயருடைமையும் நீண்டதொருபுழைக்கையுடை மையுமாகிய இவ்விரண்டு மொருங்கிருப்பதுகொண்டு "தூம்புடை நெடுங்கைவேழந்துற்றிய வெள்ளிலேபோல்" என்ற சிந்தாமணி யில் வெள்ளிலை (விளங்கனியை) யுண்டதாகச்சொல்லப்பட்டது யானை யென்னும் விலங்கேயாமென்று துணிதல்போலும் அனுமானப் போலியாமெனவறிக.

இனி, பொருநையாறுடைமையும் வஞ்சியென்னும் பெயருடை மையும் கருவூரென்னும் பெயருடைமையும் ஆகிய மூன்றேதுக்

கூட்டமுடைமையால் அவையுள்ள கொங்கு குடபுலமாகுமென்று துணியலாமெனின் அதுவும் பிறழ்ச்சியுடையதாம். எப்படியெனில் தூம்புடை நெடுங்கை வேழமென்றமையால் நீண்டபுழைக்கையும், வேழம் என்னும் பெயருடைமையும், 'காட்டானையுண்டகனி' என்றமையால் ஆனையென்னும்பெயருடைமையுமாகிய மூன்றேதுக்கூட்டமுடைமையால், வெள்ளில (விளங்கனியை) யுண்டதாகச்சொல்லும் நோய்விசேடத்தை யானையென்னும் விலங்கேயாம் என்றுதுணிவது போலும் அநுமானப்போலியாமெனவறிக.

இனி இவற்றுடன் சேரர்மலைப்பெயரையுடைய கொல்லிமலை அடுத்திருப்பதுபற்றி நான்கேதுக்கூட்டத்தால் அவையுள்ள கொங்குநாட்டைக் குடபுலமென்று துணிவோமெனில், சேரரூர்ப் பெயருடையதாகிய கீழ்கடற்றொண்டியையும் சேர்த்துக்கொண்டால் ஐந்தேதுக்கூட்டத்தால் மிகவும் வலியுடையதாகிக் கீழ்கடலளவுங் குடபுலமென்று துணிதலாம்போலுமென்னும் விதண்டாவாதத்தே திருமையால் நிரசிக்கப்படுமாதலால் அதுவும் சாதகமாகாதென வறிக.

இனி "குடகொல்லி" "கொல்லிக்குடவரை" என்று சொல்லப்பட்டிருப்பதால் கொல்லிமலையுடைமைபற்றிக் குடபுலமென்று துணியலாகாதோவெனின், அக்கொல்லிக்குடவரை கொங்கின்புறத்துள்ளது என்று நிச்சயிக்கப்பட்டாலன்றிச் சமுசயமாயிருக்குமளவும் அதனாலும் அஃதுள்ளவிடம் குடபுலமென்று துணியப்படாதெனவறிக. அக்கொல்லி சேரர்க்குரிய கொல்லிக்குடவரை யாகாதென்பது பின்பு "சேரர் கொல்லிமலை யாது" என்னும் ஆராய்ச்சியாலறிக.

ஆதலால், சேரர்க்குரியதோ? அன்றோ? என்னும் ஐயநிலைக் களமாகிய வஞ்சி, கருவூர், பொருநை, கொல்லி முதலிய பெயர்ப் பொருள்களைக்கொண்டு, அவையுள்ள கொங்கு குடபுலமென்று துணிவது தவறுமெனவறிக. இதுகாறும் கொங்கு குடபுலமா மென்பதற்கு வாதககூறியிற் சொல்லுஞ்சாதனங்களை ஆராய்ந்த மட்டில் ஒன்றேனும் வாதககூறிக்குச் சாதகமாகாமலும்; பெரும்பாலும்

எதிர்வாதகக்ஷிக்கே சாதகங்களாகியும், வாதகக்ஷிக்குப்பாதகங்களாகியுமிருப்பதால் இவற்றாற்கொங்கு குடபுலமென்று துணியப்படாததாயிற்று.

---

4. கொங்கு குடபுலமாகாதா?

இனி எதிர்வாதசக்ஷியிற் கொங்கு குடபுலமாகாதென்று தெளிதற்கும் பலசான்றுகளுள்ளன. அவற்றையும் வேண்டுமானால் விசாரிப்போம்.

அவையாவெனின்:—

1. கொங்குநாடு, நடுநாடாயிருக்கிறதன்சொரூபத்தால், புடைநாடாகிய குடபுலமாகமாட்டாதென்பதைத் தானேகாட்டுவது.

2. "கொங்கிளங்கோசர் தங்கள் நாட்டகத்து, நங்கைக்கு விழவொடுசாந்திசெய்ய, மழைதொழிலென்றும் மாறாததாயிற்று" எனச்சிலப்பதிகாரத்துள் மலைமண்டலத்தின் வேறாகச்சொல்லியிருப்பது.

(சிலப்பதிகாரம், உரைபெறுகட்டுரை–2.)

3. குடகக் கொங்கரும் மாளுவவேந்தரும், கடல்சூழிலங்கைக்கயவாகுவேந்தனும், மெந்நாட்டாங்கண்........வந்தீகென்று" வரம்வேண்டியது.

(சிலப்பதிகாரம், வரந்தருகாதை–159 முதல் 163 வரை அடிகள்.)

4. "இவளோ, கொங்கச்செல்வி குடமலையாட்டி தென்றமிழ்ப் பாவைசெய்ததவக்கொழுந்து" எனக்கண்ணகிக்குப் பின்னிகழுஞ்சிறப்புத்தோன்றத் தெய்வங்கூறியது.

(சிலப்பதிகாரம், வேட்டுவவரி–47, 48 அடிகள்.)

5. "மைந்தராடியமயங்குபெருந்தானைக் கொங்குபுறம்பெற்ற கொற்றவேந்தே..................வஞ்சி முற்றம் வயக்களனாக அஞ்சாமறவராட்போர்பழித்துக் கொண்டனைபெருமகுடபுலத்ததரி" என்ற 373-ம் புறப்பாட்டு.

6. வில்லவன்கோதைவேந்தற்குரைக்கும் நும்போல்வேந்த) நும்மோடிகலிக் கொங்கர்செங்களத்துக் கொடுவரிக்கயற் கொடி, பகைப்புறத்துத்தந்தன ராயினுமாங்கவை திசை முகவேழத்தின்செவியகம்புக்கன. (சிலப்பதிகாரம் காட்சிக் காதை—151 முதல் 155 வரை அடிகள்.

7. மாகெழுகொங்கர்நாடகப்படுத்த வேல்கெழுதானைவெருவரு தோன்றல்" என்ற பதிற்றுப்பத். 22-ம்பாட்டின் 15-16-ம் அடிகள்.

8. கொங்கரொடு குடபுலத்துக்கோமன்னர் திறைகொணர என்ற பெரியபுராணவாக்கியம். புகழ்ச்சோழநாயனர் புராணம், செய்யுள் 11.

9. குடிசூழ்கொங்கர்குடபுலத்தார் கொணருந்திறைகண்டிடல் வேண்டி என்ற கருவூர்ப்புராணவாக்கியம் (எறிபத்தச் சருக்கம். செய்யுள். 5.)

10, சேயகொங்கர்நாடணைந்தார்திருவாரூரர்சேரருடன் என்ற பெரியபுராணவாக்கியம். (கழறிற்-பு. செய்யுள். 139.)

11. கொங்கர்நாடுகடந்துபோய்க் குலவுமலைநாட்டெல்லையுற என்ற பெரியபுராணவாக்கியம். (கழறிற்-பு. செய். 40.)

சேந்தமிழ்.

விடுகதைவிஞ.

மூன்றெழுத்தி லொருபொருளா முதலெழுத் தகன்றதாகில்
ஆன்றதோர் வேதத்தோடு அடவிவாழ் விலங்குமாகும்
என்றநன் முதலேயாகி லேற்பதாங் கடையுஞ்சேர்ந்தால்
வான்றிகழ் குருவின்றேவி வரும்பொரு ளுரைத்திடீரே?

M. Sivagurunatha Pillai.

Konapet.

235

ஸ்ரீ.

மதிப்புரை,

ஜாதகபஞ்சசித்தாந்தம்:— இத்தகைய நூலொன்று கிடைக்கப் பெற்றோம். இது யாவரும் மோஹமாகக்கொண்டு, படித்துப் பலன் றெரிந்து சுகதுக்கங்களை முறையே அதிகமாகவும் குறைவாகவும் ஆக்கிக்கொண்டு சுகஜீவிகளாகவே இருக்கும்படியாகச் செய்விக்கக் கூடிய ஜோதிட நூலாகும். இந்தப்புஸ்தகம், நமக்குத் தினப்பழக்கத் தில் அவசியம் தினந்தோறும் கண்டுகொள்ளக்கூடியபடி அவ்வளவு சுலபமான வசனநடையில் விளக்கமாக எழுதப்பெற்றிருக்கிறது. ஒரு ஜோதிடரின் துணையில்லாமலே ஒவ்வொருவரும் அறிந்துகொள்ளக் கூடியபடி இப்புத்தகம் எழுதப்பெற்றிருத்தலால், இப்புத்தகம் ஒவ் வொருவர் கிருஹத்திலும் இருக்கவேண்டியதவசியம். இது, விக்ர மாதித்யராஜன் காலத்தில் இருந்த ஜோதிஷவித்வானுன சத்யாசார்ய ரால் ஸம்ஸ்க்ருதபாஷையில் எழுதப்பெற்றிருக்கும் ஜாதகபஞ்சசித் தாந்தத்தின் மொழிபெயர்ப்பின் முதற்பாகமாகும். இதனை மொழி பெயர்த்தவர்:— திருநெய்த்தானம் ஜோதிடவித்வான் ப்ரம்மஸ்ரீ வா தூல ஆ. தி. ஸ்ரீநிவாஸாச்சாரியாரவர்கள். இதனைப் பதிப்பித்தவர் திருவையாறு மகா-ா-ா-ஸ்ரீ R. தாமோதரநாயுடு அவர்கள். இருவ ரும் ஜோதிடபண்டிதர்களும் லோகோபகாரிகளும் தேசாபிமானிக ளும் பாஷாபிமானிகளுமானதால், இப்புத்தகத்தில் அம்மொழி பெயர்ப்புடன், வேறு பல ஜோதிடநூல்களிலுள்ள ஸூக்ஷ்மங்களின் அவசியமானவற்றை வேண்டுமிடங்களிற் சேர்த்து அவற்றுக்குத் தனிக்குறியிட்டுப் படிப்பவர்கட்கு விஷயங்களில் நேரும் சம்சயங்களை நிவிருத்திபண்ணி ஜோதிடத்தை நம்பமாட்டோம் என்று சொல்பவர் களையும் நம்பும்படியும் அதன்படி அநுசரிக்கும்படியும் செய்துவைத் திருக்கிறார்கள். வேண்டுவோர் இதன் பதிப்பாசிரியருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

பத்திராதிபர்.

சாஸ்திரக் குறிப்புகள்.

மாலைக்காலத்துச் சிவந்தவானம்:—பெருந்தொகையான சிறு துகள்கள் சூரியகிரணங்கட்கும் பூமிக்கும் இடைப்பட்ட காற்றில் இருக்கின்றனவென்றும், அவை சூரிய கிரணங்களால் உண்டாக்கப் படும் நீராவிகளை யடக்கி நீராக்கி விடுகின்றனவென்றும், அதனாலே யே அடுத்த 24 மணிநேரத்திற்குள் மழையையுண்டுபண்ணுவதற்குக் காரணம் உண்டாகிறதென்றும் தோன்றுகிறது.

காலையிற்சிவந்தவானம்:—அந்த இடைப்பட்ட காற்றில் அடங் கிய சிறு துகள்களில் நிறைந்துள்ள நீர்த்துளிகள் மாலைக்காலத்தின் ஈரக்காற்றினால் ரக்ஷிக்கப்பெற்றுவிடுகின்றனவென்றும், அல்லாவிடில் அந்த நீர்த்துளிகள் உடனே சூரியகிரணங்களால் மறுபடியும் ஆவியா க்கப் பட்டுப்போய்விடுமென்றும், அதனாலேயே அந்த நீர்த்துளிகள் பெரிதாகச் சேர்க்கப்பெற்று அடுத்தநாளில் நிச்சயமான மழையை யுண்டுபண்ணக் காரணமாகிறதென்றும் தோன்றுகிறது.

R. A. Gregory.

சிந்து சுதேச காலேஜ்.

ஸிந்துவிலுள்ள ஐதராபாத்தில் அக்டோபர்மீ முதல்தேதி மிஸஸ் பெஸண்டம்மையின் ஜன்மதினக்கொண்டாட்டத்தன்று மிஸ்டர் ஷட் என்பவர் ஒரு சுதேச காலேஜைத் திறந்து வைத்து ஒருநீண்ட உபந்யாஸமும் செய்தார். அதில் அவர் "இந்தக்காலேஜில் படித் துத் தேறியமாணவர்க்குக் கவர்ன்மெண்ட் உத்யோகம் கிடைக்காத பக்ஷத்தில் வேறு வழிகளில் உத்தியோகம் ஸம்பாதித்துக் கொடுக்கப் படவேண்டும்" என்று சொன்னார். அதற்கு மூலதனம் ரூ 35,000 இதுவரையில் சேர்ந்திருப்பதாக விளம்பரப்படுத்தப்பெற்றது.

"திருமயம் நாஷனல் ஸெக்கண்டரி ஸ்கூல்"

சற்றேறக்குறைய ஐந்நான்கு ஆண்டாகக்கல்வியில் விசேஷமெனச் சிறப்போங்கிநடைபெறும் இவ்வூர் ஸ்டேட் லோயர் ஸக்கண்டிரி ஸ்கூ

வின் 2—வது 3—வது பாரம் (Eorm) மாணவர்கள்; இதற்கு 3 மைல் தூரம் இராமச்சந்திர புரத்தில் பெரிய தனவந்தர் ஒருவரால் சென்ற வருஷம் முதல் புதிதாய் நடத்தப்படும் (Free High School) ல் வாசிக்கக்கூடுமென நினைத்துப் புதுக்கோட்டை மகா—ா—ா—ஸ்ரீ தர்பாரவர்கள் தங்களுடைய ஷை இரண்டு வகுப்புகளையும் எடுத்துவிட்டார்கள்.

தனி வழி நடக்கவும் பெற்றோர்களைப் பிரிந்திருக்கவும் இயலாத அதிபால்யமான ஷை மாணவர்கள் பிறவூரேகி கல்வி பயில்வது பலவித கஷ்டத்திற்கும் பெற்றோர்களுடைய இடைவிடாத மனக்கவலைக்கும் ஹாஸ்பதமாகி மேற்கல்விக்கே இடையூறுவரும்போலுமிருந்தது.

அதை நிவர்த்திக்க இவ்வூர் வாசிகள் அவ்வகுப்புகளை முன்போலவே நிலைப்பிக்க முயன்றதில் பயன்படாமல், ஜனங்கள் தங்கள் செலவிலேயே ஒப்புக்கொண்டால் Recognise செய்து கொள்வதாக மகா—ா—ா—ஸ்ரீ தர்பாரவர்களிடமிருந்து உத்தரவு பெற்றார்கள். அவ்விதம் ஒப்புக்கொண்ட ஜனங்கள் "நாஷனல் ஸக்கண்டரி ஸ்கூல்" என்று பெயரிட்டு இந்த ஒரு வரு காலமாய் வெகு ஊக்கத்துடனும் சிறத்தையுடனும் அதி சிரமத்தின் பேரில் நடத்தி வருவது யாவரும் அறிந்த விஷயம்.

இப்பெரும் தருமத்தை நடத்தப் புகுந்த ஜனங்கள் ஏராளமான பொருளுதவி யில்லாமல் முடியாதென்பதை நினைந்து ஆரம்பத்தில் அதைரியமடைந்தார்கள்.

ஆனாலும் "ஊக்கமது கைவிடேல்" என்ற மெய்மொழியைக் கைவிடாது இவ்வூராரில் வக்கீல் மகா—ா—ா—ஸ்ரீ K. சத்தியமூர்த்தி அய்யரவர்கள் பிரஸிடெண்டாகவும் மற்றும் சில முக்கியஸ்தர்கள் மெம்பர்களாகவும் கமிட்டி ஏற்பட்டு ஸ்கூலை நன்கு மானேஜ் செய்து வெகு சிறமப்பட்டு Subs cription களும் வசூல்செய்து வருவதில் இது வரை ரூ 5000—ம் சொச்சம் சேர்ந்திருக்கிறது; அது பூறுவும் காருண்யமும் தர்மசிந்தனையும் வாய்ந்த நமதுநாட்டுக்கோட்டைத் தன

வைசியர்களுடைய பேருதவிதான். இன்னும் அநேகர்கள் Promise செய்திருக்கிறார்கள். அவைகளையும் சீக்கிரம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இதுபோல் மற்றவர்களும் தங்கள் தங்களால் இயன்றவாறு உதவும்படி கோரப்படுகிறார்கள்.

1918 ளூ ஜுன் மீ முடிய வசூல் விபரம்:—

இராயவரம் மகா-ா-ா-ஸ்ரீ		ப. வ. இராமஞ்செட்டியாரவர்கள்	ரூ 2001—0—0
,,	,,	ராம. அ. ராம. அவர்கள்	401—0—0
அரிமளம்	,,	மு. வ. ,,	100—0—0
,,	,,	மு. ராம. கு. ,,	100—0—0
,,	,,	வ. பெரி. அரு. ராம.	100—0—0
,,	,,	அ. செ. சு. ராம. ,,	250—0—0
,,	,,	அ. பெரி. பழ. ,,	100—0—0
இராங்கியம்	,,	வ. நா. வ. ,,	750—0—0
இராமச்சந்திரபுரம்		மு. மு. கு. ,,	250—0—0
முதலைப்பட்டி ,,		நகரத்தார்கள் ,,	1000—0—0
		ஆக ரூ.	5052—0—0

பின் வசூல்களையும் பிரசுரிக்கப்படும்.

ஷை தனத்தை கமிட்டியார் இவ்வூர் கோவாப் ரேடிவ் சுசைடியில் அப்போதைக்கப்போது Dposit செய்து வருகிறார்கள். இது நல்ல ஏற்பாடு. பணப்பொறுப்பிற்கு மிக்க சாவதானம். கடன்வாங்கித் தொழில் செய்து ஜீவிக்கும் ஏழைகளுக்கும் ஒரு பெரிய தருமம்.

சென்ற எப்பிரல் மீ த்தில் நடந்த வருஷாந்தர பரீக்ஷையிலும் I—வது பாரத்தில் எல்லா மாணவர்களும், II—வது பாரத்தில் இருவர் தவிர எல்லா மாணவர்களும் III—வது பாரத்தில் எல்லா மாணவர்களும் Pass ஆகியிருக்கிறார்கள். இது வெகு அரிது. உபாத்தியாயர்கள் அதிசிறத்தையாயும் மனப்பூர்வமாயும் உழைத்திருக்கிறார்கள் என்பதைக் காட்டுவதோடு கமிட்டியார்களை விடாமுயற்சியோடு நடத்தும்படி தூண்டுவது போலும் காணுகிறது.

இந்தியர்களுடைய தற்காலத்திய முக்கியகொள்கையே நாஷனல் படிப்பை விருத்திசெய்யவேண்டுமென்பதுதான். அதற்கேற்க, இயற்கையாகவே இத்தகைய தருமம் வாய்த்தது நமது கமிட்டியார்களுடையவும் அவர்களுக்குச்சாதகமாய்ப்பொருளுதவி செய்யும் தனவான்களுடையவும் இகபாசாதகத்தைக்கருதிக்கடவுளே கிருபைகூர்ந்திருப்பது போலும்.

இச்சமஸ்தானத்தியக் கல்விச் சட்டப்படி ஒவ்வொருகல்விச்சாலையும் ஸர்க்காரவர்களிடமிருந்து கிராண்டுபெற Right இருப்பதாகத் தெரிகிறது. அதுவிஷயத்திலும் கமிட்டியார்கள் பிரேரேபணை செய்வார்களென்று நம்பப்படுகிறது.

Sympa thiser.

Department Of Agriculture, Pudukkottai State.

நெற்பயிருக்கு எருவிடுதல்,
Paddy Manuring

ஜீவஜெந்துக்கள் போலவே, பயிர், செடிகொடிகளுக்கும் உணவு அவசியம் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இப்பயிருணவை உரம் அல்லது எரு என்று சொல்லுகிறோம். பயிரின் உணவில் முக்கியமாய் உப்புவாயு அல்லது தழைசத்து (Nitrogen), சாம்பல் காரம் அல்லது தாள்சத்து (Potash), பாஸ்கரம் அல்லது தானிய சத்து (Phosphoric acid) என்று மூன்று வகைச் சத்துக்கள் உண்டு. இவை எல்லாப்பயிர்களுக்கும் அவசியம். ஆனால் இம்மூன்று சத்துக்களில் தழைப்பயிர்களுக்கு உப்பு வாயுவை அதிகமாயும் தாள் கிழங்கு முதலிய பயிர்களுக்குச் சாம்பல் காரத்தை அதிகமாயும் தானியப்பயிர்களுக்குப் பாஸ்கரத்தை அதிகமாயும் போடவேண்டும். எந்தப் பூமியில் என்ன பயிர்செய்யவேண்டுமோ அப்பூமியின் மண்ணின் இயல்பும் அம்மண்ணில் அப்பயிருக்குவேண்டியவளவு எருச்சாரம் இருக்கிறதா என்றும், இன்னும் எந்தச் சத்து எவ்வளவு தேவை என்றும் ஆராய்ந்து பார்த்தபிறகுதான் அந்நிலத்திற்கு இன்ன

உரம் சிலாக்கியம் என்று தீர்மானிக்கலாகும். பொதுவாக நெற்பயிர் சேற்றில் நடப்படுவதாலும் பயிராயிருக்கும் காலத்திற் பெரும்பான்மை வயலில் தண்ணீர் தங்கியிருப்பதாலும் நெற்பயிருக்கு எருவிடுதல் யுக்தி புத்தியை அனுசரித்ததாயிருக்கவேண்டும்.

நாற்று நடுவதற்குமுன் நிலம் தொளி செய்யப்படுவதால் மண் கட்டிகள் உடைந்து சிறு சிறு மணல்களாக மாறி இப்படி வருஷா வருஷம் உழுவதால் அச்சிறு மணல்களும் சிறு சிறு அணுக்களாக மாறி களியுள்ள மண்ணாகிறது. களியுள்ள மண் உழுவதற்குக் கடினமாயும் தண்ணீர் வடியவொட்டாமலுமிருக்கும். ஒரு புஞ்சையில் ஒரு கிராமம் எடையுள்ள மண்ணில் 130 லட்சம் மண் அணுக்கள் இருந்ததாகவும் 20 வருஷமாய் நஞ்சையாயிருக்கிற வயலில் ஒரு கிராமம் மண்ணில் 203 லட்சம் மண்பொடிகள் இருந்ததாகவும் ஒரு பரீக்ஷையில் தெரிகிறது. இப்படி வயலின் மண் வருஷா வருஷம் களி சாஸ்தியுள்ள மண்ணாகமாறுகிறதினால் தண்ணீர் வடிகால் வசதி ஏற்படாமலும் காற்றோட்டத்திற்கு இடமில்லாமலும் பயிர் கெட்டுப் போகின்றன. ஆகையால் இதைத்தடுப்பதற்கான உரங்களைக் கையாடவேண்டும். ஏனெனில சில சேர்க்கை எருவான நவச்சார உப்புக்களை (artificial manure of the type of ammonium sulphate) பூமியிற் போட்டால் ஏற்கனவே நிலத்திலிருக்கப்பட்ட மண் அணுக்களை இன்னும் சிறு பொடிகளாகச் செய்து களியை அதிகப்படுத்தும். சுத்த மணல் நிலத்தில் தண்ணீர் தாராளமாய் பிரவேசித்தபோதிலும் தங்காமல் உடனே வடிந்து போய்விடும். ஆனால் தழை குப்பை தொழு எரு முதலிய நாட்டு இயற்கை உரங்களைப்பூமியில் போடுவதினால் ஹ்யூமஸ் (humus) என்னும் மக்கின இந்திர வஸ்து உண்டாகி நிலத்தில் காற்றுப்புகவும் தண்ணீர் தாராளமாய்ப்பிரவேசித்து உடனே வடிந்து விடாமல் தங்கியிருந்து பயிருக்கு நாளடைவில் கொஞ்சம் கொஞ்சமாக உதவவும் நேரிடுகிறது. இன்னும் வயலில் தண்ணீர் இருப்பதால் சீக்கிரம் நீரில் கரையும் பொட்டிலுப்புப் போன்ற உரமாயிருந்தால் அவ்வுரம் வயலைவிட்டு சீக்கிரம் வடிந்துபோய் நமக்கு நஷ்டத்தை உண்டாக்கும். ஆகையால் நாம் தேர்ந்தெடுக்கும் உரம் சீக்கிரம் கரைந்து போகாததும் அப்படிக் கரைந்தாலும் பூமியில் ஒட்டக் கூடியதாகவுமுள்ளவைகளாயிருக்கவேண்டும்.

ஒரு நிலத்தில் எருப்போடுவதற்கு முன் மேலே சொன்ன உரச்சத்துக்கள் அந்நிலத்தில் இருக்கிறதாவென்று ஒருவாறு ஊஹித்தறியலாம். எப்படி என்றால் வளருகிற பயிர் கொஞ்சம் செழுமை தட்டினால் நிலத்தில் தழை சத்தாகிய உப்புவாயு குறைவென்றும்; தழை அதிகமாய் வளர்ந்தால் உப்புவாயு அதிகமென்றும், தாள் உரப்பாய் வளர்ந்து பயிர்நிமிர்ந்திருந்தால், சாம்பல்காரம் அதிகமென்றும், அப்படிக்கில்லாவிட்டால் நிலத்தில் சாம்பல்காரம் குறைவென்றும், தாள் தழை அதிகமாயும் தானியம் குறைவாயுமிருந்தால் பாஸ்காம் குறைவென்றும், எளிதில் தெரிந்துகொள்ளலாம். பொதுவாக சாம்பல்காரம் அநேகமாய் நிலங்களில் வேண்டியவளவு இருக்கிறதென்றுதெரியவருகிறது. அபூர்வமாய் ஒவ்வோர் இடங்களில் இந்த சத்து இல்லாமலிருந்தால் அப்போது உபயோகப்படுத்தவேண்டுமே ஒழிய மற்ற சமயங்களில் மற்ற உரங்களோடு உபயோகப்படுத்தலாகாது. ஏனெனில் மகசூல் கம்மிப்படும். அல்லது உரத்திற்குச் செலவழித்த தொகைக்குத் தகுந்த மகசூல் கிடைக்காது. பொதுவாக நஞ்சைக்குத் தகுந்த உரம் தழைகள் என்றே சொல்லலாம். ஏனெனில் மூன்று வகைச் சத்துக்களுள்ள பூரணமான உரமாயிருக்கிறபடியால் கோயம்புத்தூர் விவசாயப்பண்ணையில் பரீக்ஷை செய்ததில் ஒரு ஏகர் நிலத்திற்கு **4,000** இராத்தல் எடையுள்ள தழைகள் போதுமென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இது இடங்களுக்குத் தகுந்தபடி ஏற்றத்தாழ்ச்சி ஏற்படும். தழைகளைப் பார்க்கிலும் புண்ணாக்குகளில் விசேஷ உரமிருககிறபடியால் சுமார் ஏக்கர் ஒன்றுக்கு **400** ராத்தல் புண்ணாக்கு உரம் போட்டால் போதுமானது. ஒரு கண்டி பாரம் (500 ராத்தல்) ஆமணக்கு அல்லது கடலைப்புண்ணாக்கிலுள்ள உரம் 5 வண்டி சரியாய் போஷிக்கப்பட்ட மாடுகளின் எருவுக்குச் சமானம். புண்ணாக்கைத்தூள் செய்துகொண்டு நிலத்திற்போடவேண்டும். இத்துடன் பாஸ்கர உரம் சேர்த்துப்போடுவது சிலாக்கியம். தற்காலத்தில் தழை அகப்படுவது கஷ்டமாயிருப்பதாலும் அகப்படுமிடங்களில் விலை சாஸ்தியா யிருப்பதாலும் நிலங்கள் சரியாக உரமிடப்படுவதில்லை. வயலிலேயே ஒருபசுந்தாட்பயிரை வளர்த்து அந்நிலத்திற்குத் தழை உரமாக உபயோகப்படுத்தலாம். கொளிஞ்சி தத்

கைப்பூண்டு, சடப்பு, அவுரி முதலிய பசுந்தாள் விதைகளை நஞ்சையிற் கோட்டையில் சிலர் எள்ளு அல்லது கம்புடன் தழைக்காகத் துவரை விதைப்பதுபோல் விதைத்துச் சாகுபடி செய்யலாம். மூன்று நான்கு மாதத்திற் பயிர் வளர்ந்து வேண்டிய தழை கொடுக்கும். இப்பயிர்கள் ஆகாயத்திலிருக்கப்பட்ட உப்பு வாயுவைக் கிரகிக்கும் குணமுடையதாதலால் நமக்கு உப்புவாயு உரம் லாபமாகிறது. மற்ற, பாஸ்கரம் சாம்பல்காரம் என்ற உணவைப்பசுந்தாட் பயிர்கள் பூமியினின்றே எடுத்துக்கொள்ளுகின்றன. கோயம்புத்தூர்ப்பண்ணையில் வெளியே யிருந்து காட்டுக்குழை கொண்டுவந்து அதை ஒரு நிலத்திலும் அதே விஸ்தீரணமுள்ள மற்றொரு நிலத்தில் அவ்வளவு நிறையுள்ள தக்கைப்பூண்டு பசுந்தாட் பயிரை வளர்த்து மடக்கி உழுது நாற்று நட்டதில் முந்திய நிலத்தில் ஏகர் ஒன்றுக்கு 4,490 ராத்தல் [அதாவது 1,796 பட்டணம்படி] நெல்லும் 5,811 ராத்தல் வைக்கோலும் தக்கைப்பூண்டு நிலத்தில் ஏகர் ஒன்றுக்கு 4,200 ராத்தல் [1,680—படி] நெல்லும் 4,400 ராத்தல் வைக்கோலும் கண்டிருக்கிறது. இந்தச் சொற்ப வித்தியாசம் வெளியே இருந்துகொண்டுவந்த தழைகளால் அந்தப் பூமிக்கு ஜாஸ்தியாக மூன்று வகைச் சத்துக்களும் தக்கைப்பூண்டால் மற்ற நிலத்துக்கு ஏற்கனவே உள்ள உரங்களோடு உப்பு வாயுமாத்திரம் ஜாஸ்தியாகக் கிடைத்திருப்பதால்தான். ஆனால் இந்தப்பசுந்தாள் தழையோடு சூபர்என்ற பாஸ்பர உரத்தை உபயோகப்படுத்தினால் காட்டுத் தழையைப் பார்க்கிலும் ஜாஸ்தியான மகசூல் கொடுக்கிறது. மேலே சொன்னதெல்லாம் ஜனங்கள் பூமிக்கு உரத்திற்காக எவ்வளவு பணம் செலவழிக்க முடியுமோ அந்தத்தொகைக்கு ஜாஸ்தியான உரத்தைச் சம்பாதித்து அதிக மகசூல் எடுப்பதற்காகத்தான். இரண்டு மூன்று ரூபாயில் ஒருபசுந்தாட் பயிரை வயலில் சாகுபடி செய்யலாம். இத்துடன் நாலு ரூபாய் விலைபெறும் ஒருஅந்தர் (112 ராத்தல்) சூபர் பாஸ்கர உரத்தை உபயோகப்படுத்தினால் நல்லவிளைவு உண்டாகுமென்பதற்குத் தடையில்லை. ஆகையால் இம்முறையில் ஒரு ஏக்கர் நிலத்திற்கு உரம்செய்ய **10** ரூபாய்க்கு மேலாகாது. ஆனால் காட்டுக்குழை வாங்கவேண்டுமானால் இருபது முப்

பதுரூபாய்க்குமேல் பிடிக்கும். மேற்படி பசுந்தாள் விதைவேண்டிய வர்கள் புதுக்கோட்டை ஸர்க்கார்ப் பண்ணை மானேஜரிடமிருந்தும் ஆலங்குடி கிருஷிகர் சங்கத்திலிருந்தும் விலைக்குப்பெற்றுக்கொள்ள லாம்.

இப்போது நெற்பயிருக்கு சிலாக்கியமாகச் சொல்லப்பட்ட பாஸ்கர உரத்தைப்பற்றிச் சற்று விவரிப்போம். இது தானியத்தை விரு த்திபண்ணுகிறசத்தாகையால் நெற்பயிருக்கு ரொம்பஅவசியமானது. பாஸ்கரம் (Phosphoric acid) இயற்கையில் எலும்பிலும் பூமியிலி ருந்து எடுக்கப்படுகிற சுண்ணும்பு உப்புக்களிலும் (Phosphates of lime) அதிகம் இருக்கிறது. சுண்ணும்பு உப்புக்களைப் பொடிசெய்து உபயோகிக்கவேண்டும். எலும்பில் நூற்றுக்கு 22 பாகம் பாஸ்காமும் 4பாகம் உப்புவாயுவுமிருக்கிறது. எலும்பை நன்ருய்ப் பொடிசெய்து உபயோகித்தால்தான் சிக்கிரம் பயிருணவாக ஆகும். இவைகள் நாளா சரிதியில் பூமியில் கரைந்துபயிருக்கு உணவாகும். கோயம்புத்தூரில் **500** ராத்தல் எலும்புத்தூள் போட்டநிலத்தில் ஏகர் ஒன்றுக்கு ரூபாய் **112** லாபம் கிடைத்திருக்கிறது. இது சேர்க்கப்பட்ட நிலம் வருஷா வருஷம் செழிப்புள்ளதாக ஆகும். எலும்புத்தூளிலும் சுண்ணும்பு உப்புத்தூளிலும் கந்தகத்திராவகம் (sulphuric acid) சேர்த்து தயார் செய்யப்படுகிறதுதான் சூபர் பாஸ்கரம் என்பது. இது எளிதில் தண்ணீரில் கரையும். உடனே பயிருக்கு உணவாகும். ஆகையால் இதைப்பூமியில் பயிர்இருக்கும்போது உபயோகப்படுத்த வேண்டும். இப்போது நம் விவசாயிகள் தொழு, எரு, முன்சிபல் குப்பை, சாம்பல், தழைமுதலிய உரங்களை நிலங்களுக்கு உபயோகப் படுத்துகிருர்கள். அப்படிப்பட்ட நிலங்களில் தானியத்தைக் கொடுக் கிற சத்தாகிய பாஸ்கர உரம் குறைவானதால் பயிர் தழைத்து வந் தும் தக்கபடி கதிர் வாங்காமல் போகிறது. இந்தமாதிரி நிலங்களுக்கு மேற்படி தழை, புண்ணுக்கு, குப்பை, தொழு எருவோடு ஒரு அந்தர் சூபர் பாஸ்கரத்தை உபயோகப்படுத்தினுல் மிகுதியான லாபத்தை அடையலாம்.

இப்படி நிலவளப்பம்குறையாமலிருக்கும் பொருட்டுபயிர்களாலெடுக்கப்படுகிற அளவுஉப்புவாயுசாம்பல்காரம்பாஸ்கரம் என்றபயிருணவுகளை உரமாக வருஷா வருஷம் நிலத்திற்குத் திரும்பப் போடவேண்டும். அப்படிச்செய்தால்தான் பூமி செழிப்படைந்து வருடந்தோறும் ஜாஸ்தியான மகசூல் கொடுக்கும்.

இம்மாதிரியான நல்லஉரங்களாகிய புண்ணாக்குகளையும் எலும்புகளையும் நாம் உபயோகப் படுத்தாமல் அவைகளை அயல்தேசங்களுக்கு ஏற்றுமதி செய்வதால் அந்நாடுகள் செழிப்படையவும் நம் நிலங்கள் வரவர வளப்பம் குன்றிப்போகவும் நேரிடுகிறது. கம்பேனி ஏஜண்டுகள் உள் நாட்டில் 2,240 ராத்தல் கொண்ட ஒரு டன் எலும்புக்குப்பதினெட்டு ரூபாய் கொடுத்து வாங்குகிறார்கள். அதைக் கம்பேனியார் தங்கள் யந்திரசாலையில் பொடிசெய்து டன் ஒன்றுக்கு 70-முதல் 90 ரூபாய் வரை விற்கிறார்கள். ஆகையால் நெல் அறைக்கும் அல்லது தண்ணீர் இறைக்கும் நீர் ஆவி அல்லது எண்ணெய் இயந்திரங்கள் வைத்திருப்பவர்கள் ஒரு எலும்புப்பொடி செய்யும் இயந்திரத்தை வாங்கி அதை இத்துடன் சேர்த்து மற்றவைகளுக்கு வேலையில்லாமலிருக்கும்போது வேலைசெய்து வந்தால் அவர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும். இம்மாதிரி தஞ்சாவூர் ஜில்லாவில் நீடாமங்கலத்தில் ஒருவர் வேலைசெய்து வருகிறார். இந்த எலும்புஉரமாகிய பாஸ்கர உரத்திற்கு வரவர கிராக்கி வந்துகொண்டிருக்கிறது. எலும்பு உடைக்கும் இயந்திரம் சுமார் நானூறு ரூபாயாகும். இதை வேலை செய்வதற்கு 5 குதிரைபவர் எஞ்ஜின் போதும். இதைப் பற்றியும் வேறு விவசாய விஷயமாயும் விஸ்தாரமாய் அறிய விரும்புவோர்கள் புதுக்கோட்டை ஸர்க்கார்ப்பண்ணை மானேஜரிடமிருந்தும் விவசாய இன்ஸ்பெக்டர்களிடமிருந்தும் தெரிந்துகொள்ளலாம்.

ஆலங்குடி
18—3—16.

K. R. சங்கரய்யர்,
விவசாய இன்ஸ்பெக்டர்

தேஹபலம்.

உலகில் மனிதர் தமது தர்மத்தை ஸாதிப்பதற்கு அவசியமாகக் கொள்ளவேண்டிய முயற்சிகளில் முக்கியமானவை, தேஹசுத்தமும் தேஹபலமுமாம் ஒவ்வொரு ஸ்திரீயும் அழகையும் மரியாதையையும் விரும்புவதுபோலப் புருஷர் அவசியம் விரும்பவேண்டுவது தேஹபலமேயாகும். இதில்லாவிடில் வாழ்நாள் வழியாக நடந்தேறுதென்பது திண்ணமேயாகும். "சரீசமாத்யம் கலுதர்ம ஸாதனம்" "நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்" என்னும் பழமொழிகள் அநுபவ வாக்கியங்களேயாம். தளர்ச்சியடையாத தேஹசவுக்கியமும் உலகில் இன்பவாழ்வும் ஆகிய இரண்டுமே எல்லா மனிதர்களாலும் விரும்பப்படுகின்றன. சரீரசவுக்யமில்லாவிடில் உலக இன்பம் திருப்தியாகக்கொள்ளுதல் அரிதாகும். ஆகையினுல், தேஹசவுக்யத்தைப்பற்றிய உதாரணவாக்கியங்களை மிகுதியாக எடுத்து உதஹரிக்காமல், எடுத்துக்கொண்ட விஷயத்தின் மேற்சொல்வோம்.

மனிதன் உலகவாழ்வில் வெற்றிபெற்று ஏறுவதற்கு அவசியம் வேண்டியவை சவுக்யமும் பலமுந்தான் என்று முன்னரே குறித்திருக்கிறோம். இளைத்து நடுக்கங்கொண்ட மனிதர்கட்குப் பெருமை விசேஷமாகப் பலபோராலும் கொடுக்கப்படுவதில்லை.

அநுபவமுறையில் நாம் ஒவ்வொருவரும், ஒருவனை அவனது தோற்றத்தைக்கொண்டே, அவன் இத்தன்மையனுக இருக்கலாமென்று எண்ணுகின்றோமல்லவா? உறுதியான தோள்களும் ஒழுங்கான முதுகும் உயர்ந்த இருதயமும் இரும்புபோன்ற எலும்புகளும் சுத்தமான முகவாய்க்கட்டையும் சுத்தமான மூளையும் விரிந்த அறிவும் விளங்கும் மனச்சாட்சியும் உடைய ஒருமனிதனைக்காட்டிலும், இவையொத்து இராத ஒருவன் மேலானவன் என்று ஒருவரும் ஒத்துக்கொள்ளமாட்டார். இவையில்லாமைக்குத் தேஹசவுக்யமின்மையே தகுந்த காரணமாகின்றது.

நமது தேஹசவுக்யம் நமக்குப் போதுமானவளவு திருப்தியாயிருக்கவில்லையென்று நமக்கு நன்றாகத் தெரிந்திருந்தாலும் நம்மி

பெரும்பாலோர் அதனைப்பற்றிக் கவலைப்படுவதேயில்லை. மாணவர்களிற் பெரும்பாலாரும் தேஹசவுக்யத்தின் ஆரம்ப முயற்சியையும் கூடக்கைக்கொள்ளாதவராக இருக்கின்றனர். அந்நிய தேசத்து நாகரிகமென்னும் ஒருவேஷமும் நமது மாணவரது தேஹசவுக்யத்துக்கு ஒரு சத்துருவாக இருக்கின்றது. நம்மிற்சிலர் இப்போது உண்டாயிருக்கும் நவீன நாகரிகத்தில் நுழைந்து, நமது பூர்விக ஆசாரத்தைச் சோரவிட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால், தேஹசவுக்யத்தைப்பற்றியும் தேஹபலத்தைப்பற்றியும் மாணவர்க்குப் போதிக்கவேண்டியது ஒவ்வொரு கலாசாலையின் கடமையாகவும் இருக்கின்றது.

ஒரு மனிதனுடைய மனோசக்தியும் ஆசாரசீலமும் தேஹசவுக்யத்தைப் பின்பற்றியே விருத்தியடைகின்றன. ஏனெனில், நோயற்ற தேஹமில்லாதபோது கவலையற்ற மனமிராது. தேஹபலமும் அவற்றுக்குக்காரணமான தேஹாப்யாஸமும் தவறானவையென்றும் தேஹாப்யாஸமெல்லாம் ஒரு விதமான மனக்கிளர்ச்சியைத் தருவதற்கு மாத்திரமேயன்றி, மற்றியாதொரு பயனையுமளிக்காவென்று சிலர் கருதுகிறார்கள். அது தவறாகும். தேஹாப்யாஸத்தால், நரம்புகளும் எலும்புகளும் வலியடைந்து, ரத்தம் சுத்திகரிக்கப் பெற்று ரத்தச்சுழற்சி அதிக வேகத்தையடையும் அப்போது தேஹத்தில் ஏறியுள்ள அழுக்கான நீர்கள் எல்லாம் வியர்வைத்துளிகளாக வெளியேறிவிடும். அதனால், தேஹம் வியாதியில்லாத்தன்மையைப்பெறும் வியாதியில்லாத் தேஹத்தைப்பற்றியமனமே, ஒவ்வொரு விஷயத்திலும் தீர்க்கமான ஆலோசனையைச் செய்து நல்லதுகெட்டதுதெரிந்து எண்ணியகாரியங்களையினிது முடித்துக்கொண்டுபிறவித்துன்பத்தையும் சுருக்கிக்கொள்ளும் வலியுடையதாகின்றது.

தேஹாப்யாஸ முறைகளில் நவீனமான மேல்நாட்டுமுறைகளைக்காட்டிலும், புராதனமான நமது நாட்டு முறையே மிகுதியும் நமக்குப் பலன்தருவதாகும். கஸரத்து தண்டா இவையெடுக்கும் முறையே, மற்றையபந்துவிளையாடல், குதிரை ஏற்றம் படகு செலுத்துதல் முதலிய காரியங்களைக் காட்டிலும் மேலானதாகக் கருதப்

படுகின்றது. ஏனெனில், இந்தக் கஸரத் அப்பியாஸத்தில், மனமானது ஒரு தொழிலேபோகாடி அதில் ஊன்றிப் பழகிவருகின்றது. இந்த முறையால் செலவும் அதிகப்படாது. நரம்பு எலும்புகட்கு மிகுதியும் உறுதியைக் கொடுக்கின்றது. இந்தக் கஸரத்து அப்பியாஸத்துக்கு ஆயுதங்களும் தேவையில்லை. இந்த அப்பியாஸத்தை ஒரு எளியனும் ஒரு பிரபுவும் சமமாக நின்று ஆரம்பிக்கலாம்.

நமது பெரியோர்களால் கண்டு பிடிக்கப்பெற்றுப் பழக்கத்தில் கொண்டு வரப்பெற்ற இது, நோயாளியையும் சிறு காலங்கழித்து வீரனாகும் வண்ணம் கொண்டு வந்துவிடும். இம்முறையைத் தொடங்கப் புகுமுன், யாவரும் சில அவசியமான கொள்கைகளைப் பற்றியே தொடங்க வேண்டும். அவை:—ஆகார நியமமும் பிராணுயாம நியமமும் ஆகும். இவ்விருநியமங்களும் தேஹத்திலுள்ளவாத பித்தங்களை ஏறவும் குறையவும் செய்யாமல் ஒரு நிலையிலிருத்தி வைக்கும். அதனால் நோய் ஜனிக்கக் காரணமிராது. இந்தநிலையே மனதுக்கு உத்ஸாகத்தைக் கொடுத்துத் தூண்டிவிடும். இவற்றை ஒவ்வொரு மாணவனும் பழகிவரவேண்டுவது 'அவசியமாயிருக்கிறது.

பத்திராதிபர்.

ஸ்ரீ நித்தியானந்தம்.

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ பகவான்.

இந்தியாவின் பரிதாபகரமான நிலைமைக்கண்டு, அமெரிக்காவின் அறிவற்ற நாஸ்திக ஆதரவை ஆலோசித்தும் இங்கிலாந்தின் இனியமாயா விலாசவாத மீசாலகிரியை மீண்டு, நினைந்து, மீதபாகத்தின் பிடியிலாப் படியுறைமாமத சோகத்தையும் வியந்து, பார்க்குமிடமெங்கும் பரிபூரணித்திருக்கும் பரப்பிரம்மம், தனது சித்து அம்சத்திலே, சிந்தையுக் கறந்த சத்துவ மார்க்கத்திலே, மூலத்தைக் காட்டாத மும்மா நிர்க்குண நிலையிலேயே இவ்வளவுக்கும் அடிப்பாகமாயும் இவ்வளவுக்கும் விசேஷமாய் ஆதி

யாயும் அந்நியமாயும் நீந்தாநிற்கும். சுகுணசுகோதய வாரியிலே, மூவிதசக்திகளும் மூனேந்தோங்கும் மூதண்ட அதிகாரச் செங்கோலிலே, பரமஹம்ஸ மூர்த்தியாய் அவதரித்துத் திருலீலை செய்து வந்திருக்கும் திருவிளையாடலை விவரிப்பது எங்ஙனம்? நமக்காகக் கருணைகொண்டு வெளிக்காட்டிய விசித்திரவிவேக விநோத வித்யாவைதிக ஆவிர்ப்பவ அவதார சூசகமர்மத்தை எடுத்தெழுதுவோருக்குத்தான் ஆனந்தம் பெருகி வாராது!

பிரம்மானந்த நிலையிலே நீந்திவிளையாடும் இவ்வானந்த ஸ்வரூபர் பிறந்தஇடத்தை விவரிப்பதோ, பிறந்தும் கொண்ட குழந்தை வடிவத்தைச் சித்திரிப்பதோ, கொண்டும் கடந்த பாலிய பருவத்தை விளக்குவதோ, இந்நடுநிலையிலே, நமக்காகப்பட்ட படாதபாடுகளைத் தாம் விவரிப்பதோ, அல்லது பாடுபட்டுத் தேடிய நித்தியமான அருளை உலகத்தோரெல்லோருக்கும் பரமாறிய பகவத்ராஜ ஊழியத்தின் உரிமையைத்தான் விளக்குவதோ என்று எங்நாகரீக மனதும் அன்பினூற் பிரமிக்குமன்றோ!

இவர் கொண்டகோலம், பூண்டஉடை, உண்டவுணவு, சென்ற இடம், நின்றநிலை, விண்டவழி, கண்டவடிவம். முதலியவற்றைக் கவனிக்கும் எவரே வைராக்கியத்தை அடையார்! இவருடைய உருவத்தைப் படத்திலேனும் பார்க்கும் எவருக்குத்தான் ஸம்ஸார ஸாகரத்தில் ஸம்பூரண விரக்தி ஸாயுஜ்யமயமாக ஏற்படமாட்டாது!

இந்த மஹா மூர்த்தியின் அருள் மார்க்கத்திலே உழைக்கும் அன்பருக்குத் தெரியும். இந்த வடிவின் யோகானந்தம் விதி வழிவரும் யோகஅப்பியாஸிகளுக்கு விளங்கும். இந்த ஸ்வரூபரின் ஜீவன்முக்தியம்சம், ஏறக்குறைய அந்நிலைக்குரிய பாத்தியதையைப் பெற்ற பரமாத்துமாக்களுக்குத் துலங்கும். இந்தகுருமூர்த்தியால் ஆரம்பிக்கப் பெற்ற சங்கம் "ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ ஸபை" எனப்பெயர் பெற்றுளது. விஸ்தாரமாகக் கிளைத்து ஓங்கியிருக்கும் இதன் விருத்தியாம்சமும் பாரமார்த்திக சம்பந்தமும் உலகமெங்கும் கொடி வீசிக்கொண்டு வருவது, இதன் பிறப்பிடமாம் இந்தியாவுக்

குத் தெரிந்த விஷயமே. இச்சபைக்கும் உலகத்திற்கும் முக்கிய இந்தியாவிற்கும் உள்ள சம்பந்தம் இனி பகிரங்கமாக வெளிவரும்.

இச்சபையின் உரிமைக்கு உரியவர் என்ற சார்பாலன்று, பாரபக்ஷமுள்ள அன்பு நியாயத்தாலுமன்று, மற்று, நடுநிலையிலே, தெய்வ சபையிலே, சத்சங்க மஹோன்னத தசையிலே, நிர்மோஹ புக்தியிலே, நிச்சல அந்தரத்திலே, ஜீவன் முக்தி சூக்ஷமத்திலே, நின்ற யாக யோக ஹோம தபஸாம் பக்தியிலே, இவ்வுலகத்தேற்பட்டிருக்கும் எண்ணிறந்த சபைகளையும் சற்று உற்று நோக்குங்கால், உண்மையிலே உண்மையாயும், ஆரியமத ஸித்தாந்தானுசாரமாயும் ஆர்ப்பரித்திருக்கும் சபை இதுவெனக்கண்டு, களிப்புற்றுச் சுகானந்தமயமாய் வெளிப்படுத்திய விஷயமிதுவென அறிவோரறிவார்.

இவ்வருள் வள்ளலின் தெய்விகத்தைப்பற்றி ஆங்கிலேய பாஷையில் அநேக நூல்கள் எழுதப்பட்டிருப்பினும் ஆரியத்தின் மடியில் வளர்ந்து, ஆனந்தம் அமர்ந்த இவ்வுரிய திராவிடநாட்டின்கண் ஏகசக்ராதிபத்தியம் வைத்து வகித்து இதனுடன் மழலைச்சொற்களால் பெற்றோரை மகிழ்வித்த இவ்வினிய முத்தமிழிலே, பலபல அரிய நூல்கள் எழுதப்படாமலிருப்பது எவரும் ஆச்சரியப்படத்தக்க விஷயமே. அவதார ஸ்வரூபர்களின் அழகிய சரித்திரத்தை நாடெங்கும் பிரஸங்கவாயிலாயும் நூல்வழியாயும் பகிரங்கப்படுத்துவதால் நாட்டிற்குண்டாகும் நவமுள்ள பக்திப்பெருக்கையும் தேசவிருத்தியையும் இவ்வளவென்று எடுத்துரைக்க முடியாதெனப் பலரும் அறிவர்.

ஆகையால், திராவிட நாட்டிற்பிறந்த அருட்கவிகளே, நீங்கள் அருட்கவிகளெனப் பாமாரி மொழிவது உண்மையேல், பரமஹம்ஸ பகவானைப்பற்றிய முத்தமிழ் நூல்களை இந்தக்ஷணம் முதற்கொண்டே மும்மரித்தெழுதுங்கள், ஏனெனில் பொங்கித் ததும்பும் அருள் இங்கும் வழியாதென செய்யும்! தமிழ் நாட்டின் இரத்தத்திற்கெனப் பிரந்துள்ள தனவான்களே! உங்களிடத்தில் தனலக்ஷ்மி

இருப்பது நிச்சயமாகில், இப்பரமஹம்ஸ மூர்த்தியையும் இன்னும் எத்தனையோ ஞானிகளையும் பற்றிப் பரிபூரணமாக எழுதப்படும் பலபல நூல்களையும் அச்சிற்கொடுத்து ஆனந்தமாக வெளிப்படுத்துங்கள்.

என்ற, வழியே, தற்சமயம் (1) பரமஹம்ஸ பகவான் அருளுக்காகப் பாடுபட்ட நிலைமை (2) பரமஹம்ஸ பகவானின் பக்தியம்சம் (3) பரமஹம்ஸமூர்த்தியின் யோக–ஹம்சம் (4) பரமஹம்ஸரின் ஞானநிலை (5) பரமஹம்ஸ பரமாநந்தம் (6) விவேகானந்தசேவை, என்ற விஷயங்களைப்பற்றித் தக்க நூல்களைத் தமிழாம் தாய்நாடு தவறாமல் எதிர்பார்க்கிற விஷயத்தை விளக்கியுள்ளோம்.

டி. வி. வேங்கடராகவுலு
உபாத்தியாயர், மாடல்ஸெக்ஷன்,
புதுக்கோட்டை.

விடுகதைவிநு.

2. அக்ஷரம் மூன்றில் அமைந்ததோர் பொருளாம்
அதிலிடை யெழுத்தகன் றொழிந்தால்
சுக்கிரன் பெயராம் கடையெழுத் தின்றேல்
துலங்கிய ஒலிக்குறிப் பாகும்
மிக்கதோர் கடையும் இரண்டுடன் சேர்ந்தால்
வித்தையே யதன் பொருளாகும்
அக்கரம் மூன்றில் அமைந்துள பொருளை
அறிந்துளோர் பாவினில் வரைவீர்.

எஸ். சுப்பய்யா,
வித்யாபாநு ஆபீஸ், கோனபட்டு.

மிஸ்டர் மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தம்.

WITH THE COMPLIMENTS OF THE PUBLICITY COMMITTEE.

இந்தியராஜாங்க அமைப்பில்
செய்யப்போகும் சீர்திருத்தங்களைக் குறித்து சிறப்புற்றோங்கும்
ராஜப்பிரதிநிதி அவர்களும் (ஸ்டேட் ஸெக்ரெடரி)
இந்தியா மந்திரி அவர்களும் எழுதிய ரிபோர்ட்டின் சுருக்கம்.

இந்தியாவிலே ராஜாங்க அமைப்பில் செய்யப்போகும் சீர்திருத்தங்களைக்குறித்து ராஜப்பிரதிநிதி அவர்களும் இந்தியா மந்திரி அவர்களும் தங்கள் சிபாரிசுகளைச் செய்திருக்கும் ரிபோர்ட்டானது கானடாவின் ராஜாங்க அமைப்புக்கு டர்ஹாம் பிரபு அஸ்திவாரம் நாட்டிய விஷயங்கள் கண்டெழுதியுள்ள சரித்திரபூர்வகமான தஸ்தவேஜை ஒத்ததாகும். இந்த ரிபோர்ட்டில் தற்போதைய நிலைமைக்குக் கொண்டுவிட்ட சம்பவங்களை முதலிலே விவரித்திருக்கிறது. பரிபாலன சம்பந்தமான ஏற்பாடும் சட்டநிருபண சபைகளும் எப்படி அபிவிருத்தியாய் வந்திருக்கிறதென்பதை இதில் விளக்கிக் காட்டியிருக்கிறது. மார்லி மின்டோ பிரபுக்களால் ஏற்படுத்தப்பட்ட சபைகள் எ ப் ப டி வேலைசெய்துவந்திருக்கின்றன என்பதையும், காங்கிரஸ் சபையாராலும் முஸ்லிம் சபையாராலும்பிரேரேபிக்கப்பட்ட சீர்திருத்த ஏற்பாடு உட்பட தற்போதைய பிரசினை சம்பந்தமான சந்தர்ப்பங்களையும் பரிசிலனை செய்து, பிறகு இதில் பிரேரேபனைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தப் பிரேரேபனைகளையே ஒவ்வொருவரும் முதலில் கவனிப்பார்கள். ஆயினும், இவைகளைத் தெரிந்துகொள்வதற்கு இவைகளுக்கு ஆதாரமாயுள்ள நியாயங்களைப் படித்தறிவது அவசியமே. இந்த ரிபோர்ட்டைப் புஸ்தகரூபமாய் வெளியிடுவதனால் இந்தப்படி படித்தறிவதற்கு அவகாசம் ஏற்படுத்திக்கொடுக்கப்படும்.

இந்தியா விஷயத்தில் ஏகாதிபத்திய கவர்ன்மெண்டார் அனுசரிக்கும் கொள்கை இன்னதென்று 1917-ம் ௵ ஆகஸ்ட்மீ 20௳ யன்று இந்தியா மந்திரி அவர்களால் நிர்ணயித்துச் சொல்லப்பட்டது அது என்னவென்றால், இந்தியாவானது ப்ரிடிஷ் ஏகாதிபத்தியத்தின் ஒரு பூர்த்தியான பகுதியாய் நாளாவட்டத்தில் பொறுப்பான ஆட்சியை அடையும் நோக்கத்துடன் சுய ஆட்சி ஸ்தாபனங்களைப் படிப்படியாய் விருத்திசெய்து கொண்டுவரவேண்டுமென்பதும் இந்த மார்க்கத்தில் முக்கியமான ஏற்பாடுகளைக் கூடிய சீக்கிரத்தில் செய்ய வேண்டுமென்பதுமே. 1908-09-ம் வருஷத்தில் மின்டோ பிரபுவும் மார்லி பிரபுவும் அநுசரிக்கவேண்டுமென்று எத்தனித்த கொள்கைக்கு இந்தக் கொள்கையானது முற்றிலும் வேறாயிருக்கிறதுமல்லாமல் அதைவிட எவ்வளவோ விரிவாயுமிருக்கிறது. மார்லி பிரபுவானவர் அந்த ஏற்பாடுகள் பார்லமென்ட் சபையாரைக்கொண்டு நடத்தும் ராஜாங்க முறைக்கு எப்படிப் பார்த்தாலும் கொண்டுபோய்விடக்கூடியவையல்லவென்றுஉறுதியாய்ச்சொல்லிவிட்டார். ஆகவே 1909-ம் ௵த்தில் ஏற்படுத்தப்பட்ட முறையை அபிவிருத்தி செய்வதுமாத்திரமே தற்போதைய நிலைமைக்குப் போதுமானதாகாது. இதற்குப் பொறுப்பான ஆட்சியின் ஓர் அம்சம் உடனே கொடுக்க வேண்டியதோடுகூட அது வரவர விருத்தியடைவதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும். இதில் முதலாகச் செய்யவேண்டியதென்னவென்றால், முக்கியாம்சங்களில் மாகாணங்களுக்கு ஸ்வேச்சையான அதிகாரம் இருக்கும்படி செய்வதேயாம். மாகாண பட்ஜெட் என்னும் வரவுசெலவு திட்டக்கணக்கானது இந்தியா கவர்ன்மென்டாரின் வரவுசெலவு திட்டக்கணக்கிலிருந்து முற்றிலும் பிரித்துவிடப்படும்; மேலும், இப்பொழுது இருப்பதைப்போல் தலைப்புவாரியாய்ப் பிரித்து சில தலைப்புகளின்கீழ் கிடைக்கும் வருமானம் இந்தியா கவர்ன்மென்டுக்குச் சேர்ந்ததாகும் என்கிற ஏற்பாட்டை ஒழித்துவிட்டு அதற்கு பதிலாக மாகாணங்கள் நிஷ்கரிசையாய் ஒரு தொகையை இந்தியா கர்ன்மென்டுக்குக் கொடுக்கவேண்டுமென்று நிர்ணயிக்கப்படும். இப்படி கொடுப்பதற்குட்பட்டு ஒவ்வொரு மாகாண கவர்ன்மென்டும் அததன் வரவுசெலவுகள் விஷயமாய் விசா

ரணை வகிப்பதும் தவிர கடன் வாங்குவதற்கும் வரிவிதிப்பதற்கும் சில அதிகாரங்களையும் உடையதாகும். இத்துடன் பரிபாலன சம்பந்தமாயும் சட்டநிரூபண சம்பந்தமாயும்கூட சில முக்கியமான அதிகாரங்கள் மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு கொடுக்கப்படும். எல்லா மாகாணங்களுக்கும் ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் நடத்தும் ஆட்சிமுறை உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. கவர்னரவர்கள் நிர்வாகப் பிரிவின் தலைமையை வகிப்பார். இவருக்கு இரண்டு மெம்பர்களடங்கிய ஒரு நிர்வாக சபை இருக்கும். இந்த இரண்டு மெம்பர்களில் ஒருவர் ஆங்கிலேயராகவும் மற்றொருவர் இந்தியராகவுமிருப்பார். இவர்கள் இருவரும் கவர்னரவர்களால் நியமிக்கப்படுவார்கள். இந்த நிர்வாக சபையுடன்கூட கவர்ன்மெண்டின் ஒரு பாகமாய் ஒரு மந்திரி அல்லது பல மந்திரிகள் இருப்பார்கள். இந்த மந்திரிகள் சட்டநிரூபண சபையிலுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களுக்குள்ளிருந்து கவர்னரவர்களால் நியமிக்கப்பட்டு அந்த சபையின் காலம் வரையில் உத்தியோகம் வகிப்பார்கள். பரிபாலனமானது இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்படும்; அதாவது, கவர்னரவர்களும் நிர்வாகசபை மெம்பர்களும் விசாரணைபுரிபவைகளாய் அவர்களுக்கென்றே நிறுத்திவைத்துக்கொள்ளப்பட்ட விஷயங்கள், கவர்னரவர்களும் அவருடைய மந்திரிகளும் விசாரணைபுரிபவைகளாய் அவர்களுக்கு மாற்றப்பட்ட விஷயங்கள். விஷயங்களை நிறுத்திவைத்துக்கொள்ளப்பட்டவையென்றும் மாற்றப்பட்டவையென்றும் பிரிப்பது ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு மாதிரியாயிருப்பது சகஜமேயாகும். இப்படிப் பிரிப்பதை, இந்தியாவுக்கு வெளியிலிருந்து நியமிக்கப்பட்ட ஒரு அக்கிராசனாதிபதியும் இரண்டு மெம்பர்களும் அடங்கிய ஒரு கமிட்டியார் தீர்மானிப்பார்கள். இந்த மெம்பர்களில் ஒருவர் ஆங்கிலேய உத்தியோகஸ்தராகவும் மற்றொருவர்-உத்தியோகஸ்தரல்லாத இந்தியராகவும் இருப்பார். மாற்றப்பட்ட விஷயங்களாக பிரிவினை செய்வதற்கு சாதாரணமாய் இடங்கொடுக்கும் இலாகாக்கள் பின்வருபவையாகும்:—மாகாண காரியத்துக்காக வரிவிதிப்பது; ஸ்தல சுய ஆட்சி; கல்வி; பப்ளிக் வொர்க்ஸ் (பொதுக்கட்டுவேலைகள்) விவசாயம்; கலால்; பிரதேச கைத்தொழில்கள்.

எந்த சட்டநிரூபண சபைக்கு இந்த முக்கியமான அளவுக்கு கவர்ன்மெண்டார் உத்தரவாதியாயிருப்பார்களோ அந்த சட்டநிரூபண சபையில், சாத்தியமானமட்டில் மிகவும் விரிவான சங்கியையுள்ள வோட்டர்களால் (தெரிந்தெடுப்பவர்களால்) நேராகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள பிரதிநிதி மெம்பர்கள் ஸ்பஷ்டமாய்ப் பெரும்பான்மையாக இருப்பார்கள். மகம்மதியர்களுக்கு இப்பொழுதிருக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அப்படியே இருக்கும். ஆனால் பஞ்சாபிலுள்ள ஸீக்கியர்களைத் தவிர சொற்ப ஜனசங்கியையுள்ள இதர வகுப்பார்களின் பிரதிநிதிகள் நேமகமூலமாக ஏற்படுத்தப்படுவார்கள். வோட்கொடுப்பதைப்பற்றிய விவரங்களையும் ஒவ்வொரு சபையின் அமைப்பையும் சகல வகுப்பார்களின் பிரதிநிதிகளும் அடங்கிய ஒரு கமிட்டியார் ஆலோசித்து நிச்சயிப்பார்கள். சபையார்– தங்களுக்குள்ளிருந்தே ஒவ்வொரு இலாகாவுக்காகவும் அல்லது இலாகாக்களின் தொகுதிக்காகவும் ஒரு நிலையான கமிட்டியைத் தெரிந்தெடுப்பார்கள். இந்தக் கமிட்டியானது விசாரணைவகிக்கும் மெம்பர் அல்லது மந்திரியுடன் கலந்து வேலைசெய்யும், கவர்னரவர்களின் அனுமதியைப் பெற்றுக்கொண்டு வேலை நடந்தேறுவதைக்குறித்த விதிகளை மாற்றுவதற்கு அதற்கு அதிகாரம் இருக்கும் உடன்சேர்க்கையான கேள்விகள் கேட்க எல்லா மெம்பர்களுக்கும் உரிமையிருக்கும். நிறுத்திவைத்துக்கொள்ளப்பட்ட சகல விஷயங்கள் சம்பந்தமான வேலையையும் நடத்துவதில் சபைக்கு செல்வாக்கு இருப்பதும் தவிர, மாற்றப்பட்ட சகல விஷயங்களிலும் அனுசரிக்க வேண்டிய முறை சம்பந்தமாய்ப் பூர்த்தியான விசாரணை அதிகாரமும் சபைக்கு ஏற்படும். கவர்னரவர்கள் “மாகாணத்தின் அமரிக்கைக்கும் சமாதானத்துக்கும் தாம் உத்தரவாதியாயிருப்பதை நிறைவேற்றுவதற்காவது தமக்கென்றே நிறுத்திவைத்துக்கொள்ளப்பட்ட விஷயங்கள் சம்பந்தமாய்த் தமக்குள்ள உத்தரவாதத்தை நிறைவேற்றுவதற்காவது அவசியமென்று” உறுதிமொழி கூறுகிற சட்டதிட்டங்கள் நிச்சயமாய் ஜாரிசெய்யப்படும்பொருட்டு ஜாக்கிரதையுடன் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு இந்த சபையானது இன்ன ரூபமாய்ச் சட்டநிரூபணம் செய்யவேண்டுமென்பதைத்

தீர்மானிக்கும். அரசிறை விஷயமாகவோ என்றால், பட்ஜெட் என்னும் வரவுசெலவு திட்டக்கணக்கு மொத்தத்தில் நிர்வாக கவர்ன்மெண்டாரால் தயார்செய்யப்படும். இந்தியா கவர்ன்மெண்டாருக்குக் கொடுக்கவேண்டிய தொகையே மாகாண கவர்ன்மெண்டுகளின் முதல் செலவாகும். அதன் பிறகு மாகாணத்தின் தேவைகள் கவனிக்கப்படும். அதன்மேல் வருமானம் போதாமலிருந்தால், அதிகப்படியான வரிவிதிக்கும் விஷயத்தைக் கவர்னரும் மந்திரிகளும் சேர்ந்து தீர்மானிப்பார்கள். பட்ஜெட்டானது அதன் மேல் சபைக்கு முன்பாக வைக்கப்படும். அதைப்பற்றி சபையார் ஆலோசனை செய்து இன்னின்ன அம்சங்களுக்கு இவ்வளவென்று ஏற்படுத்தியிருக்கும் தொகைகள் விஷயமாய்த் தீர்மானங்கள் மூலமாக அபிப்பிராயம் கொடுப்பார்கள். இந்த தீர்மானங்கள் நிறுத்திவைத்துக் கொள்ளப்பட்ட விஷயங்களைத்தவிர மற்ற எல்லா விஷயங்களையும் கட்டுப்படுத்தும். நிறுத்திவைத்துக்கொள்ளப்பட்ட விஷயங்கள் சம்பந்தமாய் ஏற்படுத்தப்பட்ட உத்தேச தொகையை சபையார் நிராகரித்தாலும் மாற்றினாலும், முடிவாய்த் தீர்மானம் செய்யும் பொருப்பு கவர்னருடையதாகும். ஆனால், இந்த தொகைகள் அமரிக்கைக்கும் ஒழுங்குக்குமாவது நல்ல ஆட்சி நடைபெறுவதற்காவது அவசியமானவையென்று அவர் உறுதிமொழி கூறவேண்டும் என்கிற முக்கியமான பாதுகாப்பு ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த பிரேரேபணைகளின் பலன் என்னவென்றால், அரசிறை சம்பந்தமாயும் பரிபாலன சம்பந்தமாயும் சட்டநிரூபண சம்பந்தமாயும் மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு வாஸ்தவத்தில் ஸ்வேச்சாதிகாரம் ஏற்படுகிறது; உண்மையில் பிரதிநிதி மெம்பர்கள் பெரும்பான்மையாயுள்ள சட்டநிரூபண சபைகள் மூலமாக பரிபாலனத்தின் சகல பிரிவுகளிலும் தெரிந்தெடுக்கும் யோக்கியதையுள்ள ஜனங்களின் செல்வாக்கு அதிகரிக்கிறது. இதனால் இந்தியாவின் அபிவிருத்திக்கு நெருக்கமாய் சம்பந்தப்பட்டுள்ள சகல பிரசினைகள் விஷயமாகவும் ஜனங்களுக்கு நேரான மேல்விசாரணை அதிகாரம் ஏற்படுகிறது. காலதேச நிலைமைகளை நோக்கும்போது சாத்திய

மென்று ஏற்பட்டவுடனே முழுப் பொறுப்பையும் கொடுக்கவேண்டுமென்பதே இந்த பிரேரேபணைகளின் நோக்கமாகும், இவைகள் சுயமாகவே அபிவிருத்தி அடைவது சாத்தியமாகும்பொருட்டு, நிறுத்திவைத்துக்கொள்ளப்பட்டிருக்கும் விஷயங்களையும் குறித்த ஜாபிதாவை ஐந்துவருஷங்களான பிறகு இந்தியா கவர்ன்மென்டார் திருத்தலாமென்றும், ராஜாங்க சம்பந்தமான மொத்த நிலைமையையும் அபிவிருத்திசெய்யும் நோக்கத்துடன் பத்து வருஷங்கள் கழிந்தபிறகு பார்லமென்ட் சபையாரால் நியமிக்கப்பட்ட ஒரு கம்மிஷன் அதைக்குறித்து புனராலோசனை செய்யலாமென்றும் பிரேரேபிக்கப்பட்டிருக்கிறது. பின்னும் அபிவிருத்திசெய்பக்கூடுமா என்னும் விஷயத்தைக்குறித்து, ஆலோசனை சொல்லும்பொருட்டு பன்னிரண்டு வருஷங்களுக்கொருதரம் கம்மிஷன்கள் ஏற்படுத்தவேண்டுமென்று சிபாரிசு செய்யப்படுகிறது.

இந்தியா கவர்ன்மென்டின் அமைப்பை பாதிக்கும்பொழுது இந்த பிரசினை இன்னும் சிக்கலாகிறது; ஏனென்றால், முழுவதும் உத்தரவாதமான ஆட்சி மாகாணங்களில் ஏற்படுகிறவரையிலே இந்தியா கவர்ன்மென்டார் பார்லமென்டாருக்கு உத்தரவாதமாயிருந்து வரவேண்டியிருக்கிறது. மேலும் அமைதி, ஒழுங்கு, நல்ல ஆட்சி இவைகளை நிலைநிறுத்துவதற்கு அத்தியாவசியமென்று அவர்கள் கருதுகிற விஷயங்களில் நிராக்ஷேபமான அதிகாரத்தை அவர்கள் வகிக்கவேண்டியிருக்கிறது. ஆகையினால், மாகாணங்களுக்கு ஒரே சபை இருந்தால் போதுமென்று பிரேரேபிக்கப்பட்டிருக்கையில் இந்தியா கவர்ன்மெண்டுக்கு இரண்டு சபைகள் இருக்கவேண்டுமென்று பிரேரேபிக்கப்படுகிறது. நிர்வாக கவர்ன்மென்டில் இப்போதிருப்பதைப்போலவே ஆலோசனை சபையிலுள்ள ஒரு கவர்னர் ஜெனரல் இருப்பார். ஆனால் நிர்வாக சபையின் மெம்பர்கள் விஷயத்தில் ஒரு வித்தியாசம் ஏற்படும். அதாவது இந்திய மெம்பர்கள் ஒருவருக்கு பதில் இருவர் இருப்பதுடன், நிர்வாக சபையின் மெம்பர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் இப்பொழுதுள்ள நிர்ப்பந்தங்கள் ஒழிக்கப்படும். நூறு மெம்பர்களடங்கிய ஒரு சட்டநிரூபண சபையிருக்கும். இவர்களில் மூன்றில் இரண்டு பங்கு பேர் தெரிந்

தெடுக்கப்படுவார்கள், ஒரு பங்கு பேர் நியமிக்கப்படுவார்கள். மகம்மதியர்கள் விஷயத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் முன்போலவே கொடுக்கப்படும். பஞ்சாபிலுள்ள ஸீக்கியர்கள் விஷயத்தில் அது புதிதாய் ஏற்படுத்தப்படும். ஸ்டேட் கௌன்ஸில் என்று சொல்லப்படும் இரண்டாவது சபையில் ஐம்பது மெம்பர்கள் இருப்பார்கள். இவர்களில் இருபத்தொரு பேர் தெரிந்தெடுக்கப்படுவார்கள்; (பதினைந்து பேர் மாகாண சட்டநிரூபண சபைகளால் தெரிந்தெடுக்கப்படுவார்கள்;) இருபத்தொன்பது பேர் நியமிக்கப்படுவார்கள். இப்படி நியமிக்கப்படுபவர்களில் இருபத்தைந்து பேர்களுக்கு மேற்படாமல் உத்தியோகஸ்தர்களாயிருக்கவேண்டும். ஸர்க்கார் தரப்பில் செய்யப்படும் சட்டநிரூபணத்தின் விஷயத்தில் மசோதாக்கள் சாதாரணமாய் சட்டநிரூபண சபையில் கொண்டுவரப்பட்டு பிறகு ஸ்டேட் கௌன்சிலுக்குப் போகும். இவ்விரண்டு சபைகளுக்கும் அபிப்பிராயபேதம் ஏற்படும்பட்சத்தில் இரு சபைகளும் சேர்ந்த ஒரு கூட்டம் நடத்தப்படும். ஸர்க்காரால் கொண்டுவரப்படாத மசோதாக்கள் விஷயத்திலும் இதே நடவடிக்கைமுறை அனுசரிக்கப்படும். ஆனால் அதைப் பிரேரேபிப்பவர் எந்த சபையைச் சேர்ந்தவரோ அந்த சபையில் அது முதலில் கொண்டுவரப்படும். மஹாராஜா அவர்களின் ராஜாங்கம் நடந்துகொண்டே போகவேண்டுமல்லவா? அதற்காக ஸ்டேட் கௌன்ஸிலினால் அங்கீகரிக்கப்பட்ட யாதொரு நிபந்தனையை சட்டநிரூபண சபையார் நிராகரிக்கும் விஷயத்தில் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் அந்த நிபந்தனையானது அமைதிக்கும் ஒழுங்குக்குமாவது நல்ல ஆட்சிக்காவது அத்தியாவசியமானதென்று நினைத்தால் அந்தப்படி அவர் உறுதிகூறுவதன்மேல் அந்த நிபந்தனை ரத்தாகாமல் நிற்கும். இம்மாதிரியாகவே ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் முக்கியமானதென்று நினைக்கும் யாதொரு மசோதாவைக் கொண்டுவருவதற்கு சட்டநிரூபணசபையார் அனுமதி கொடுக்க மறுத்தாலும் எந்த தசையிலாவது அதை நிராகரித்தாலும், அதே மாதிரியான உறுதிமொழியின்மேல் அந்த மசோதா ஸ்டேட் கௌன்ஸிலில் கொண்டுவரப்பட்டு அந்த சபையினால் அங்கீகரிக்கப்பட்டால் சட்டமாகும். பட்ஜெட்டானது சட்டநிரூபண சபையில் கொண்டு

வரப்பட்டு அதில் ஆலோசிக்கப்படும். ஆனால் அதைக்குறித்து செய்யப்படும் தீர்மானங்கள்– ஆலோசனை சொல்லும் தீர்மானங்களாகுமே ஒழிய கட்டுப்படுத்தக்கூடியவைகளாகா. இப்படியெல்லாம் செய்திருப்பதன் நோக்கம் என்னவென்றால், சட்டநிரூபணம் செய்வதற்கு சாதாரணமான நிலைமையில் இரண்டு சபைகளின் சம்மதியும் வேண்டுமென்பதும், ஆனால், அமைதிக்கும் ஒழுங்குக்குமாவது நல்ல ஆட்சிக்காவது அத்தியாவசியமாயுள்ள ஏற்பாடுகள் விஷயத்தில் ஸ்டேட் கௌன்ஸிலின் தீர்மானமே மேலோங்கி நிற்குமென்று ஸ்தாபிப்பதுமேயாகும். மாகாணங்கள் விஷயத்தில் போலவே, நிர்வாக கவர்ன்மெண்டுடன் ஒத்துழைக்கும்பொருட்டு நிலையான கம்மிட்டிகள் ஏற்படுத்தப்படும். பார்லமெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட எந்த கம்மிஷனானது மாகாணங்களில் இந்த ஏற்பாட்டைக்குறித்து விசாரணை செய்கிறதோ அதே கம்மிஷன் இந்தியா கவர்ன்மென்ட் விஷயத்திலும் இந்த ஏற்பாடு எப்படி வேலைசெய்கிறதென்பதைக்குறித்து பத்து வருஷம் கழித்து பரிசீலனை செய்யும். இதனுடன் கூட பல வகுப்புகளிலிருந்தும் எடுக்கப்பட்ட கீர்த்தி வாய்ந்த மனிதர்களடங்கிய ப்ரிவி கௌன்ஸில் என்னும் ஒரு சபையையும் இந்தியாவுக்காக ஏற்படுத்த உத்தேசித்திருக்கிறது. கவர்னர் ஜெனரலவர்கள் அதைக் கலந்து ஆலோசிக்க விரும்பும்போது அவருக்கு ஆலோசனை சொல்வதே அதன் அலுவலாகும்.

இந்த ஏற்பாட்டை சாவதானமாய் அமுலுக்குக்கொண்டுவருவதற்கு, இந்தியா மந்திரி அவர்களும் இந்தியா ஆபிஸாரும் இந்தியா கவர்ன்மென்டின்மேல் இப்பொழுது நெருக்கமாய் செலுத்திவரும் விசாரணை அதிகாரத்தை முக்கியாம்சத்தில் குறைக்கவேண்டும். ஆகவே, பார்லமெண்டாரும் இந்தியா மந்திரி அவர்களும் செய்யும் மேல்விசாரணையை மாற்றவேண்டுமென்றும், இந்தியா கௌன்ஸிலின் இப்போதைய அமைப்பைக்குறித்தும் இந்தியா ஆபீஸிலுள்ள சிப்பந்திகளைக்குறித்தும் ரிபோர்ட் செய்யும்படி ஒரு கம்மிட்டியை உடனே நியமிக்க வேண்டுமென்றும் பிரேரேபித்திருக்கிறது. ஆனால், பார்லமெண்டாரின் உத்தரவாதம் முன்னிருந்தபடியே

இருக்குமாகையால், இந்தியா மந்திரி அவர்களின் சம்பளத்தை
பிரிடிஷ் கவர்ன்மென்டின் வரவுசெலவு திட்டங்களிலேயே சேர்க்க
வேண்டும். மேலும், ஹௌஸ் ஆவ் காமன்ஸ் என்னும் சாமானியர்
சபையை இந்திய விஷயங்களைக் குறித்து அவர்களுக்கு ஆலோசனை
சொல்வதற்காக ஒரு நிலையான ஸெலெக்ட் கமிட்டியை நியமிக்கும்
படி கேட்கவேண்டும். இதனால் இந்திய அரசாட்சி முறையைக்
குறித்து விசேஷ கவனம் செலுத்தி விஷயங்களை அறிந்திருக்கும்
சில மெம்பர்கள் பார்லிமென்டில் எப்பொழுதும் இருந்துகொண்டே
யிருப்பது சாத்தியமாகும். இப்பொழுது செய்திருக்கும் பிரேரே
பணைகள் பிரிடிஷ் இந்தியாவை மட்டிலுமே பாதிக்கின்றன. இந்தி
யாவின் விஸ்தீரணத்தில் மூன்றிலொரு பாகமும் அதன் ஜனசங்கி
யையில் ஐந்திலொருபாகமும் சுதேச ஸமஸ்தானங்களில் அடங்கி
யிருக்கின்றன. இவைகள் பிரிடிஷ் இந்தியாவில் நேரும் மாறுதல்க
ளினால் பாதிக்கப்படாமல் இருக்கமுடியாது. அல்லாமலும் இவ்
விரண்டு பாகங்களுக்கும் பாத்தியதையிலுள்ள ஒற்றுமையானது
அதிகரித்துக்கொண்டேவருகிறது. ஆகையினால், சுதேச அதிபதி
களின் கூட்டமானது ஒரு நிரந்தர மன்னர் சபையாய் சாதாரண
மாக வருஷத்துக்கொருமுறை கூடவேண்டுமென்றும், ஆசாரம்
வழக்கம் இவைகளைப்போன்ற விஷயங்களைக் குறித்து ஆலோசனை
செய்வதற்காக இந்த சபையில் ஒரு சிறிய கமிட்டியை ஏற்படுத்த
வேண்டுமென்றும் பிரேரேபிக்கப்படுகிறது. ஸமஸ்தானங்களுக்குள்
ளாகிலும், ஸமஸ்தானங்களுக்கும் இந்தியா கவர்ன்மென்டாருக்கு
மாகிலும் நேரிடும் விவாதங்கள் ஒரு கமிஷனின் ஆலோசனைக்கு
விடப்படும். இந்த கமிஷனில் ஹைகோர்ட் ஜட்ஜ் அந்தஸ்துக்
குக் குறையாத அந்தஸ்துள்ள ஒரு உத்தியோகஸ்தரும் ஒவ்வொரு
கட்சியாராலும் நியமிக்கப்பட்ட ஒருவரும் இருப்பார்கள். இவர்கள்
ராஜப்பிரதிநிதிக்கு ஆலோசனை சொல்வார்கள். சுவேச்சாதிகாரம்
செலுத்தும் அதிபதிகளின் துர்நடக்கையைப்பற்றிய விஷயங்களும்
ஐந்துபேர் அடங்கிய ஒரு கமிஷனால் விசாரணை செய்யப்படும்.
இந்தக் கமிஷனில் ஒரு ஹைகோர்ட் ஜட்ஜும் இரண்டு சுவேச்
சாதிபதிகளும் இருப்பார்கள். இவர்கள் சேர்ந்து ராஜப்பிரதிநிதிக்கு

ஆலோனை சொல்வார்கள். முக்கியமான சகல சமஸ்தானங்களும் இந்தியா கவர்மென்டாருடன் நேராகக் கடிதப்போக்குவரவு செய்வது சாத்தியமாகும். மேலும், ஸ்டேட் கௌன்ஸிலும் கௌன்ஸில் ஆப் பிரின்ஸஸ் என்னும் மன்னர் சபையும் தங்களுக்குப் பொதுவாயுள்ள விஷயங்களைக் குறித்து சேர்ந்தாலோசிப்பதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறது.

இந்தியா விஷயத்தில் ஏகாதிபத்திய கவர்ன்மென்டார் அனுசரிக்கும் கொள்கையை விவரித்துச் சொன்ன நிர்ணயப்பத்திரிகையில் முதல் முதல் சொன்ன விஷயமென்னவென்றால், "பரிபாலனத்தின் ஒவ்வொரு பிரிவிலும் இந்தியர்களை அதிகமாய்ச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பதே." ராஜாங்க அமைப்பின் ரூபம் எப்படியிருந்தாலும், வாஸ்தவத்தில் பரிபாலன வேலையானது தேர்ந்த ஒரு உத்தியோகக் கூட்டத்தாராலேயே நடத்தப்படவேண்டும். ஆகையினால் ஜாதி சம்பந்தமான சகல தடைகளையும் ஒழிக்கவேண்டுமென்றும் நூற்றுக்கிவ்வளவென்று நிர்ணயிக்கப்பட்டு வரவர உயர்ந்துகொண்டேவரும் ஒரு சங்கியைப் பிரகாரம் எல்லா ஸர்க்கார் வேலைகளுக்கும் இந்தியாவில் ஆள்கள் நியமிக்கப்படுவார்களென்றும் (ஸிவில் ஸர்விஸ் என்னும் உத்தியோக வர்க்கத்தின் விஷயத்தில் இந்த சங்கியையானது நூற்றுக்கு முப்பத்துமூன்றாகும்; இது வருஷந்தோறும் நூற்றுக்கு ஒன்றரை வீதம் பத்து வருஷங்களுக்கு உயர்ந்துகொண்டேபோகும். அப்பொழுது இந்த விஷயத்தைக் குறித்துப் புனராலோசனை செய்யப்படும்), சம்பளத்தின் வீதங்களும், பென்ஷன் வீதங்களும் மறுபடியும் சரிபார்த்து ஒழுங்குபடுத்தப்படுமென்றும், சேனையில் இந்தியர்களுக்கு ஏராளமான கம்மிஷன் உத்தியோகங்கள் கொடுக்கப்படுமென்றும் ரிபோர்ட்டில் பிரேரேபித்திருக்கிறது.

ஆகவே, ராஜப்பிரதிநிதியும் இந்தியா மந்திரி அவர்களும் செய்திருக்கும் சிபாரிசுகளால், இந்தியர்களின் கல்வியானது நாளாவட்டத்தில் இந்தியர்களின் விசாரணையின்கீழ் வருவதற்கும், ஆட்சி சம்பந்தமான பிரதேச ஸ்தாபனங்களை ஜனங்கள் நடத்துவது மூலமாக அவர்களுக்குப் பரிபாலன காரியங்களில் பயிற்சி ஏற்படுவதற்

கும் இடம் உண்டாகிறது. இதனுல் முழு சுய ஆட்சி கிடைப்பதற்கு மார்க்கம் ஏற்படுகிறது, அவர்களுடைய சிபாரிசுகளினுல் மாகாணங்களுக்கு உடனே சுவேச்சாதிகாரம் ஏற்படுவதும் தவிர, பரிபாலன சம்பந்தமான பல இலாகாக்களின் விஷயத்தில் ஜனங்களுக்கு மேல் விசாரணையதிகாரமும் இதர இலாகாக்களின் விஷயத்தில் அவர்களுக்கு அதிகமான செல்வாக்கும் கிடைக்கிறது, அவர்களுடைய ஆலோசனை என்னவென்ருல், வரவர தேச ஜனங்களின் பிரதிநிதியாகவும் அவர்களுக்கு உத்தரவாதியாகவும் இருக்கக்கூடிய மத்திய கவர்ன்மென்டொன்று ஏற்படவேண்டுமென்பதே- பரிபாலனத்தில் அமர்ந்துள்ள நபர்களின் விஷயத்தில் ஜாதி சம்பந்தமான தடைகளையெல்லாம் ஒழிக்கவேண்டுமென்றும், இந்தியாவில் ஆட்களை நியமிப்பதனுல் ஸர்க்கார் ஊழியங்களில் இந்தியர்களை அதிகமாய்ச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்றும் அவர்கள் வற்புறுத்துகிருர்கள், ஆகவே ராஜாங்க அமைப்பானது முழுவதும் உத்தரவாதியான ஆட்சியாக தொடர்ச்சியாய் விருத்திபடைவதற்கு அவகாசமிருக்கும்படி அவர்கள் உபாயங்கள் சொல்லியிருக்கிருர்கள், செய்யப்பட்ட வாக்குறுதிகளின்படியே இந்த சிபாரிசுகள் பொது ஜனங்கள் ஆராய்ச்சி செய்வதற்காக பிரசுரிக்கப்படுகின்றன,

இந்த முக்கியமான ரிபோர்ட்டில் அடங்கியுள்ள சகல பிரேரேபனைகளையும் சரியாய் சுருக்கிச்சொல்வது அசாத்தியமென்பது வெளிப்படையான விஷயம், ஆனல் முக்கியமான அம்சங்களை ஸ்தூலமாய் விவரித்துக்காட்ட முயற்சி செய்திருக்கிறேம், இந்த ரிபோர்ட்டானது ஒரு ரூபாய் விலைவைத்து சிறிய புஸ்தகமாக வெளியிடப்பட்டிருக்கிறது, அதை வாங்கிப்படிக்கவேண்டுமென்று நமது நேயர்களுக்கு சிபாரிசு செய்கிறேம், அதன் கடைசியில் நேர்த்தியான ஸங்கிரகம் ஒன்று இருக்கிறது, அதில், சம்மந்தப்பட்ட பிரேரேபனைகளை விரிவாய்ச் சொல்லும் பாராக்களைக் குறிக்கிற அடையாளங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீ:

பலகுறிப்புகள்.

பரோடாவில் அகவிலை.

பரோடாவில் அகவிலையை மட்டுப்படுத்த மிகவும் நல்லஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஸமஸ்தானத்திலே எங்கெங்கு உணவுப்பொருள்கள் கம்மியாய் இருக்கின்றனவோ அங்கங்கெல்லாம் உடனே அப்பொருள்கள் அனுப்பப்படுகின்றன. சில்லரையில் அப்பொருள்களை இன்னவிலைக்குத்தான் விற்கவேண்டுமென வாரந்தோறும் விலைவிவரப்பட்டியொன்று பிரசுரமாகிக்கொண்டுவருகிறது. ஏழைகளின் நன்மையைக்கருதி குறைந்தவிலைக்கு சமான்களை விற்றுவரும்படி ஆங்காங்குள்ள பொதுஜன சங்கங்களுக்கு அறிக்கையிடப்பட்டிருக்கின்றது. அதற்காகஅச்சங்களுக்குத் திரவியசகாயம் செய்யப்படுகின்றது. பருத்தி புகையிலை முதலியவைகளைவிடுத்து உணவுப்பொருள்களையே அதிகமாகச்சாகுபடி செய்வதற்காக விவசாயிகளுக்கு ஸமஸ்தானத்தாரால் ஆதரவு அளிக்கப்பட்டிருக்கின்றது. இதற்காக நான்குலக்ஷம் ரூபாய் எடுத்துவைத்திருக்கிறார்கள். தவிர மகாராஜாவும் மகாராணியும் தங்கள் சொந்தப்பணத்திலிருந்து ஏழைகளுக்கு உதவிபுரிந்துவருகின்றனர்.

சு. மி.

மூன்றுநல்லயோசனைகள்.

கண்டியிலே சிலதினங்களுக்குமுன் ஆசிரியர்களின் கான்பரன்ஸ் ஒன்று நடைபெற்றது. அங்கே வித்தியாஇலாகாத்தலைவராக இருக்கும் மிஸ்டர் டென்ஹாம் என்பவர் அதில் அக்கிராஸனம் வஹித்துப் பேசியிருப்பதில் மூன்றுநல்லயோசனைகள் சொல்லியிருக்கிறார்:—

1. வித்தியாவிஷயமாய் நாம் இன்னவாறு காரியம் நடத்துகிறோமென்று ஜனஸமூகத்தினரை நம்பி அவர்களுக்கு அறிவிக்கவேண்டும்.

2. ஆசிரியர்கள், கல்விச்சாலை அதிபர்கள், வித்தியாஇலாகா அதிகாரிகள் இவர்களின் கான்பரன்ஸ்மட்டும் நடத்தல்போதாது. பெற்றோர்களையும் கான்பரன்ஸில் கூட்டிவைத்துக் கலந்து ஆலோசிக்கவேண்டும்.

3. கல்வியினற் தக்க பலன்கிடைக்கவேண்டுமாயின், அது காலப்போக்குக்கு ஏற்றதாக இருக்கவேண்டும்.

இம்மூன்று யோசனைகளும் புதியனவல்ல அவைகளை யநுஷ்டிக்கவேண்டுமென்று இங்கே ஜனத்தலைவர்கள் வெகுகாலமாக வற்புறுத்திவருதும், அதிகாரிகள் அசையாமல் இருக்கின்றனர்.

சு, மி.

கவர்ண்மெண்ட் உத்தரவு நெ 665

12—8—1918.

ஒரு ரூபாய் இரண்டரை ரூபாய் நோட்டுகள்.

ஒரு ரூபாய் நோட் இரண்டரை ரூபாய் நோட்டுகள், அழுக்குப்படிந்திருந்தாலும். கிழிந்திருந்தாலும் அவைகளை கவர்ண்மெண்ட் கஜானா, ஸப்கஜானா, போஸ்ட்ஆபீஸ், ஸப்போட்ஆபீஸ் முதலான இடங்களில் கொடுத்து யாதும் வட்டமில்லாமலே மாற்றிக்கொள்ளலாமென்று பொதுஜனங்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

எல் டேவிட்சன்

ஆக்டிங். சீப். செக்ரிடரி.

வைத்தியக் குறிப்புகள்.

கலசகலா பாயஸம்.

சீதபேதியிலும், இரத்தக்கசிவை யுண்டுபண்ணும் அர்ச்சஸ் என்னும் மூலரோகத்திலும், குடலிலுண்டாகும் பலவிதமான அழற்சிகளிலும் அடியிற்குறிப்பிடப்படும் ஔஷதமுறை மிகப்பயன் தருவதாக அநுபவத்தில் பலமுறையும் கண்டிருக்கிறோம்:—

1. கஸகஸா..................பலம்......$\frac{1}{4}$.
2. ஊரவைத்து மேல் தோல் நீக்கிய பருத்திக் கொட்டை...,,......$\frac{1}{2}$.
3. மேல்தோல் நீக்கிய வாதுமைப் பருப்பு.........................,,......1.
4. கொத்துமல்லிவிதை..........,,......$\frac{1}{8}$.

இச்சரக்குகளை இரவில் ஊறவைத்து காலையில் தண்ணீரைவடித்துவிட்டு உரலிலிட்டு நன்ருகக்குழைய ஆட்டி அரைத்து, கால்படி ஜலம்விட்டு அனைத்தையும் குழைத்துக்கலக்கி மெல்லிய வஸ்திரத்திருல் பிழிந்துவடிகட்டி வந்ததிரவத்தில் ஒருபலம் வெள்ளைச்சர்க்கரையையும் கலந்து, இரண்டு மூன்று கொதிவரும் வரையில் காய்ச்சி எடுத்துக்கொண்டு இளஞ்சூடா யிருக்கையிலேயே பிணியாளி அதைப் பருகிவிடவேண்டும். தினமொன்றுக்கு இரண்டுமுறைவீதம் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவேண்டும். இரண்டு மூன்று நாட்கள் இதனையுட்கொண்டால் ஔஷதமாக உபயோகமாவதோடு உணவாகவும் இது பிரயோஜனப்படும்.

சிறு குறிஞ்சி.

சிறு குறிஞ்சி அல்லது சிறு குறிஞ்சா என்று வழங்கப்படும் இச்செடி மரம் முதலியவற்றின்மீது தாவிப்படரும் ஒருவகைப் பூண்டு. மத்திய இந்தியாவிலும் தென்இந்தியாவிலும் ஸாதாரணமாக முளைத்துப் பயிராகின்றது. மேற்கு ஸமுத்திரக்கரையின் ஓரங்களிலும் பம்பாய்ப் பிராந்தங்களிலும் அபரிமிதமாக உண்டாகிறது.

இதன் இலைகளில் க்ளுகோஸைட் அல்லது ஜிம்னிமிக் ஆஸிட் என்கிறஸத்துவம் அடங்கியிருப்பதாகத் தற்காலத்திய மேனாட்டுவைத்தியசாஸ்திரிகள் சொல்லுகிருர்கள்; ஜிம்னிமிக் ஆஸிட் (Gymnemic

acid) என்கிற அமலப்பொருள் ஒருவித தாவரதாரகப் பொருளோடு (Inorganicbase) நூற்றுக்கு ஆறுபங்குவீதம் இம்மூலிகையில் சேர்ந்திருப்பதாகப் பரீக்ஷிக்கப்பட்டிருக்கிறது. சர்க்கரையுருவமான அல்லதுசர்க்கரைச்சத்துள்ள வஸ்துக்களுக்கு இது சத்துருத்தன்மை யுடையதாகவும் கருதப்படுகின்றது.

இதன்வேர் பாம்புகடிக்கு மிகச்சிறந்த ஔஷதமென்று நமது பெரியோர்களால் பண்டைக்காலம்முதல் வழங்கப்பட்டுவருகின்றது. இதன்வேரை நிழலிலுலர்த்தி நன்றாகப்பொடிசெய்து பாம்பு கடித்த இடத்தில் தூவித்தேய்ப்பதோடு, இவ்வேரைக் கஷாயமிட்டு உள்ளுக்கும் கொடுப்பதுண்டு. இதன்இலைகளை மென்று தின்னும்போது நாக்கில்சுவையுணரும் சக்திபோய்விடுகின்றது. இதன்கொடி வாதஜ்வரம் ஸந்நிபாதஜ்வரம் ஸந்ததஜ்வரம் ச்வாஸ—காஸம் மலச்சிக்கல் இவ்வியாதிகளால் உபயோகிப்பதற்குச் சிறந்த சரக்கென்றும் தெரிய வருகின்றது. வாதவிகாரங்கள் எனப்படும் தேஹத்தில் உண்டாகும் கடுப்புவலிகளையும், குடைச்சல்களையும், நடுக்கல்களையும் இசிவுமுதலியவற்றையும் நிவ்ருத்தி செய்வதிலும் இச் சரக்கு அதிக உபயோகமானது.

ஒருபலம்வேருக்கு அரைப்படிஜலம்ஊற்றி, எட்டில் ஒருபங்காகச்சுண்டும் வரையில் காய்ச்சியெடுத்து, வடிகட்டி உட்கொள்ளலாம். கொடியையும் இவ்விதமே கஷாயமாகக் காய்ச்சி யுட்கொள்ளலாம். முவில் சிறியஅளவில் ஆரம்பித்து, கிரமமாக உட்கொள்ளும் அளவை அதிகப்படுத்தவேண்டும். சிலருக்கு இச்சரக்கு அளவில் அதிகமானால் வாந்தியை யுண்டுபண்ணும்.

வைத்தியகலாநிதி.

ஸ்ரீ

அகங்காரம்.

(ஓர் கதை.)

ஒரு காலத்தில் தேவதைகளுக்கும், ஸம்பராஸுரனைத் தலைமையாகக்கொண்ட அசுரர்களுக்கும், பெருத்த சண்டை நடந்துகொண்டிருந்தது. அதனுள் பல சமயங்களிலும் அசுரர்களுக்குத் தோல்வியும் மிகுந்த நஷ்டமும் உண்டாகிக்கொண்டிருந்தன. இதனால் ஸம்பராஸுரனுக்கு மிகுந்த கோபமுண்டாகிப் பிறகு வெகுநாள் முயன்று தவமுதலியவைகள் செய்து மாயவித்தைகளையெல்லாம் கற்றுக்கொண்டு அவற்றுள் கைதேர்ந்தவனானான்.

பிறகு சம்பராஸுரன் தனது மாயாவித்தையினால் அஹங்காரமற்ற உருக்கொண்டவர்களாகிய மூன்று துஷ்ட அசுரர்களைச் சிருஷ்டிசெய்தான். அம்மூவர்களும், சாவு வாழ்வுக்குப் பயப்படாதவர்களாகவும் சுகதுக்கங்களைக் கவனியாதவர்களாகவும், வெற்றி தோல்விகளை லக்ஷ்யம் செய்யாதவர்களாகவும் இவற்றின் வித்தியாசங்களையும் கூட அறியாதவர்களாகவும் இருந்தார்கள். ஒவ்வொருவரும் அளவிடக்கூடாத பலமுடையவர்களாகி தேவர்களுக்கு மிகுந்த பயத்தைத்தருபவர்களாகி உலகமெல்லாம் சஞ்சாரம் செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருகாலமும் தேவர்களுடைய ஆஸ்தானத்துக்குச் சென்று அவர்கட்குப் பயத்தையுண்டுபண்ணிக்கொண்டேயிருந்தார்கள். அதனால் தேவர்கள் இவர்களுடைய நினைவாகவே எப்போதும் இருக்கும்படி நேரிட்டதாலும், தங்கள் வாழ்வு நித்யகண்டத்துடன் இருந்தமையாலும், இவ்வளவு கஷ்டங்களுடன் இந்தத் தெய்வச்செல்வத்தைப்பெற்றிருப்பதைக்காட்டிலும், எங்கேனும் ஓடி ஒளிந்துகொள்ளலாமென்று எண்ணி, தங்கள் தங்கள் வாழ்விடங்களை விட்டுவிட்டுக் குகைகளிலும் மற்றும் ஒருவரும் அறியக்கூடாத மறைவிடங்களிலும் ஒளித்துக்கொண்டார்கள்

இப்படி ஒளிந்து வாழும் வாழ்விலும் திருப்திகொள்ளாதவர்களாகித் தேவர்கள், தங்களுக்கு நேர்ந்திருக்கும் கஷ்டத்தை நிவர்த்திபண்ணும்பொருட்டுச் சதுர்முகனைப் பணிந்து கேட்டுக்கொண்டார்கள்.

பிரமனும், அந்தத் தேவர்களைப்பார்த்து, "ஓராயிரம் வருஷங்கட்குப்பிறகு தேவேந்திரன், தனக்கும் சம்பராஸுரனுக்கும் நேரப்போகும் யுத்தத்தில் அசுரர்களைக் கொன்று வெற்றிபெறுவான். அதுவரையில், நான் கீழே குறிக்கிறபடியே நீங்களெல்லோரும் இருந்துவரவேண்டியது. என்னவெனில், நீங்கள் எல்லோருமாக அந்த மாய அசுரர் மூவரிடத்தும் சென்று அம்மூவரோடும் யுத்தஞ்செய்ய வந்திருப்பதாகத் தைரியமாகச் சொல்லுங்கள். அப்படியே அவர்கள் கோபித்துக்கொண்டு யுத்தஞ்செய்ய வந்தவுடன், நேரே நின்று சிறிதுநேரம் யுத்தஞ்செய்துவிட்டுப் பிறகு சாமர்த்தியமாகப் பின்வாங்கி ஓடிவந்துவிடுங்கள். இப்படியே பலமுறையும் அவர்களை ஏமாற்றிக்கொண்டேவாருங்கள். அப்போது அவர்கட்கு அஹங்காரம் மேலிட்டுக்கொண்டேவரும். இப்படி அகங்காரமானது ஒருவனுக்கு மேலிட்டுக்கொண்டுவருமானால், அவன் ஒரு பஞ்சரத்தில் அகப்பட்டுக்கொண்ட பக்ஷிபோலாகி வெகுவிரைவில் மற்றவரால் அவமானப்படுத்தப்பெறுவானாதலால், இம்மூவரும் பிறகு உங்களால் ஸுலபத்தில் வெல்லத்தக்கவர்களாகிவிடுவார்கள். ஏனெனில், இந்த அகங்காரம் விருப்பு வெறுப்புகளின் வித்தியாஸத்தையுண்டுபண்ணி பிறர் சொத்தை எவ்விதமேனும் கிரஹித்துக்கொள்ளவேண்டுமென்னும் பேராசையையதிகப்படுத்தும். இந்தப் பேராசையே ஒருவனுக்குத் தீர்க்கமான சத்துருவாக இருந்து, அவனையழித்துவிடும்" என்று சொன்னார்.

தேவர்களும் பிரமன் சொன்னபடியே கேட்டு நடந்துவந்தார்கள். பலமுறைகளிலும் தேவர்கட்குத் தோல்வியும் அவ்வசுரர்கட்குவெற்றியுமே கிடைத்துவந்தன. இதனால் அவ்வசுரர்களிடம் தங்களை உயர்ந்தவர்கள் பிரபஞ்சத்தில் இல்லை என்னும் எண்ணம் மெல்ல மெல்ல வந்து குடிபேறிவிட்டது. இந்த அகங்காரம்,

இந்த அசுரர்கட்கு இதற்கு முன் இல்லாத குணக்கேடுகளையுண்டு பண்ண ஆரம்பித்தது இதனால் இனி எப்படி நமது செல்வத்தைப் பெருக்கமுடியும்? எப்படி நமது பலங்களைக் கூட்டமுடியும்? எப்படித் தேவர்களை ஒரேசமயத்தில் பின்னிட்டு ஓடாமல்படி அழிக்க முடியும்? என்னும் யோசனை பலமாக உண்டாயிற்று. இந்தப் பேராசை மனத்துள் தோன்ற நாளடைவில் இதனைப்பற்றிய கவலை அதிகரித்து, இதுகாரணமாகத் தேஹபலமும் குறைய நேரிட்டது. அப்போது கர்வமடங்கித் தங்கள் பலத்தில் தங்கட்கே சந்தேஹங் கொண்டு மிகுந்த வருத்தங்கொண்டு தங்களுக்கு அடைக்கலமான சம்பராஸுரனைச் சென்று பணிந்து முறையிட்டார்கள். சம்பரன் இவர்களுடைய முட்டாள்தன்மையையுணர்ந்துகொண்டு, அவர்கட்கு மறுபடியும் தேவர்களை வெற்றிகொள்ள பலங்களைச் சேர்த்துக் கொடுத்தானே தவிர, இன்னும் அதிக பலமுடையவனான ஒருவிரோதி நேர்ந்தால், அவனையும் வெற்றிகொள்ளத் தகுந்தபடியான ஆயுத பலங்களைத்தந்துதவவில்லை. ஆகையினால், சம்பரன் இன்னும் அதிக பலமுடையவர்களைச் சிருஷ்டிபண்ணவேண்டியிருந்தது. அந்தப் படியே செய்யச் சம்பரன் எண்ணங்கொண்டவனாகி, முன்னம் விருப்பு வெறுப்பற்றவரை மாத்திரம் சிருஷ்டி பண்ணினால் போதாது. எல்லாம் வெறுத்த ஆத்மஞானிகளையுண்டுபண்ண வேண்டுமென்று எண்ணி, ஆத்மஞானிகளாகிய மூவரையுண்டுபண்ணினான். அவர்கள் பிரபஞ்சப்பொருள்கள் யாதொன்றிலும் மனஞ் செலுத்தாதவராகி, இந்திரியங்களைத் தமதுவசமாக்கிக்கொண்டு எப்போதும் சந்தோஷசித்தமுடையவர்களாகவேவிளங்கினார்களென்றாலும், தங்களைச் சிருஷ்டித்தவனுடைய விருப்பப்படியே தேவர்களுடன் மாத்திரம் சண்டையிட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு அவ்வண்ணமே பலமுறையும் ஜயங்கிடைத்துவந்தது. தேவர்களும் பிரமன் சொன்னதை மறக்காமல், பின்வாங்குவதும் யுத்தத்துக்கு வருவதுமாகவிருந்தார்கள். ஆத்மஞானிகளான அசுரர்கட்கு, பரமாத்மாவே பின்னிருந்து ஊக்கிவிடுவதுபோல் மனத்தில் உத்ஸாகமே ஊறிக்கொண்டுவந்ததால், தேவர்களுடைய சொத்துக்களிலேனும் தோல்வியிலேனும் எண்ணங்கொள்ளாதவராகி, தேவர்

கொடுத்து நமது வீட்டுவேலையைக் கவனிக்கச்செய்யலாம். இத்த கைய விஷயங்களிற் பொழுது போக்குங்காலம் வீண்காலமென்று கருதுவதற்கு இடமில்லை. புத்திமான்கள் அப்படி நினைக்கமாட்டார்கள். ஆனால், இது சிறிதுநாட்களுக்குத் துன்பந்தருங்காரியம்போலத்தான் தோன்றும் பழகிவருவோமானால், இதுவே அவசியமானதாகவும் அமையும். இந்தயோசனை யாவர்க்கும் தெரிந்ததேயானாலும், அதன் அவசியத்தைப்பற்றி நாமும் நினைவுறுத்துகிறோம். ஆதலின் நம்மவர் யாவரும் இது விஷயத்தில் இன்னும் அதிகமாகக் கவனம்செலுத்துவாராக.

பத்திராதிபர்.

நாணயங்களை யெண்ணிச் சேகரிக்கும் நல்லியந்திரம்.

கொலம்பியச் சர்வகலாசங்கத்தின் மாணவர்களில் ஒருவரான மிஸ்டர். வில்லியம். சி, ராக்கல் கல்கி என்பவர் இத்தகைய இயந்திரமொன்றைக் கண்டுபிடித்துள்ளார். இவ்வியந்திரம் பெரும்பான்மையும் பாங்குகட்கும், பெருத்தவியாபார ஸ்தலங்கட்கும் மிகவும் உபயோகமானதாக இருக்கும். இதனல், எண்ணிக்கைத்தவறும் காலச்செலவும் நீங்குகின்றன.

இது மின்சார சக்தியால் வேகமாகச்செலுத்தப்பட்டுத் தானகவே வேலைசெய்யக்கூடியதொன்று. இதனிடையில் நாணயங்களைக் கொட்டிவைப்பதற்கான இடமிருக்கின்றது. இது அதிவேகமாகத் தத்தித்தத்தி ஓட்டங்கொண்டு தனதுதொழிலை நன்றாகவும் விரைவாகவும் செய்துமுடிக்கிறது. நிறைக்கும் உருவத்துக்கும் தக்கதாகச் சிற்றரைகளின்உதவியைக்கொண்டே இது வேலைசெய்கிறது உருவத்தில்பெருத்தஇரண்டுநாணயங்கட்கு இடையில ஒரு சிறியநாணயம் அகப்பட்டுக்கொள்ளுமேனும், அச்சிறியது இந்த இயந்திரம் அதிவிரைவில கக்கி, மற்றதனுக்கு உரிய அறையில் சேர்ந்துவிடுகின்றது. இப்படிநாணயங்களை ஒதுக்கிக்கொண்டு வரும்போதே அவற்றின் எண்ணிக்கைகளையும் காட்டும்படி அமைக்கப்பட்டிருக்கின்றது.

உதயதாரகை.

சபைநிகழ்ச்சிக் குறிப்புகள்.

கோநகர் ஞானசம்பந்த நற்சபை

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை.

காலயுக்தி ஸ்ரீ ஆனிமீ ௨௰௮௳ வியாழக்கிழமை காலையில் விநாயகப்பெருமானுக்கும் சைவசமயாசாரியார் நால்வருக்கும் வேத விதிப்படி அபிஷேக ஆராதனைகளும், நண்பகலில் பிராமண போஜனமும் சிவனடியார் நகரத்தார் முதலியோர்க்கு விருந்தும் நடைபெற்றன.

பிற்பகல் 4–½ மணிக்கு இவ்வூர் ஸ்ரீ முத்துராமசாஸ்திரியாரவர்கள் ஸ்ரீ மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரத்தை மிகவும் அழகாக உபந்யசித்தார்கள். இரவு 9 மணிக்கு ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் பட்டுக்குடை நிழற்ற ரிஷபவாகனத்தின் மீது இரத்தினாபரண அலங்கிருதராய் ஆரோகணித்த காட்சியை யாவருங்கண்டு தரிசித்து ஆனந்தபரவசரானார்கள்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை.

காலயுக்தி ஸ்ரீ ஆடிமீ ௨௰௯௳ செவ்வாய்க்கிழமை காலையில் வழக்கப்படி ஸ்ரீ விநாயகக்கடவுளுக்கும் சமயாசாரியர் நால்வருக்கும் அபிஷேகாராதனைகளும் நண்பகலில் பிராமண போஜனமும் சிவனடியார் நகரத்தார் முதலியோர்க்கு விருந்தும் நடைபெற்ற பின்னர் இவ்வூர் ஸ்ரீ முத்துராமசாஸ்திரியாரவர்களால் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் புராணப்பிரஸங்கம் நடைபெற்றது. இரவு 9-மணிக்கு ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகள் அழகிய வெள்ளையானை வாகனத்தின் மீது அம்பாரியில திவ்ய புஷ்பாலங்கிருதராய்த் திருவுலா வந்தகாட்சியானது பக்த கோடிகள் மனதைப் பரவசமாக்கிற்று.

சம்பந்தன்.